
கல்கி
KALKI 29.6.2003 ரூ.6.00
“அப்பாவுக்கு
ஈடு யாரும்
கிடையாது!”
-ரஜினி மகள் பேட்டி

உள்ளே







கல்கி
29.6.2003

உங்க ஊரிலும்
''அடடா! அப்படியா?''
என்கிற மாதிரி ஏதாவது
சுவாரசியமான விஷயம்
இருக்குமே...
'எங்க ஊரு சங்கதி'
என்று உறைமீது குறிப்பிட்டு
புகைப்படத்துடன் சுவையா
எழுதுங்க. பரிசுகள்
காத்திருக்கின்றன.
(ஆர்)



• உச்சியில் ஒரு குக்

மரக்கிளையில் ஒரு வீடு!

'பறவைக்குக் கூடு உண்டு. இங்கு வாழும் மனிதர்க்கு வீடு உண்டா?'' என்கிறது மு. மேத்தாவின் ஒரு புதுக்கவிதை.


சாலையோர வீட்டை இழந்த மனிதர் ஒருவர், கடந்த ஒரு வருடமாய மரக்கிளையில் கீற்றுக் குடிசை வீடு கட்டி அதில் வசித்து வருகிறார்.

கரூர்-லாலாப்பேட்டை நெடுஞ்சாலையின் ஓர் ஓரமாய் ஓங்கி வளர்ந்து நிற்கிறது அந்தப் புளிய மரம். இருட்டினால் மரக்கிளைக் கூடுகளில் வந்தடையும் பறவைகள் போல, முதியவர் ஒருவர் தமது நான்கு வயதுப் பேத்தியுடன் மரக்கிளை வீட்டில் தங்கி இரவு நேரத்தைக் கழிக்கின்றார். விடிந்ததும் மரக்கிளை வீட்டை விட்டிறங்கி கீழே வந்து விடுகின்றார்.

முப்பத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக இதே புளிய மரத்தினடியில் ஒரு மண் சுவர் வீட்டைச் சொற்ப விலைக்கு வாங்கி குடியேறியவர் ஏ.எம். பழனியப்பன். இப்பொழுது அவருக்கு வயது ஐம்பத்தைந்து. பிள்ளைகள் அனைவரும் பிழைப்புத் தேடி கர்நாடகாவுக்குச் சென்று கூலி வேலை செய்து குடும்பம் நடத்தி வர, இங்கு தங்கிவிட்ட பழனியப்பன் மட்டும் மனைவி புஷ்பம், மகன் வயிற்றுப் பேத்தி தமிழ்ச் செல்வியுடன் மரக்கிளை வீட்டில் வசிக்கிறார்.

சமீபத்தில் நெடுஞ்சாலைத் துறையினர் ஆக்கிரமிப்புகளை அகற்ற வந்தபோது, பழனியப்பனது வீடும் இடித்துத் தரை மட்டமாக்கப்பட்டது. இதே வரிசையில் வீடு இழந்த மற்ற அனைவரும் வேறு இடங்களில் வீடு பார்த்துக் குடி போய் விட்டனர். பழனியப்பனுக்கு மட்டும் அந்த இடத்தை விட்டுச் செல்ல மனம் வரவில்லை. மரக்கிளை வீட்டை உருவாக்கிவிட்டார்.

"விவசாயக் கூலி நான். இப்ப எல்லாம் சரியா வேலையும் இல்லே. வறட்சி நிவாரணமா மாசம் முப்பது கிலோ அரிசி, ரேஷன்லே இலவசமா ஒரு நாலு மாசமா வாங்கிட்டு வர்றோம். இப்போ அரை வயித்துக் கஞ்சி அதுலதாங்க நடக்குது. முப்பது வருசமா இருந்த இடத்தைவிட்டுப் போக மனசில்லாமத்தான் மரத்து



• பழனியப்பன் குடும்பத்தினர்

மேலே குடிசை போட்டு வாழ்ந்து வர்றோம். மரத்து மேலே மனுசன் குடியிருக்கிறது சட்டப்படி குற்றம்னு சொல்றாங்க. எனக்கு அதெல்லாம் தெரியாதுங்க. எங்களுக்குக் குடிசை போட்டுக்க இந்த அரசாங்கம் எங்கனயாவது ஒரு இடத்தை மட்டும் குடுத்தாப் போதுங்க!" என்கிறார் ஏ.எம்.பழனியப்பன்.

கட்டுரை, படங்கள் : திரு

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

பெங்களூர் மல்லேஸ்வரம் மார்க்கெட்டில் நாம் வெண்டையையும் கத்திரியையும் பொறுக்கிப் பொறுக்கி பையில் அடைத்துக் கொண்டிருந்தபோது நம் பக்கத்தில் அம்சமாக ஓர் இளம் பெண். பேரம் பேசி, காய்கறி வாங்கிக் கொண்டிருந்தார்.

கறுப்பு நிற சல்வார் கமீஸ், பாந்தினி துப்பட்டா, தேவ்தாஸ் ஸ்டைலில் துப்பட்டாவில் சாவிக் கொத்து, தளர்ந்த தலைமுடி... அந்தக் கூரான நாசி... ரசித்த மறு வேளை... நம் மூளையில் பல்ப்! ஒரு வேளை 'அவருடைய' பெண்ணாக இருக்குமோ?? "சேச்சே அவராக இருக்காது. 'ம்ஹூம்' என்றால் மார்க்கெட்டே அவர்கள் வீடு தேடி ஓடாதோ?" என்று நடையைக் கட்டினோம்.



சில நிமிடங்களில் ஃபுட் வேர்ல்டில் அதே பெண். அரிசி, பருப்பு, புளி... என பொறுப்பாக வாங்கி டிராலியில் அடுக்கிக் கொண்டிருந்தார். அடக்க முடியாமல் அவரிடம் ' நீங்க ....மகள் தானே'? என்றபோது வெட்கத்துடனும் பெருமையுடனும் ஒப்புக் கொண்டார்.

யூ ஆர் ரைட்! நாம் சந்தித்தது சூப்பர் ஸ்டார் ரஜினியின் செல்ல மகள் ஐஸ்வர்யாவை! நாம் மல்லுக்கட்டி பேரம் பேசி வாங்கிய கத்திரி வெண்டையை உதாசீனப்படுத்திவிட்டு, 'உங்களிடம் பேசணுமே' என்று பேனா பிடித்துத் தயாரானால், " வீட்டுக்குப் போய் சமைக்கணும், நாளைக்கு 'காஃபி டே'யில் பார்க்கலாமே" என்றார் புன்னகையுடன்.



"அப்பா, அம்மா பார்த்துப் பார்த்து எல்லாமே செய்யும்போது எனக்கென்னங்க குறை..."

மறு நாள் 'காஃபி டே'க்கு வாக்குத் தவறாமல் வந்திறங்கினார் ஐஸ்வர்யா. வெள்ளையில் சிவப்பு பார்டர் போட்ட பாந்தினி புடைவை. அழகான சிவப்பு ரவிக்கை. அளவான மேக்கப். மிகப் பொறுமையாக, தெளிவாக, பதில் சொல்ல ஆரம்பித்தார்.

ஐஸ்வர்யான்னு பெயர் வைத்தது யார்? இந்தப் பெயர் வைத்தாலே அழகும் அறிவும் வந்துடுமா?

(ஐஸ்க்கே ஐஸா? என்ற தோரணையில் இலேசாக நாணம்)

எனக்கு அப்பா அம்மா ரெண்டு பேரும் வைச்ச பேரு இது. எனக்கு இன்னொரு பெயரும் உண்டு. அது இன்று வரை வெளியில் யாருக்குமே தெரியாது. என் அப்பா எனக்கு ஜீஜாபாய்' என்று ஆசையா பெயர் சூட்டினார். சத்ரபதி சிவாஜியின் தாய். இன்றும் வீட்டில் செல்லமாக ஜீஜீ'

“அப்பாவுக்கு ஈடு யாரும் கிடையாது!”



–ரஜினி மகள் பேட்டி

என்று கூப்பிடுவார் அப்பா.

அம்மாவிடம் பிடித்தது?

“அவருடைய பொறுமை. எங்க மூணு பேரையும் சமாளிக்கறாங்களே! அப்புறம், அவங்களுடைய கலர். அதைப் பார்த்து நானே பொறாமைப்படுவேன்.”

அப்பா எப்படி?

“அட்வைஸே பண்ணமாட்டார். ஃப்ரெண்ட்ஸ் மாதிரியான உறவு. கண்டிஷனே போட மாட்டார்.”

எப்போதேனும் அப்பா உங்களிடம் கோபப்பட்டதுண்டா?

“ஒரே ஒரு தடவை. எங்க வீட்டுக்கு யாரோ வந்தார்கள். எனக்கு அப்ப சின்ன வயசு. யார்னு ஞாபகமில்லை. ‘வா’ன்னு சொல்லிவிட்டேன். செம திட்டு அப்பாவிடமிருந்து. அதிலிருந்து சின்னக் குழந்தையாக இருந்தால்கூட ‘வாங்க’ என்று தான் அழைப்பேன். எல்லார்கிட்டேயும் மரியாதையா பழகணும்ங்கிறதுலே அப்பா ரொம்ப கண்டிப்பா இருப்பார்.”

அப்பாவின் ‘ஆன்மிகப் பற்று’ பற்றி உலகமறியும். நீங்கள் எப்படி?

காலையில் குளித்து பூஜையறைக்குப் போய் கண்டிப்பாக ஸ்லோகம் சொல்ல வேண்டும். செய்யவில்லையென்றால் ‘நோ ப்ரேக்ஃபஸ்ட்!’ ஒவ்வொரு சனிக்கிழமையும் விரதம் இருப்பேன். மார்கழி மாதம் பூரா நோன்பிருந்து திருப்பாவை சொல்வேன். எங்கள் வீட்டில் எல்லா மதக் கடவுள்களுக்கும் பூஜை செய்வோம். கிறிஸ்துமஸையும் தடபுடலா கொண்டாடுவோம் தீபாவளி போலவே...

சென்னையில் அடிக்கடி போகும் கோவில்?

ஆழ்வார்பேட்டை ஆஞ்சநேயர் பக்தை நான். சிரத்தையாக ‘ஹனுமான் சாலீஸா’ சொல்லுவேன்.



உடைகள் எங்கிருந்து? உங்களுடைய சாய்ஸ்?

புடைவை தான் அதிகம் கட்டுவேன். அப்பா - அம்மாக்கும் அது தான் பிடிக்கும். 'மன்மந்திர்'ல வாங்குவேன். கொஞ்சம் விலை அதிகம். ஆனால் அழகா இருக்கும். தீபா வளின்னா 'நல்லி'யிலிருந்து தான் புடைவை வாங்குவோம். சென்டிமென்டாக வைத்திருக் கிறோம். பயங்கரக் கூட்டம் அலைமோதும். நள்ளிரவில் கடை மூடிய பிறகு, பின் பக்கக் கதவு வழியே போய் வாங்குவோம்."

சரி, காய்கறி வாங்கினீங்களே; நிஜமாகவே சமைப்பதுண்டா?

என்னங்க இப்படிக் கேட்டுட்டீங்க? நார்த் இண்டியன் சவுத் இண்டியன் சமையல்னு சும்மா வெளுத்து வாங்கிடுவேன். வெஜிடபிள் பிரியாணி பண்ணுவதில் கில்லாடியாக்கும். அப்பாக்கு மாத்திரம் என்றேனும் சிக்கன் செஞ்சு தருவேன். நாங்க மூணு பேரும் சாப்பிடமாட்டோம்.

டயட் இருப்பதுண்டா?

ஜிம் ரெகுலரா போவேன். ஏரோபிக்ஸ் பண்ணுவேன். கவனமா சாப்பிட்டால் வெயிட் போடாது. ஒரு நாளைக்கு நாலு லிட்டர் தண்ணீர் குடிப்பேன்.

கைவசம் வேறென்ன கலைகள்?

பரதநாட்டியம் ஆடுவேன். முறையா கர்நாடக சங்கீதம் கத்துக்கறேன். ஜாஸ், சால்ஸா போன்ற வெஸ்டர்ன் டான்ஸ்களும் அத்துப்படி.

பாப், டிஸ்கோ போனதுண்டா?

இன்று வரை போனதில்லை. அவசியமு மில்லை. தேவையானால் அப்பாவே அழைச்சிட்டுப் போவார்.

பெங்களூரில் பிடித்த இடம்?

கமர்ஷியல் ஸ்ட்ரீட், பிரிகேட் ரோடு ரொம்பப் பிடிக்கும். சென்னையில் ஃப்ரீயா ஊர் சுற்ற முடிவதில்லை. இங்கே எனக்கு ஏகப்பட்ட ஃப்ரெண்ட்ஸ். ஆறு க்ளாஸ் வரை க்ளூனி கான்வென்டில் தான் படித்தேன். தாத்தா, பாட்டி வீட்டிலிருந்தேன். கன்னடம் நன்றாகப் பேசத் தெரியும்.

சினி உலகில் உங்களுடைய நண்பர்கள் யார்?

ப்ரீத்தா, காயத்ரி ரகுராம் என் னுடைய தோழிகள். ஈஷாவும் (ஹேமமாலினி மகள்) நானும் ரொம்ப தோஸ்த். சத்ருகன் சின்ஹா அங்கிளின் மகன்களான லவ் - குஷ் (இரட்டையர்கள்) கூடவும் நட்புண்டு. மும்பை போகும்போது அவங்க வீட்டு விருந்துக்கு கண்டிப்பா போவோம்.

யாருடைய நடிப்பு பிடிக்கும்?

அஃப்கோர்ஸ் அப்பாதான். அவர் நடித்த படங்களில் 'தில்லுமுல்லு', 'அண்ணாமலை' எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்கும்.

அப்பாவுக்குப் பொருத்தமான ஹீரோயின்?

குஷ்பு அக்கா தான் அப்பாவுக்கு சரியான ஜோடி!

யாருடைய டான்ஸ் பிரமாதம்?

விஜய் அண்ணா டான்ஸ் பிடிக்கும். சிம்புவின் ஸ்டைலும் நல்லாயிருக்கு. நடிகை களில் சிம்ரன், ரம்பா நன்னா ஆடறாங்க.

அப்பாவுக்குப் பிறகு நடிப்பில் பரபரப்பில் வேறொரு நடிகரின் பெயர் இருக் கிறதே. கருத்துக் கணிப்பு போடறாங்களே. அதைப் பற்றி என்ன நினைக்கறீங்க?

நானென்ன சொல்ல? ஆர்டிஸ்டுகள் பலர் வரலாம். இன்று வந்து நாளை மறைந்து விடுவார்கள். ஆனால் லெஜென்ட்ஸ் தோன்றுவது ஒரே ஒரு முறை தான். ரஜினி அப்படிப்பட்ட மாமனிதர். ரஜினி அப்பா வுக்குப் போட்டியே கிடையாது.

நீங்கள் முணுமுணுக்கும் பாடல்?

அன்பே சிவத்தில் வரும் 'பூவாசம்' என்ற பாடலை பாடிக் கொண்டேயிருப்பேன். பின்னணிப் பாடகியாக வேண்டுமென்ற ஆசை உண்டு. சித்ரா, சுசீலா அம்மா குரல் பிடிக்கும். ஆண்களில் எஸ்.பி.பி. ஸார்னா ரொம்ப இஷ்டம். அப்பாவுக்கு ஏகமா பாடியிருக்கிறாரே.

அப்படி பாடகியானால் யாருக்குக் குரல் கொடுப்பீர்கள்?

சிம்ரனுக்கு ஒரு மசாலா பாட்டு பாட வேண்டும். அந்தப் பாட்டுக்கு அவர் ரகளையாக டான்ஸ் ஆட வேண்டும்.

பத்திரிகைகள் படிக்கும் வழக்கம் உண்டா?

வீட்டிற்கு எல்லா பத்திரிகைகளும் வரும். படிப்போம். நான் விரும்பிப் படிப்பது 'காஸ்மோபாலிடன்'! ஸ்கூப் நியூஸ்ங்கற பெயர்ல ஒருவரின் பர்ஸனல் விஷயங்களை பத்திரிகையில் அலசுவது, ஒருவரை நோகடிக்கிறாப்போல செய்தி போடுவது.. இதை வெறுக்கிறேன்.

எதிர் காலத் திட்டம்?

சட்டம் படித்திருக்கிறேன். மேற்படிப்பிற்காக அடுத்த மாதம் ஆஸ்திரேலியா போகிறேன். கார்பரேட் லா படிக்கணும். அப்படியே திரைக்கதை கோர்ஸும் படிக்கலாம்னு இருக்கேன். கைவசம் ஒரு திரைக்கதை தயாரா வச்சிருக்கேன். இருந்தாலும் நுணுக்கங்களைத் தெரிஞ்சுக்கணும். ஒரு சினிமாவில் ஸ்டோரி லைன் வீக்காக இருக்கலாம். ஆனா திரைக்கதை வலுவா இருந்தா, சினிமா வெற்றி நடைபோடும். என்னை வெகுவாகக் கவர்ந்த படம் 'தூள்'. திரைக்கதை ரொம்ப ஸ்ட்ராங்.

அப்பா கடைப்பிடிக்கும் ஒரு சென்டிமென்ட்?

டப்பிங்கின் போது என்னையும் சௌந்தர்யாவையும் கண்டிப்பா முத நாளைக்கு கூட்டிட்டு போவார்.

நிறைவேறாத ஆசைன்னு...?

அப்படி எதுவுமே இல்லீங்க. அப்பா அம்மா பாத்து பாத்து எல்லாமே செய்யும் போது எனக்கென்னங்க குறை?

திருமணம் எப்பொழுது?

அதுக்கென்னங்க அவசரம்? படிக்கணும். நாலு வருடம் கழித்து யோசிக்கணும். நான் என்னிக்குமே அப்பா பொண்ணுதான். அவர் சொல்லுவதுதான் எனக்கு வேத வாக்கு.

வாழ்த்துகள் ஜீஜாபாய்!

- லதா சேகர்

அட்டை, படங்கள் :

ஜி.கே.வேல்



''உங்க கட்சிக்காக 'மாடு' மாதிரி உழைச்சீங்களே. கட்சிப் பதவி ஏதாச்சும் கொடுத்தாங்களா...?''

''ஒரு 'புண்ணாக்கும்' தரலை...''

- நாமக்கல் பாலு, நாமக்கல்

''பேப்பர படிச்சதும் பயப்படுறீங்களே ஏன்?''

''கட்சியில் ஒற்றுமை வரும்வரை வாக்கிங் போவதை தவிர்க்கவும்னு என் ராசி பலன்ல போட்டிருக்கு!''

- அம்பை தேவா




''பிளாட் போட்ட இடத்துக்குப் பக்கத்துல ரெண்டு தியேட்டருங்க இருந்தது தப்பாயிட்டுது''

''ஏன்?''

''ஆள் நடமாட்டமில்லாத இடமுன்னு யாரும் பிளாட் வாங்க மாட்டேங்கறாங்க!''

- வி.சகிதா முருகன்





ஏழை மாணவ மணிகளுக்கு உதவி: ரூ.2,00,000

படிப்பில் சிறந்து விளங்குகிற ஆனால் பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவ மாணவியருக்கு மட்டுமே இந்த உதவி. நடப்புக் கல்வி ஆண்டுக்கு (2003-2004) உதவித் தொகைகள் பின்வருமாறு விநியோகமாகும் :

- ஒருவருக்கு ரூ. 2,500 வீதம் எட்டு பட்ட மேற்படிப்பு அல்லது ஆராய்ச்சி மாணவர்களுக்கு ரூ. 20,000/-
- ஒருவருக்கு ரூ. 2,000 வீதம் இசை அல்லது நாட்டியம் பயிலும் நான்கு மாணவர்களுக்கு ரூ. 8,000/-
- ஒருவருக்கு ரூ. 1,500 வீதம் 50 கல்லூரி மாணவர்களுக்கு ரூ. 75,000/-
- ஒருவருக்கு ரூ.1000 வீதம் 70 மேல் நிலைப் பள்ளி அல்லது பாலிடெக்னிக் மாணவர்களுக்கு ரூ. 70,000/-
- ஒருவருக்கு ரூ. 750 வீதம் 36 உயர் நிலைப் பள்ளி மாணவர்களுக்கு ரூ. 27,000/-

இவற்றுள் அமரர் கல்கி படித்த மூன்று பள்ளிக் கூடங்களில் மூன்று மாணவர்களுக்கு மூன்று உதவித் தொகைகள் ஒதுக்கப்படுகின்றன. மீதமுள்ள உதவித் தொகைகளைப் பெற மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

- விண்ணப்பங்களை மாணவர்கள் தங்கள் கைப்பட எழுத வேண்டும். தட்டச்சு, கம்ப்யூட்டர் கடிதங்கள் நிராகரிக்கப்படும். பார்வையற்ற மாணவர்களுக்கு மட்டும் இதில் விதிவிலக்கு உண்டு. பிறர் எழுதித் தர கைநாட்டு பதிக்கலாம்.
- தபால் மூலம் மட்டுமே மனுக்களை

அமரர் கல்கி நினைவு அறக்கட்டளை



அனுப்பலாம். கூரியர் கூடாது.

- அரசு அங்கீகாரம் பெற்ற ஒரு கல்வி நிலையத்தில் சேர்ந்து படிக்க அனுமதி பெற்றிருக்க வேண்டும். தாற்காலிக அனுமதி செல்லுபடியாகாது.
- படிப்பில் சிறந்தவர்களாக விளங்கி, பெற்றோர் உதவியுடன் மட்டுமே கல்வியைத் தொடர முடியாத நிலையில், பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களாக இருக்க வேண்டும்.
- மேற்கூறிய அனைத்தையும் உறுதிப் படுத்த கல்வி நிலையத்தின் முதல்வருடைய சான்றிதழை இணைக்கவும்.
- சென்ற கல்வி ஆண்டின் இறுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண் நகலை முதல்வருடைய கையொப்பத்துடன் அனுப்பவும்.
- ஊனமுற்றவர்கள் மேற்படி சான்றிதழ்கள் தவிர, தங்கள் ஊனம் பற்றிய விவரத்தையும் முதல்வருடைய சான்றிதழாக மட்டுமே அனுப்புதல் வேண்டும். இத்தகையோருக்கு முன்னுரிமை உண்டு.

நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தேவைப்படாத சான்றிதழ்களை அனுப்புதல் அம்மாணவருக்குப் பின்னடைவாக விளங்கும்.

உதவித் தொகை பெறத் தகுதியுடைய மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதில் அறங்காவலர்களின் முடிவே இறுதியானது.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு விவரம் தெரிவிக்கப்படும். மற்றபடி கடிதப் போக்குவரத்து கிடையாது. சான்றிதழ்களைத் திருப்பி அனுப்புவதற்கில்லை.

விண்ணப்பங்கள் வந்து சேரக் கடைசி தேதி: ஜூலை 31, 2003

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

நிர்வாக அறங்காவலர்,
கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை,
புது எண் 14, பழைய எண் 35, நான்காவது பிரதான சாலை,
கஸ்தூர்பா நகர், அடையாறு,
சென்னை - 600 020.

கை வைக்க வேண்டாம்!



✉ அரங்கன் அரைப்பட்டினி கிடப்பது வேதனை என்றால் - அவன் ஆலயம் பாத்ரூமாகவும், சைக்கிள் ஸ்டாண்டாகவும் மாறி அசிங்கமடைவது வேதனையின் உச்சக்கட்டம்.
ஆத்தூர், கு. பிரசாத்.

✉ தலையங்கம் வாயிலாக தாங்கள் சோனியாவுக்குச் சொல்லியிருந்த யோசனைகள் காங்கிரசுக்குக் கௌரவத்தை மட்டுமல்ல, பலத்தையும் சேர்க்குமென்பதில் ஐயமில்லை!
கும்பகோணம், எஸ்.கே. மூர்த்தி.

✉ 'ஒரு மணமகள் டைரி' கட்டுரை வெளி வந்த இதழின் இலவச இணைப்பில் ஆச்சார்யாளின் 'வைலக் நிபந்தனை' என்ற தலைப்பிலான அருள் வாக்கு! சரியான பொருத்தம்!
சென்னை - 91, பாலு. சூர்யா

✉ சின்னத் திரை - 'காதல் ஜோடி' தம்பதிகளைப் பேச வைத்து, மாறுதலாக காதல் லைவ் அரட்டை அரங்கத்தைத் தந்தமைக்குப் பாராட்டு.
ஈரோடு - 1, ரேவதி ப்ரியன்.

✉ 'சபாஷ், சோனியா!' தலையங்கம் படித்தேன். காங்கிரஸ் கட்சியில், சோனியாவின் இன்றைய செயல்பாடுகள் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன. மாநிலங்களில் கட்சித் தலைவர் பதவியைப் பிரித்து, இரண்டு, மூன்று நபர்களுக்கு அளிப்பதால், நிர்வாகப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. ஒரு பண்பட்ட தலைவர், அவராகவே உருவாகி வளர வேண்டும். அவ்வாறின்றி நியமனம் செய்யப்படும் தலைவர்களால் கட்சியில் ஒற்றுமை ஏற்பட வாய்ப்பில்லை.
மதுரை - 7, இரா. சக்கரபாணி.

✉ இடப்பற்றாக்குறையை மறைக்க வித்யா மேல் பழியைப் போட்டு பொருளடக்கத்தைத் தவிர்த்திருக்கும் சாமர்த்தியசாலி கல்கியே, இதுபோல் எங்கள் வட்டமேஜையில் மட்டும் கைவைத்து விட வேண்டாம்!
சென்னை - 14, அய்யாறு வாசுதேவன்.


✉ எப்போதும் அழுதபடியே காட்சியளிக்கும் டீ.வி. சீரியல் நடிக, நடிகைகளை (சீரியலில்தான்!) சிரித்தபடியே அட்டையில் வெளியிட்டு அசத்தி விட்டீரே!
திருவாரூர் - 1, எஸ். பாலசந்தர்.

✉ 'வனவாசம்' கதையல்ல (நிகழ்கால) நிஜம்!
திருவாரூர், ஆர். ராமசுப்ரமணியன்.

✉ 'சொட்டுக்குக் கிடைத்த லட்டு' போன்ற கிசு-கிசு, சினிமா துணுக்குகள், கல்கியில் தொடர்ந்தால், உங்களுக்கு நிச்சயமாகக் கிடைக்கப் போகுது வாசகர்களின் திட்டு!
சென்னை - 5, கே. கணேசன்.

✉ சோனியா ஃபாஸ்ட்புட்ஸ் கார்ட்டூனில் ஜெவும் சோனியா ஃபாஸ்ட்புட்ஸ் வாசலில் நிற்பது போல் வரைந்திருக்கிறீர்கள். சோனியா வாசலில் ஜெ. ஒரு போதும் நிற்க மாட்டார்.
திருப்பூர்-4, பா.சு. மணிவண்ணன்.

✉ நந்திகோயில் தெருவில் பல புத்தக நிலையங்கள் உள்ளன. ஆனால் அகஸ்தியர் புத்தக நிலையத்தின் வரவேற்பும் பதில் சொல்லும் பாங்கும் அலாதிதான். அந்த இனிய அனுபவத்தை அகஸ்தியரின் வாடிக்கையாளர்கள் நிச்சயம் உணர்ந்தே இருப்பார்கள்.
திருச்சிராப்பள்ளி, தமிழினியன்.



சமுதாயக் கொடுமை - I

பள்ளி மாணவர்களை ஆசிரியர்கள் அடித்து தண்டிக்கலாம் என்று சட்டமே அனுமதி அளிக்கிறது. பொய் பேசினாலோ, ஆபாச மொழிகளைப் பயன்படுத்தினாலோ, பணிய மறுத்தாலோ ஆறு முறை கையில் அடிக்கலாம் – அடிகளைத் தலைமை ஆசிரியரே வழங்க வேண்டும்; அல்லது தலைமையாசிரியரின் மேற்பார்வை யில் இத்தண்டனை வழங்கப்பட வேண்டும்!

பிரிட்டிஷ் காலத்தில் பிறப்பிக்கப்பட்ட இந்தச் சட்டம் இன்றளவும் நமது பள்ளி மாணவர்களை அடிப்பதற்கு ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு வழங்கி வருகிறது! குரூரமான இந்தக் காட்டுமிராண்டிச் சட்டத்தைத் திருத்த ஒரு நிபுணர் குழு நியமிக்கப்பட்டு இயங்கி வரும் வேளையிலேயே, மிகப் பெரிய இழப்புகள் நேர்ந்துள்ளன.

சமீபத்திய கொடுமை, மொகப்பேர் வேலம்மாள் பள்ளி மாணவன் ராமு அபினவ்வின் தற்கொலை. தனது பிறந்த நாளன்று கூடுதல் டியூஷன் வகுப்புக்கு வராததற்காக, பதினாறு வயதுச் சிறுவனை உடலும் மனமும் ரணமாகும் வகையில் அடித்து நொறுக்கியிருக்கிறார் ஆசிரியர். பள்ளியின் தரப்பில் மறுப்பு பலமாயிருந்தாலும், மாணவன் மரணத்துக்கு முன் எழுதி வைத்த 'கடிதம்', ''இந்தப் பள்ளிக்கூடம் பிடிக்காததால்'' தற்கொலை செய்து கொண்டதாகவே கூறுகிறது. அவன் குடும்பத்தினருக்குப்




கல்கி



2003 ஜூன் 29
சுபானு ஆனி 15
மலர் : 61
இதழ் : 48

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



பெருந்துயரம்; பேரிழப்பு. கல்வித் துறைக்கு இச் சம்பவம் ஒரு கரும் புள்ளி எனில், சமுதாயத்துக்குச் சாட்டையடி!


மாணவர் உலகம் மாறியிருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ளாவிட்டால் விபரீதங்கள் நிகழும் என்பது இச்சம்பவம் நமக்கு உணர்த்தும் முதல் எச்சரிக்கை; ஆசிரியர்கள், இளம் தளிர்கள் போன்ற மாணவர்களைக் கையாளத் தகுதியற்றவர்களாக விளங்குகிறார்கள் என்பது இரண்டாவது எச்சரிக்கை.

பெற்றோரும் ஆசிரியர்களும் தலைமுறை இடைவெளியை வென்று, பிள்ளைகளைச் சமபாவத்துடன் தோழர்களாக நடத்தும் முறையே ஆரோக்கியமானது; உலகெங்கும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இதற்கு விரோதமாக, உயர் பீடத்தில் அமர்ந்து, மாணவர்களைச் சிறுமைப்படுத்தும் வகையில் பேசுவதும், காட்டுமிராண்டித்தனமாக அவர்கள் உடலையும் மனத்தையும் நோகடிப்பதும் மன்னிக்க முடியாத குற்றங்கள். இத்தகைய நடவடிக்கைகளால் மாணவர்கள் தாழ்வு மனப்பான்மை வரப்பெற்று ஒடுங்கிப் போவார்கள்; அல்லது வன்முறையுணர்வு தூண்டப்பட்டு சமூக விரோதிகளாக மாறுவார்கள்.

வல்லமை படைத்த ஒருவர், தற்காப்பற்ற எளியவரைத் துன்புறுத்தலாம் என்கிற தவறான வழிகாட்டலும் இத்தகைய சம்பவங்களால் பதிவாகிறது.

இப்படிப்பட்ட வழி காட்டலில், வன்முறைச் சூழலில் வளரும் மாணவர்கள், நாளைய சமுதாயத்தை எப்படி நிர்மாணிப்பார்கள் என்று எண்ணிப் பார்க்கவே கதி கலங்குகிறது.

பண்பட்ட ஆசிரியர்கள்; பரீட்சையை மட்டும் குறிக்கோளாகக் கொள்ளாத கல்வி முறை; சுயச் சார்புடன் நேர்மையுடன் பிழைப்பு நடத்த வழிகாட்டி, முழுமையான மனிதர்களை உருவாக்கும் பாடத் திட்டம் – இவையன்றி எந்தப் புரட்சியும் நம் சமுதாயத்தை மேம்படுத்த முடியாது; எந்தத் திட்டமும் நாட்டின் எதிர்காலத்தை வளமானதாக்க முடியாது.



சமுதாயக் கொடுமை - II

வீதியில் சிறுநீர் கழித்தால் சிறை வாசம் / அபராதம் என்பது தமிழகத்தில் சட்டம். இந்தச் சட்டத்தின் கீழ் கைதான நூற்றுக் கணக்கானோர், தங்களுக்கு உரிய தண்டனைக் காலமான முப்பது நாட்கள் கடந்த பின்னரும் சிறையில் இருக்கிறார்கள்! காரணம், இவர்களைக் கைது செய்த காவல்துறையினர் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யவுமில்லை; இவர்களுக்கு ஜாமீன் கொடுத்து வெளிவர வசதியும் இல்லை!

அமல்படுத்தப்படும் சட்டம் அர்த்தமற்றதாக அமையும்போது, இப்படிப்பட்ட அபத்த விளைவுகளையே ஏற்படுத்தும்.

நமது நாட்டில், வீடற்ற ஏழைகள் எண்ணற்றோர் உள்ளனர். வானமே கூரையாக வாழும் இவர்கள், தங்கள் வாழ்நாளில் கழிப்பறைகளைக் கண்டிருக்க மாட்டார்கள்.

அரசு ஏற்படுத்தும் பொதுக் கழிப்பறை வசதிகள் மிக மோசமான பராமரிப்பு காரணமாக அணுக முடியாதவையாகவே பெரும்பாலும் இருக்கின்றன. மேலும், அன்றாடங் காய்ச்சிகள் காசு கொடுத்து அவற்றை உபயோகிப்பது எப்படி...? கழிப்பறைகளைச் சுத்தமாக வைத்துக் கொள்வது என்ற விஷயமே நமது பாமர மக்களுக்கு இந்த இருபத்தோராம் நூற்றாண்டிலும் தெரியாது. அதற்குரிய கல்வி அறிவோ சுகாதார அறிவோ அவர்களுக்கு இல்லை. போதாக் குறைக்கு, தண்ணீர்ப் பஞ்சம் வேறு.

இந்தச் சமுதாயப் பிரச்னையின் வேரைக் களையாமல், நுனிக் கிளையை வெட்டும் வகையில் சட்டம் செயல்படுவது நகைப்புக்கிடமான நிலையைத்தான் உருவாக்கியிருக்கிறது.

இச் சட்டத்தின் கீழ் கைதானவர்கள் நிலையோ பரிதாபகரமானது. அப்பட்டமான மனித உரிமை மீறலும் கூட. ○

ஆதலையூர் சூரியகுமார்

வறட்சி

பச்சைப் புல்வெளி தேடிக்களைத்த
ஆநிரைக் கூட்டம்
ஒதுங்குகிறது ஒட்டிய வயிறுடன்..

முகவரியற்ற சருகுகள்
சுற்றியலைகின்றன
சுழற்காற்றில்...

பாலைவன நதியில்
பழைய படகொன்றின்
ஞாபகம்...

தன் தலைமுறைக்
கதை சொல்லிகளின்
ஏக்கப் பெருஞ் சுவாசத்தில்
தெறிக்கிறது
தீண்ட முடியாத அனல்...

கண்ணீர் வடிக்கும்
முதலைகளின்
மனசெங்கும் வெடிப்புகள்
பாளம் பாளமாய்...
செதில்களென.





புக் பேங்க்

மாண்புமிகு கம்சன் - வாசன்.

வார்த்தை ஜாலங்களோ, வர்ணனைப் பின்னல்களோ இல்லாமல் நேரடியான கிரிக்கெட் வர்ணனை போன்ற நடையில் கதை. ஏற்கெனவே கல்கியில் தொடராகப் படித்ததுதான் என்றாலும், விஞ்ஞானமும், அரசியலும், துப்பறியும் சுவாரஸ்யமும் பின்னிப்பின்னி கீழே வைக்கவிடாமல் மீண்டும் படித்து முடிக்க வைக்கும் நாவல்.

விலை ரூ.45/-.

மனத்தில் நிற்கும் மனிதர்கள் - பாகம் 3 - எம்.சரவணன்.

திரையுலகம் என்பதே தனியுலகம். அதில் ஏ.வி.எம். ஒரு பல்கலைக் கழகம். காபி, டீ கொண்டு வரும் பையன்கள் முதல் கிராண்ட் சீனியர்கள், சீனியர்கள், பிறகு ஜூனியர்கள் என்று உள்ளத்தில் இடம் பெற்றவர்களைப் பற்றி உணர்ச்சிகரமாய்க் கூறி, இன்னும் அந்தப் பல்கலைக் கழகம் நிமிர்ந்து நிற்கக் காரணம், வழிவழியாக வரும் மனித நேயம்தான் என்று உணர்த்தும் நூல்.

இரு நூல்களும் :

வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17 விலை ரூ.45.

இன்றையப் புதிய கோணங்களில் உபநிடதங்கள் - இல.ஆர்.ஜானகிராமன்.

வேதங்களின் ரூபமும், சாரமும், காட்டும் மார்க்கமுமாயிருக்கும் உபநிடதங்களில் முக்கியமான பத்தும், அவை இன்றைய உலகில் உதவும் வகைகளைப் பற்றியும் எளிதாய், ஏற்கிற வகையில் கூறும் ஆன்மிகக் களஞ்சியம்.

மணிமேகலை பிரசுரம், 7, தணிகாசலம் தெரு, தி.நகர், சென்னை - 17. விலை ரூ.100/-.

சச்சின் - ஒரு புயலின் பூர்வகதை - என்.சொக்கன்.

விளையாடுகிறேன் பேர்வழி என்று அக்கம்பக்கத்து வீட்டு ஜன்னல்களை உடைத்த அந்த இரட்டை வாலுக்கு தம் இசை அபிமானத்தால் எஸ்.டி. பர்மனின் பெயரை வைத்தார் அவனது தாத்தா.

'இவன் சரிப்படமாட்டான். வேண்டாம்' என்று முதல் நாள் ஆட்டத்தைப் பார்த்துவிட்டு மறுத்த பயிற்சியாளர் அச்ரேகர், மறுநாள் அவன் ஆடிய ஆட்டத்தைப் பார்த்து அசந்தே போனார். அவரை மட்டுமல்ல, 16½ வயதில் களமிறங்கி, இன்றுவரை இந்தியாவையே அசர அடித்துக் கொண்டிருக்கும் சச்சினின் வெற்றிக் கதை. அர்ப்பணிப்பு என்பதன் அர்த்தம் சொல்லும் வரலாறு.

சபரி பப்ளிகேஷன்ஸ், 28, டேங்க் பண்ட் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை - 34. விலை ரூ.125/-

பிராந்து - நாஞ்சில் நாடன்.

நடையும், தரமும் செல்லும் தடத்தைப் புரிய வைத்துவிடும். அந்த வகையில் இது யதார்த்த ஊருக்குப் போகும் தெற்கத்திக் காற்று. சீறி எழுகிறது, சுழன்று வீசித் தணிகிறது, மெல்ல வீசுகிறது. நெல்லை மண்ணின் மணம் வீசும் சிறுகதைத் தொகுப்பு.

விஜயா பதிப்பகம், 20, இராஜ வீதி, கோவை - 1. விலை ரூ.100/-

— விஷ்வக்



அருள்மிகு கைலாசநாத ஸ்வாமி திருக்கோயில்

(அஷ்டபுஜ ஸ்ரீ துர்கா பரமேஸ்வரி ஆலயம்)
அம்மன்குடி, கும்பகோணம் வட்டம்.

நிகழும் சுபானு வருடம் ஆனி மாதம் 25ம் தேதி (9.7.2003) புதன்கிழமை சுவாதி நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் காலை 6.00 மணிக்கு மேல் 6.30 மணிக்குள் மிதுன லக்னத்தில் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி, ஸ்ரீசங்கர விஜேயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அருளாசியுடன் ஸ்ரீ பார்வதிதேவி ஸமேத ஸ்ரீ கைலாச நாதஸ்வாமிக்கும் ஸ்ரீ துர்க்கா பரமேஸ்வரி மற்றும் இதர பரிவாரங்களுக்கும் மஹா கும்பாபிஷேகம் இனிது நடைபெற இருப்பதால் ஆஸ்திக பெருமக்களும் மெய்யன்பர்களும் கலந்து கொண்டு ஸ்ரீதுர்கா பரமேஸ்வரியின் அருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம். கும்பாபிஷேகத்திற்கான பூஜைகள் 5.7.2003 காலை முதல் நடைபெற இருக்கின்றன என்பதை தெரியப்படுத்துகிறோம்.

தொடர்பு கொள்ள முகவரி :
L.கௌரிசங்கர்,
G.K.எலக்ட்ரிகல்ஸ்,
30, வால்டாக்ஸ் சாலை,
சென்னை - 600 079.
போன் : 25295987

S. நாகராஜன்,
அம்மன்குடி ஸ்ரீ துர்காதேவி நற்பணி மன்றம்,
'துர்காலயா',
50-B, பாணாதுறை தெற்கு வீதி,
கும்பகோணம் - 612 001.
போன் : 2430972

ஸ்ரீ டிராவல்ஸ்

194 - a. முதல் மாடி, அண்ணா சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை - 6.
Ph:28516799, 28513109, 28513122, 55870482 Tata Phone (24 Hours)
E-Mail:sritrave@satyam.net.in Web:www.sreetravels.com

ஸ்ரீ டிராவல்ஸ் அளித்திடும் அற்புதமான சுற்றுலாக்கள்

Tour No. 1: ***கைலாஷ் - மானசரோவர் யாத்ரா*** - பயணத் தொகை : ரூ. 68,000
பயண நாட்கள் : 20 புறப்படும் தேதி : 29.08.03
(பெங்களூர் - காட்மாண்டு - பெங்களூர் விமானம் மூலம்)

Tour No. 2: ***பக்தி சுற்றுலா :*** சென்னை - நியூடெல்லி - ஹரித்துவார் - ரிஷிகேஷ் - பத்ரிநாத் - கேதார்நாத் - கங்கோத்ரி - கௌமுக் - யமுனாத்ரி - நியூடெல்லி - சென்னை.
பயணத் தொகை : ரூ. 7,900 பயண நாட்கள் : 16 புறப்படும் தேதி : 21.07.03

Tour No. 3: ***அந்தமான் தீவுகள்*** - பயணத் தொகை : 13,900/- பயண நாட்கள் : 8 புறப்படும் தேதி 22.08.03 & 12.09.03 (கப்பல் மூலம் புறப்படுதல் & விமானம் மூலம் திரும்பி வருதல்)

Tour No. 4: ***லட்சத் தீவு*** - புறப்படும் தேதி : 02.08.03

Tour No. 5: சென்னை - ஹைதராபாத் - அவுரங்காபாத் - ஷீரடி - நாசிக் - மஹாபலேஷ்வர் - மும்பை - கோவா - பெங்களூர் - சென்னை.
பயணத் தொகை : ரூ. 6000/- பயண நாட்கள் : 11 புறப்படும் தேதி : 26.07.03

Tour No. 6: வயது முதிர்ந்தவர்களுக்கு மட்டும் பிரத்தியேக சுற்றுலா
சென்னை - கல்கத்தா - டார்ஜிலிங் - கேங்க்டாக் - காத்மாண்டு - வாரணாசி -சென்னை.
பயணத் தொகை : ரூ.14,999/- பயண நாட்கள் : 14 புறப்படும் தேதி : 13.07.2003.
(3 TierA/C இரயில் & பீரட் நகர் -காத்மாண்டு - வாரணாசி விமானம் மூலம்)

- மிகவும் தரமான தங்கும் வசதிகளுடன் • எல்.டி.சி. வசதி உண்டு
- நெரிசலை தவிர்க்க 60 நாட்களுக்கு முன்னதாகவே முன்பதிவு அவசியம்.

வேறு ஒன்றும் பிரமாதமாகச் செய்யச் சொல்லிவிடவில்லை.

சும்மாதான் இருக்கச் சொன்னார்கள்.

நாமாக எதைப் பற்றியும் எண்ணமிடாமல், மனத்தில் தானாகவே தோன்றும் எண்ணங்களோடும் நமக்கு சம்பந்தமில்லாதது போல, வேடிக்கை பார்த்துக் கொண்டு சும்மா கண்களை மூடி தியானம் பழகிக் கொள்ளச் சொல்லிக் கொடுத்தார்கள்.

ரொம்ப நேரங்கூட இல்லை. 'சும்மா' ஒரு பதினைந்து நிமிடங்கள், 'சும்மாயிருக்க'ச் சொன்னார்கள்.

பின்மாலைப் பொழுது.

சுமதி கோயிலுக்குப் போயிருக்கிறாள், அருணையும் அழைத் துக் கொண்டு.

தியானத்தில் உட்கார இதைவிட

தியானம்



அருமையான நேரம் கிடைக்குமா?

விரிப்பை விரித்து உட்கார்ந்து கண்களை மூடியதுமே அருள் பொழியும் அரவிந்த அன்னையின் திரு உருவம் மனத்திரையில்!

அழைக்காமலேயே அன்னை வருவதற்கு தினமும் அன்னையின் முன்பு சில நொடிகள் கண்களை மூடி நின்று பிரார்த்தனை செய்யும் பழக்கம் காரணமாக இருக்குமோ?

திடீரென்று அன்னையின் இரு காதுகளும் பெரிதாக நீள, தலையில் கொண்டையோடு உருவம் புத்தர் பெருமானைப் போல் ஆகிறது. பிரம்மாண்டமான புத்தா!

'ராரி ராரி ராரி ரா...' பின்னணியில் பாடல் ஒலிக்க, புதுச் சேலையுடன் புத்தரை வணங்கும் பெண்.

சேலை விளம்பரம்!

அதே பெண் இப்போது சுடிதாரில் யாருடனோ சண்டை போட்டுக் கொண்டி

ருக்கிறான்.

விளம்பர நடிகை நடித்த சினிமாப் படம்!



இருவரும் வண்ண வண்ண உடைகள் அணிந்து ஒரு கும்பலோடு வெட்ட வெளியில் ஆடிப் பாடிக் கொண்டிருக்க, தூரத்தில் சாலையில் கூண்டு வண்டிகள் முடிவில்லாமல் போய்க் கொண்டேயிருக்கின்றன.

வண்டியா?

அம்மா திங்கட்கிழமை வருவதாக அண்ணா ஃபோன் பண்ணினானே? வண்டி காலையில் எத்தனை மணிக்கு வரும்? ஸ்டேஷனுக்குப் போகணுமே!

சேச்சேச்சே!

என்ன இது? இப்படியொரு தொடர்ச்சியான எண்ண ஓட்டம் முடிவேயில்லாமல்?

தலையை உலுக்கிக் கொண்டு 'சும்மாயிருக்க' முயற்சித்தேன்.

வாய் பேசாமல் நாள் முழுவதும் மௌன விரதம்கூட இருந்து விடலாம் போலிருக்கிறது. ஆனால் மனசைக் கட்டுப்படுத்த முடியவில்லையே? சொல்லப் போனால் மௌனமாக உட்காரும்போதுதான் மனம் என்னும் மாயப் பிசாசு கட்டவிழ்ந்து மூர்க்கத்தனமாய் எழுந்து குதிக்கிறதோ?

பின்னே சும்மாவா ஆணையிட்டான் அந்த அரசன், "சும்மாயிருக்கும் ஆண்டிக்கு ரெண்டுபட்டை சோறு போடுங்கள்" என்று?

மனசு நைசாக அந்தக் கதைக்குள் புக முயல,

சே! சே!

ஓய்வு ஒழிச்சலே இல்லாமல் ததும்பித் ததும்பி வந்து முட்டி மோதும் எண்ண அலைகளை விரட்டவே முடியாதா?

முடியும், முடியும்!

மூடிய கண்களுடன் சும்மாயிரு!

மனத்திரையில் தோன்றும் உருவங்களைப் பொருட்படுத்தாதே! அவை விளைவிக்கும் எண்ணங்களோடு உறவாடாதே!

சும்மாயிரு... சும்மாயிரு...

"அப்பா!"

அருணின் குரல் கேட்டு மெதுவாகக் கண்களைத் திறந்தேன். கண்கள் அனிச்சையாக சுவர்க் கடிகாரத்தின் மீது பதிய, சரியாகப் பதினைந்து நிமிடங்கள் ஆகியிருந்தன, தியானத்தில் அமர்ந்து. இதில் ஒரு நொடி... இல்லை... ஓர் அரைநொடியாவது, மனசு சும்மாயிருந்திருக்குமா?

ஊஹூம்! ரொம்பவே சந்தேகந்தான்.

"எதுக்கு நீ இப்படி சும்மா உட்கார்ந்திருக்கே?"

குழந்தை என் முகத்தருகே தன் முகத்தை நீட்டிக் கேட்டான்.

"நானா? சும்மா உட்கார்ந்திருக்கேனா?"

அப்பா எதற்காகச் சிரிக்கிறார் என்று புரியாமல் குழந்தை விழித்துப் பார்த்துக் கொண்டு நின்றான்.

ரேவதி பாலு



''பகல்ல தூங்கினபோது தமிழக மந்திரியா பதவி ஏற்றதா கனவுன்னு சொன்னியே... ராத்திரி கனவு வந்ததா?

''ஓ! டிஸ்மிஸ் ஆனதா கனவு வந்துடுச்சே!''

- ராஜி ராதா

''தலைவருக்குத் தொலைநோக்குப் பார்வை அதிகம்தான்.''

''எப்படிச் சொல்றீங்க?''

''ஏழெட்டுத் தலைமுறை உட்கார்ந்து சாப்பிடற மாதிரி சொத்து சேர்த்து வைச்சிட்டாரே!''

- சீர்காழி வி. ரேவதி





''கட்சியிலே அவருக்கு 'மாவீரன்'னு பட்டம் தந்திருக்காங்களே. ஏன்?''

''தினமும் அதிகாலையிலே 'வாக்கிங்' போறாராம்!

- தஞ்சை தாமு



''தலைவியைப் பார்க்கணும்!''
''அம்மாயிண்ட்மெண்ட்' - வாங்கியாச்சா?''

- கு. அருணாசலம்


'அம்மாயிண்ட்மெண்ட்'



''ஸார்! எனக்கு நீங்க மெமோ கொடுக்கிறது அநியாயம். உங்களைப் பற்றி நான் அவதூறு பேசினதா சொல்றது அபாண்டம்!''

''சும்மா நாடகமாடாதீங்க! மானேஜர் கை சுத்தமானவர், சம்திங்கெல்லாம் வாங்க மாட்டார்னு சொல்லி ரெண்டு பேரை நீங்க திருப்பி அனுப்பலை...?''

- சீர்காழி வி. ரேவதி



''கட்டில், மெத்தை, கலர் டீவி, ஏர்கூலர்... மாப்பிள்ளை ரொம்ப எதிர்பார்க்கிறாரே... ஏன்?''

''ஜெயில்லே சகல வசதிகளோட இருந்து பழகிட்டாரு!

- தஞ்சை தாமு

"திருட்டு விசிடியை ஒழிக்க குண்டர் தடுப்புச் சட்டம் பாய வேண்டும்" என்றெல்லாம் போராடிப் பார்த்தவர்கள், பொறுக்க முடியாமல் ஓர் இறுதி முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

உலகத் தொலைக்காட்சிகளில் முதல் முறையாக, திரைக்கு வரும் அன்றைய தினமே, உங்கள் "தமிழ்த் திரைத் தொலைக் காட்சியில் புத்தம் புதிய திரைப்படத்தைப் பார்த்து மகிழுங்கள்" என்று ஆகஸ்ட் பதினைந்து முதல் அறிவிக்கப் போகிறார்கள். ஆமாம்! கொஞ்சம் கிள்ளிப் பார்த்துக் கொண்டு மேலே படியுங்கள்.

முந்நூறு தமிழ்த்திரைப்படத் தயாரிப்பாளர்களின், செலுத் தப்பட்ட பங்கு மூலதனத்தில் (paid up capital) 'தமிழ் திரை (Ttv) என்ற புதிய செயற்கைக்கோள் தொலைக்காட்சியை லிமிடெட் நிறுவனமாகத் தொடங்கியிருக்கிறார்கள், கோடம்பாக்கத்தினர்.

• தமிழ் திரை டி.வியின் லோகோ

'தமிழ் திரை' என்ற தலைப்பிலேயே ஒற்றுப்பிழை இருக்கிறதே, உருப்படுமா என்று கிண்டலடிக்கிறவர்களுக்கு, "இது எங்களுக்கும் தெரியும். மார்க்கெட்டிங் ஆட்கள் கொடுத்த அறிவுரைப்படி போணியாவதற்காகவே இப்

இந்தியத் தொலைக்காட்சிகளில் முதல் முறையாக?!!?!?

படியொரு ஏற்பாடு" என்று பதில் வருகிறது.

சேனலை எப்படி நடத்தப் போகிறார்கள்! முந்நூற்று அறுபத்தைந்து நாளும் இவர்களால் புதுப் படங்களைக் காட்டிக் கொண்டிருக்க முடியுமா? தமிழ்த் திரைத் தொலைக்காட்சியின் நிர்வாக இயக்குனராகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் ஆர்.கே. செல்வமணி சொல்வதைக் கேளுங்கள்.

"தமிழ் திரை டி.வி. இருபத்து நான்கு மணி நேரச் சேனல். ஒவ்வொரு வாரமும் மூன்று திரைப்படங்களை ஒளிபரப்பப் போகிறோம். எஞ்சிய நேரங்களில் மற்ற சேனல்களைப் போல, பிரேக் ஃபாஸ்ட் நிகழ்ச்சியில் தொடங்கி, கவுண்டவுன், டாக்ஷோ என எல்லாம் இருக்கும். செய்திகளையும் கூட விரைவிலேயே தொடங்கி விடுவோம். இங்கே பணம் போடுகிறவர்கள் தயாரிப்பாளர்கள் என்றால், மூளை உழைப்பை வழங்க நானூறு இயக்குனர்கள், கைகோத்திருக்கிறோம். எனவே

ஒவ்வொரு நிகழ்ச்சியும் புதிய வடிவத்தில், புத்துணர்ச்சியோடு இருக்கும். எல்லா நிகழ்ச்சிகளிலும் சினிமாவைத் திணிக்க மாட்டோம்" என்று உத்தரவாதம் தருகிறார்.

நிகழ்ச்சிகள் ஒருபுறம் இருக்கட்டும். தியேட்டரில் வெளியாகும் அன்றே டி.வி.யிலும் படத்தை ஒளிபரப்பும் அதிசயம் நிகழ்ந்தால், ரசிகர்கள் மழைக்குக் கூட தியேட்டர் பக்கம் ஒதுங்க மாட்டார்கள். ஏற்கெனவே நூற்றுக் கணக்கான தியேட்டர்கள் வணிக வளாகங்களாக உருமாறிவிட்ட நிலையில், சினிமாக்காரர்களே தியேட்டர்



• விழா மேடையில்...

களை ஒழித்துக்கட்டும் முயற்சியல்லவா இது!? என்றால் "நிச்சயமாக இல்லை" என்று அடித்துச் சொல்கிறார் தமிழ் திரை டி.வியின் தலைவரான கோவைத் தம்பி. 'வீட்டில் சாப்பிடுகிறோம் என்பதற்காக ஹோட்டலுக்குப் போவதை நிறுத்தி விடுகிறோமா என்ன? டி.வியில் என்ன தான் டிஜிட்டல் ஒளிபரப்பும், டி.டி.எஸ். ஒலி அமைப்பும் வந்து விட்டாலும், திரையரங்கில் பார்க்கும் அற்புதமான அனுபவம் டி.வியில் கிடைக்காது. தியேட்டருக்குப் படம் பார்க்க வருவது, ரசிகர்களைப் பொறுத்த வரை ஒரு பிக்னிக் அனுபவம். ஆயிரம் விஞ்ஞான அதிசயங்கள் நிகழ்ந்தாலும் தியேட்டர்களை ஒழிக்க முடியாது" என்று நம்புகிறார்.

பெரிய நடிகர், நடிகைகளின் படங்களைக் கண்டு களிக்கவே ரசிகர்கள் தியேட்டர் பக்கம் வருகிறார்கள். குறிப்பாக பெரிய ஹீரோக்கள் தியேட்டர்களை நிரப்பும் தமது ஓபனிங் ரசிகர்களை நம்பியே பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஒரு பிரபல ஹீரோவின் ஓபனிங் வசூலை வைத்துத்தான் அவரது படத்திற்கான விலையையே நிர்ணயிக்கிறார்கள். நிலைமை இப்படியிருக்கும் போது, கமல், விஜயகாந்த், சரத்குமார், விக்ரம், விஜய், அஜித் போன்ற ஓபனிங் இமேஜ் உள்ள ஹீரோக்களின் படங்கள் தியேட்டரில் வெளியிடப்படும் அன்றே, டி.வி.யிலும் ஒளிபரப்பினால், அவர்களது ரசிகர்கள் தியேட்டருக்கு வருவார்களா? கட்-அவுட்டும் பாலபிஷேகமும் கட்டாகிவிட்டால், நமது ஹீரோக்களுக்கு எப்படித் தூக்கம் வரும். இவர்களின் முதலமைச்சர் கனவுக்கே அதிரடி ஆப்பாக



• ஆர்.கே.செல்வமணி

அல்லவா இது இருக்கும்! தவிர ஏ, பி, சி சென்டர்கள் என்ற தர நிர்ணயமும் தகர்ந்து போய் விடும்!

ஆனால் தமிழ் திரை டி.விக்கு தங்கள் படங்களைத் தரக் கூடாது என்று பெரிய ஹீரோக்கள் அடம்பிடித்தால், தமிழ் திரை டி.வி. எப்படித் தாக்குப் பிடிக்க முடியும்?

"நடிப்பதோடு கதாநாயகர்

களின் வேலை முடிந்து விடுகிறது. அவர்களுக்கு நடிப்பதற்கான ஊதியத்தைத் தயாரிப்பாளர்கள் வழங்கி விடுகிறார்கள். படத்தின் முழு உரிமை தயாரிப்பாளரைச் சார்ந்தது. படத்தை யாருக்குக் கொடுக்க வேண்டும் என்பதைத் தயாரிப்பாளர் முடிவு செய்வார்'' என்று நெத்தியடியாகச் சொல்கிறார் செல்வமணி.

ஹீரோக்களைக் கட்டுப்படுத்தி விடலாம்(?) சரி; திரைப்படங்களின் சாட்டிலைட் உரிமைக்கு சன் டி.வி. போன்ற பகாசுர சேனல்கள் தரும் விலையோடு, போட்டியிட்டு தமிழ் திரை டி.வி. பெரிய விலை கொடுக்க முடியுமா?



'நிச்சயமாகப் போட்டிச் சேனல்களை விட எங்களால் பெரிய விலை கொடுக்க முடியும். முதல் காரணம் தமிழ் திரை டி.வி. ஒரு கட்டணச் சேனல். மிகக் குறைந்த கட்டணத்தில் தியேட்டருக்குப் போகாமலே புதிய படங்களைப் பார்க்கும் வாய்ப்பு. கேபிள் இணைப்பு கொண்ட அத்தனை தமிழ் மக்களும் தமிழ் திரையின் சந்தாதாரர்கள் ஆகிவிடுவார்கள். இரண்டாவது திரையுலகின் ஒற்றுமை. எங்கள் டி.வியின் அறிமுக விழா மேடையில் திரளாக அமர்ந்த தயாரிப்பாளர்கள், இயக்குனர்கள் இந்த ஒற்றுமையை உறுதி செய்திருக்கிறார்கள்'' என்கிறார் செல்வமணி.

என்னதான் தயாரிப்பாளர்களும் இயக்குனர்களும் ஒற்றுமையாக இருந்தாலும், கதாநாயகர்களும், தாங்களே தயாரிப்பாளர்களாக மாறிவிட்டால் அவர்களைக் கட்டுப்படுத்த முடியாது. இதை உறுதி செய்வது போல விஜயகாந்த், சரத்குமார், விக்ரம் போன்ற டாப் ஹீரோக்கள், அறிமுக விழாவைப் புறக்கணித்திருக்கிறார்கள். அதே நேரம் நடிகர் விஜய்யின் தந்தையும், தயாரிப்பாளருமான எஸ்.ஏ. சந்திரசேகர் உள்ளிட்ட பெரிய தயாரிப்பாளர்கள் விழாவில் ஆஜராகிவிட்டதில் ஹீரோக்களின் உள்நோக்கம் செல்லுபடியாகாது என்கிறார்கள்.

இன்னொரு பக்கம் தியேட்டரில் வெளியான பிறகு, படம் பற்றிய மீடியா விமர்சனம் அறிந்து, பார்க்கலாமா, வேண்டாமா என்று முடிவு செய்யும் ஒரு பகுதி ரசிகர்களுக்கு, அதற்கான கால அவகாசத்தை இந்த முறையானது தருமா என்ற கேள்வியும் எழுந்திருக்கிறது. இதனால் சென்சார் ரேட்டிங் அர்த்தமற்றதாகிவிடும் அபாயமும் இருக்கிறது.

இது போன்ற பிரச்னைகளையெல்லாம் தாண்டி தமிழ் திரை டி.வி வெற்றி பெறுமானால், ஹிந்தி, தெலுங்கு, மலையாள திரை உலகங்களிலும் இந்தப் புதிய முறை பின்பற்றப்படலாம்!

— விஷுவல்தாசன்

அய்யா மனசு வைத்தால்...

'பாபா'வில் மிஸ்ஸான ரஜினி – விவேக் காம்பினேஷன், 'அய்யா'வில் உறுதி என்றது கோடம்பாக்கம். அய்யா? அட ஆமாங்க! 'சாமி'பட இயக்குனர் ஹரி சொன்ன கதை ரஜினிக்குப் பிடித்துப் போக களத்தில் கடைசியாக(?)ஒரு கை பார்த்து விடலாம் என்று ரஜினி முடிவு செய்து விட்டதாகத் தகவல். கதைப்படி விவேக் ரொம்ப முக்கியம் என்று இயக்குனர் பிடிவாதம் காட்ட, யோசித்துச் சொல்கிறேன் என்று சொல்லியிருக்கிறாராம், படையப்பா!

– ஸ்ரீ

ஓம்

ஸ்ரீ குருப்யோ நம:

தேனி, வேதபுரீயில்

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி

ஆலயத் திருப்பணிக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

- "அரிது! அரிது! மானிடராய்ப் பிறத்தல் அரிது!" என்றனர் ஆன்றோர். காரணம் மனிதப் பிறவியில் மட்டுமே உயிருக்கு உயிரான இறைவனை அறிந்து, வணங்கி வழிபட்டு இறைவனுக்கும் தனக்கும் உள்ள உயர்ந்த உணர்வை உணர இயலும். அந்த உணர்வை உணர உள்ளத் தூய்மை அவசியம்.
- உள்ளத் தூய்மையை உயர்த்த வல்லது உருவ வழிபாடு. அதற்காகவே உளவியல் தத்துவத்தை உணர்ந்த நமது முன்னோர்கள் ஆலயங்களில் உருவங்களை அமைத்து வழிபட்டார்கள். அதனால் பண்புகளும் வளங்களும் பெருகி வாழ்க்கை செழித்தது.
- இச்சீரிய சிந்தனையின் அடிப்படையில், தேனி முல்லையாற்றங்கரையில் ஸ்ரீ ஸ்வாமீ சித்பவாநந்த ஆஶ்ரமம் அமைக்கப் பெற்று அதில் எளிமையானதோர் வழிபாட்டுக் கூடமும் அமைக்கப்பட்டுள்ளது.
- இந்த ஆஶ்ரமத்தில் பண்டைய நெறிப்படி குருகுலம் ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. இளைஞர்களுக்கு இலவசமாக மூன்றாண்டு ஆன்மிக வாழ்க்கைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. நமது நாட்டின் ஒப்புயர்வற்ற அறிவுச் செல்வங்களாகிய கீதை & திருக்குறள் போன்ற தெய்வீக நூல்களை மக்களுக்குச் சிறப்பாக விளக்கிக் கூறும் பணியைச் செவ்வனே செய்து வருகிறது.
- ஆஶ்ரமத்தின் வழிபாட்டுக் கூடத்தில் ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யர், ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி திருவுருவங்கள் முறையாக நிறுவப்பெற்று ப்ரமாதி வருஷம் தை மாதம் 27ஆம் நாள் வியாழன் (10-02-2000) அன்று மஹாகும்பாபிஷேகம் நிகழ்த்தப் பெற்றது. உலக மக்களின் நல்வாழ்வினை வேண்டி, அன்று முதல் இன்று வரை குருகுல மாணவர்களால் நாள்தோறும் முறையாக மும்முறை வழிபாடுகள் நிகழ்த்தப் பெற்று வருகிறது.
- வழிபாடுகள் முறையாகவும், செம்மையாகவும் நிகழ்ந்து வருவதால், ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியின் திருவருட்சக்தி பெருகி வருவதை, மெய்யன்பர்கள் அனைவரும் அனுபவித்து, உணர்ந்துவருகின்றனர்.
- அவ்வழிபாட்டுக் கூடம் தென்னங்கீற்றுக் கூரையால் ஆனது. அவ்வழிபாட்டுக் கூடத்தை ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியின் திருவருள் துணைகொண்டு, சிறந்ததோர் திருக்கோயிலாக உருவாக்கி, அதில் ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ சுப்ரமணியர், ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி, ஸ்ரீ ஶாரதாம்பிகை, ஸ்ரீ பதரீ நாராயணர் ஆகிய தெய்வத் திருவுருவங்களை எழுந்தருளச் செய்ய ஆஶ்ரம ஆசார்யர் ஸ்ரீ ஸ்வாமீ ஓங்காராநந்தர் அவர்கள் திட்டமிட்டுள்ளார்கள்.
- இவ்வாலயத் திருப்பணிக்கு உதவ விரும்புபவர்கள் கீழே தரப்பட்டுள்ள மந்த்ரங்கள் ஒவ்வொன்றிலும் 1008 வீதம் எழுதி அனுப்ப வேண்டுகிறோம். அம்மந்த்ரங்கள் திருக்கோயிலின் அஸ்திவாரத்தில் ப்ரதிஷ்டை செய்யப்படும். அதனால் இவ்வாலயத்தின் அருட்சக்தி ஓங்கி விளங்கும். தாங்களும் இறைவனின் திருவருளைப் பெறுவீர்கள்.
- லிகித மந்த்ர ஜபத்துடன் ஆலயத் திருப்பணி நன்கு நடைபெறுவதற்கு தங்களால் இயன்ற பொருளுதவியை பணமாகவோ, கட்டிடப் பொருளாகவோ மனமுவந்து வழங்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.
- ஆலயத்தின் மொத்தப் பரப்பளவு 6000 சதுர அடியாகும். கட்டுமானம் & பராமரிப்பு இரண்டும் சேர்ந்து 1 சதுர அடிக்கு ரூபாய் 900 என்று திட்டமிடப்பட்டுள்ளது.
- D.D. Cheque, M.O. மூலம் நன்கொடை அனுப்ப விரும்புபவர்கள் "SRI DAKSHINAMURTI SEVA SAMITI, THENI" என்ற பெயரில் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பும்படி வேண்டுகின்றோம்.

இங்ஙனம்

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸேவா ஸமிதி

SRI DAKSHINAMURTI SEVA SAMITI

(பதிவு எண் 500 / 2002)

ஸ்ரீ ஸ்வாமீ சித்பவாநந்த ஆஶ்ரமம்

தபால்பெட்டி எண் 23, வேதபுரீ, சத்திரப்பட்டி சாலை, தேனி - 625 531.

தொலைபேசி : 04546-253908 e-mail:mdu_vedanta@sancharnet.in

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி திருக்கோயிலின் அஸ்திவாரத்தில் ப்ரதிஷ்டை செய்யப்படும் லிகித-மந்த்ர-ஜப விவரம்.

(ஒவ்வொன்றிலும் குறைந்தது 1008 வீதம் எழுதி அனுப்பவும்)

- ஓம் கம் கணபதயே நம:
- ஓம் ஶம் ஶரவணபவாய நம:
- ஓம் ஹ்ரீம் நம:ஶிவாய
- ஓம் தம் தக்ஷிணாமூர்த்தயே நம:
- ஓம் ஐம் மஹாஶக்த்யை நம:
- ஓம் நமோ நாராயணாய



ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி திருக்கோயிலின் வரைபடம்

மெல்லினம் 1

பா.ராகவன்



ஜன்னலோரம் தலை நீட்டிச் சிரித்த செம்பருத்திக் கிளையில் ரொம்ப நேரமாக ஒரு வண்ணத்துப் பூச்சி உட்கார்ந்திருந்தது. மலர்ந்திருந்த பூவுக்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்பது போல், என்னையும் ஒரு பூவாக எண்ணிப்பார் என்று கேட்பது போல். செம்பருத்திப் பூவுக்குப் பக்கத்திலேயே அது அமர்ந்திருந்ததால், பூவின் செவ்வண்ணத்துக்குப் பூச்சியின் மஞ்சள் படர்ந்த மேனி அருமையான எதிரிடையாக அமைந்து, நாளெல்லாம் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போலிருந்தது.

குட்டி, பூவைப் பறிப்பதற்குத்தான் வந்தாள். ஆனால் பட்டாம் பூச்சியைப் பார்த்ததும் அவளுக்கு வேறு ஒரு திட்டம் உண்டானது.

என்ன அழகான பட்டாம் பூச்சி! பூவை விடவும். ஒருமுறை தொட்டுப் பார்க்க முடிந்தால் பிரமாதம். ஜக்கு எப்படியோ கண்ணில் படும் வண்ணத்துப் பூச்சிகளையெல்லாம் ஒருமுறையாவது பிடித்து அருகே பார்த்து விட்டே பறக்கவிடுகிறான். அவன் விரல்களின் இடையே மாட்டிக் கொள்ளும் பூச்சிகள் என்ன பதற்ற மடைகின்றன, அந்தச் சில விநாடிகளுக்குள்! எத்தனை வேகமாகச் சிறகுகளை உதறிக்கொள்கின்றன!

பயம்!


ஆனால் ஜக்கு ஒரு பூச்சியைக் கூடக் கொல்லமாட்டான். கடவுள் சத்தியம். அவற்றைத் தொட்டுப் பிடித்து அருகே பார்ப்பதில் ஏதோ இன்பம் இருக்கிறது அவனுக்கு. 'தப்பில்லையாடா இது?' என்று கேட்டால், 'என்னை எங்கப்பாவும் அம்மாவும், தாத்தா பாட்டியும் கிட்ட இழுத்துக் கொஞ்சலை? அந்த மாதிரி தான் இது' என்பான்.

ஐயோ, ஒரு பட்டாம்பூச்சியைக் கையில் எடுத்து ஒரு நிமிஷமாவது கொஞ்ச முடிந்தால் எத்தனை பரவசம்!

ஆனால் குட்டிக்கு ஒரு பூச்சி கூட, ஒரு முறை கூட அகப்பட்டதில்லை. அவளது கொலுசு தான் காரணமாக இருக்க வேண்டும். அவள் நெருங்கும் போதே பட்டுப் பூச்சிகள் பறக்கத் தொடங்கிவிடுகின்றன. தலைக்கு மேலே, எட்டாத இரண்டு ஆள் உசரத்தில் 'என்னைப் பிடிப்பியா? பிடி, பிடி!' என்று ஆட்டம் காட்டத் தொடங்கி விடும்.

"ஒரு நேக் வேணும் குட்டி. நைஸா பின்னாடி போய் மெத்துனு பிடிக்கணும். பூச்சிக்கு வலிக்கக் கூடாது. பிடிச்சதுமே, "நான் உன்னை ஒண்ணும் பண்ண மாட்டேன்; காட் ப்ராமிஸ். ஜஸ்ட் கொஞ்சிட்டு விட்டுடறேன்"னு அதுங்கிட்ட சொல்லிடணும்" என்பான் ஜக்கு.

ஜக்கு தான் எத்தனை விஷயம் தெரிந்



தவனாக இருக்கிறான். இத்தனைக்கும் தன்னைவிட இரண்டு வயசு தான் கூடுதல். பட்டுப் பூச்சிகள் அவனுக்கு சிநேகமாகின்றன. பூனைகள் அவன் தொட்டுத் தூக்கிக் கொஞ்சுவதற்காகக் காத்திருக்கின்றன. எப்போதும், யாரைப்பார்த்தாலும் குரைக்கும் நாய்கள் கூட ஜக்குவைக் கண்டால் வால் ஆட்டுகின்றன. அவன் செடிகளுடன் பேசுகிறான், மணிக்கணக்கில். ஜக்குவின் அம்மா அவனைப் பைத்தியம் என்று திட்டக் கேட்டிருக்கிறாள் குட்டி.

ஆனால் அவன் பைத்தியமல்ல என்பதில் அவளுக்கு அசாத்திய நம்பிக்கை.

ஜக்கு சொல்வான்: 'பாரு, இந்த எலுமிச்சைச் செடி நட்டிருக்கேனா? ரெண்டு நாள்ள முளை விட்டாகணும்னு அதுக்கு ரூல் போட்டிருக்கேன். நிச்சயம் சாட்டர்டே ரெண்டு இலை வந்துடும் பார்'

என்ன ஆச்சர்யம்! சனிக்கிழமை வரை காத்திருந்து குட்டி அவன் வீட்டுக்கு விடிந்ததுமே எழுந்து ஓடுவாள்.

சந்தேகமே இல்லை. ஜக்கு மந்திரசக்தி உள்ளவன் தான். சொன்னபடி செடி முளை விட்டிருக்கிறதே!

"யு ஆர் கிரேட் ஜக்கு" என்பாள் குட்டி.

"தேங்ஸ். உன்னாலும் முடியும் குட்டி. ட்ரை பண்ணு" என்பான்.

எதாவது ஸ்லோகம் சொன்னால் இதெல்லாம் சாத்தியமாகுமா என்று குட்டிக்கு சந்தேகம். தன் அம்மாவிடம் கேட்டாள்.

"செடி முளைக்க ஸ்லோகமா?" அம்மா ஆச்சர்யப்பட்டாள்.

"இல்லம்மா. அதுக்கு மட்டுமில்லை. அவன் கூப்பிட்டா நாய், பூனையெல்லாம் கூட ஓடி வந்து விளையாடுது. பட்டாம் பூச்சியை அசால்டா பிடிக்கறான். பேப்பர்ல வீடு, பொம்மையெல்லாம் செய்யறான். சில நம்பர்ஸை வெச்சுக்கிட்டு மேஜிக் கூட பண்றான்..."

அம்மா அவளை அணைத்துக் கொண்டாள்.

"நீயும் பண்ணலாம்டி செல்லம். நான் சொல்லித்தரேன்."

அன்று இரவு குட்டிக்கு அவள் அம்மா எதிராள் மனத்தில் நினைக்கும் எண்ணைக் கண்டுபிடிக்கும் வித்தையைக் கற்றுக் கொடுத்தாள்.

"பத்துக்குள்ள ஒரு நம்பர் நினைச்சிக்கச் சொல்லு. அதை ரெண்டால பெருக்கி, ரெண்டைக் கூட்டணும். அப்புறம், அஞ்சால பெருக்கி, அஞ்சைக் கூட்டணும்..."

> "இப்ப ஒண்ணும் மொழிப் போராட்டம் நடக்கலியே... நம்ம தலைவர் தீவிர மொழிப் போராட்டத்தில் சிக்கி இருக்கிறதா சொல்றாரே...?"
>
> "அதுவா, அவர் மனைவி தேன்மொழிக்கும் சின்ன வீடு மணிமொழிக்கும் பயங்கரச் சண்டை.... அந்தப் போராட்டத்தில்தான் சிக்கியிருக்கார்!"
>
> - பாஸு

குட்டிக்கு அந்தக் கணக்கு ரசிக்கவில்லை. அம்மா, ஜக்குவின் மந்திரசக்தியை மிகவும் மலினப்படுத்துவதாகப் பட்டது. அவளுக்கு சந்தேகமே இல்லை. ஜக்கு ஒரு மேதை. தனக்குத் தெரியாத கோடி வித்தைகள் அவனுக்குத் தெரியும்.

தனக்கும் அவற்றையெல்லாம் தெரிந்து கொள்ளத் துடிப்பு இருப்பது உண்மைதான்.

ஆனால் தெரிந்து கொள்ள வேண்டாம் என்பதே அவளது அடிமனத்து விருப்பமாக இருந்தது.

ஒரு பாமர ரசிகையாக அவள் ஜக்குவை அணுகவே மிகவும் விரும்பினாள். வியப்பு தீராதவரை மட்டுமே ரசிக்கக் கூடியவை அவனது மந்திர வித்தைகள். ஒரு வேளை அம்மா சொல்வது போல் அவனது வித்தைகளெல்லாம் எல்லாரும் செய்யக் கூடியவையாகவே இருந்துவிடும் பட்சத்தில், அது நாள் வரை ஜக்கு என்னும் நண்பன் அவளுக்குள் ஏற்படுத்தியிருந்த பாதிப்புகளுக்கு அர்த்தம் இல்லாமல் போய் விடும்.

அவளைப் பொறுத்த அளவில் மிகத் தெளிவாக இருந்தாள். ஜக்குவுக்குப் பூனைகளும், நாய்களும், பட்டாம் பூச்சிகளும், மேஜிக் கணக்குகளும். அவளுக்கு ஜக்கு.

இந்த மாதிரி விஷயங்களில் அதிக ஆர்வம் உள்ள பையன்கள் படிப்பில் படு மோசமாக இருப்பார்கள், என்று அவளது டீச்சர் டோரா மரகதம் சொல்லக் கேட்டிருக்கிறாள்.

"விளையாட்டு, சுத்தறது, கதை கேக்கறது, கதை புஸ்தகம் படிக்கறது, சினிமா போறது, டீ.வி. பாக்கறது – இதெல்லாம் ஃபர்ஸ்ட் ரேங்க் வாங்கற பசங்களுக்குத் தெரியாத விஷயம். கேர்ல்ஸ்... உங்களுக்கு எது இஷ்டம்? ஃபர்ஸ்ட் ரேங்க்கா? மத்ததா?"

குட்டி முதலில் ரொம்பவே பயந்தாள். ஒரு நாள் பள்ளி முடிந்து வீட்டுக்குப்



போகும்போது தன் சந்தேகத்தைத் தயக்க முடன் ஜக்குவிடம் கேட்டாள்.

"ஜக்கு, நீ கிளாஸ்ல எத்தனையாவது ரேங்க் வருவே?"

அவன், அவளை உற்றுப் பார்த்து ஒரு புன்னகை செய்தான். "நாளைக்கு சொல்றேன்" என்று சொல்லி விட்டு ஓடிப் போனான்.

அடக் கடவுளே! இதைச் சொல்ல என்னத்துக்காக முழு இருபத்திநாலு மணி நேர அவகாசம் கேட்கிறான்? யோசித்துச் சொல்ல வேண்டிய விஷயம் தானோ இது? ஒரு வேளை டோரா டீச்சர் சொன்னது போல் ஜக்கு படிப்பில் மட்டு தானோ? எப்பப் பார்த்தாலும் நாய், பூனைகளுடன் விளையாடிக் கொண்டிருக்கிறான். பார்த்தால் நல்ல பையனாகத்தான் இருக்கிறான். ஆனால் படிப்பில்?

அவளுக்கு ரொம்பக் குழப்பமாக இருந்தது. நிஜமாகவே ஜக்கு படிப்பில் செகண்ட், தேர்ட், ஃபோர்த் ரேங்க் என்றால், அதைத் தன்னால் தாங்கிக் கொள்ள முடியுமா என்று அவளுக்குச் சந்தேகமாக இருந்தது. கேட்டிருக்கவே வேண்டாமோ என்றும் தோன்றியது.

சட்டென்று கண்கள் நிரம்பி, பாதை அலையடித்தது. பாவாடையால் துடைத்துக் கொண்டு வீட்டுக்கு ஓடினாள்.

ஜக்கு அவளது பள்ளியில் படிப்பவன் அல்ல. அவன் விவேகானந்தா வித்யாலயாவில் ஆறாங்கிளாஸ். குட்டி, சர்வோதயாவில் நாலாவது. இரண்டு வீடுகள் தள்ளி வசிக்கிற பழக்கத்தில் உருவான சிநேகிதம். அவனது அறிமுகம் உண்டான தினம் தொட்டு ஒரு நாள் கூடப் பிசிறடிக்காத நட்பு அவர்களுடையது.

அவனுக்கு, அவளுடன் பேசிக் கொண்டிருப்பது பிடிக்கும். அவளுக்கு அவன் பேசுவதையெல்லாம் கேட்டுக் கொண்டிருப்பது பிடிக்கும். தீர்ந்தது விஷயம். அவரவர் செயல்களில் ஒரு போதும் மாறுதல் உண்டானதே கிடையாது. கண்ணுக்குத் தெரியாத நட்பின் வலிமை மிக்க இழையில் இருவரும் ஒரு சேரப் பிணைக்கப்பட்டிருந்தார்கள்.

ஜக்கு அடிக்கடி சொல்வான்: "பாடம் படிக்கறது மட்டும் போதாது குட்டி. பலதும் கத்துக்கணும். அப்பத் தான் சயின்டிஸ்டா, பொயட்டா இன்னும் என்னென்னவா ஆக நினைக்கறோமோ அதெல்லாம் முடியும்."

ஜக்கு என்னவாக நினைத்திருக்கிறான்? அவன் தான் எத்தனையாவது ரேங்க் என்பதைச் சொல்லும்போது கேட்க வேண்டும் என்று அவள் நினைத்துக் கொண்டாள்.

அன்றிரவு ஏழு மணிக்கு ஜக்கு அவள் வீட்டுக்கு வந்தான்.

அவளுக்கு ரொம்ப ஆச்சர்யமாகப் போய்விட்டது. ராத்திரி வேளையில் அவன் அவள் வீட்டுக்கு வருவது அது தான் முதல் முறை.

"என்னதுடா?" என்றாள் குட்டி.

"கேட்டியே? இந்தா, நீயே பார்த்துக்கோ."

ஜக்குவின் ப்ராக்ரஸ் ரிப்போர்ட் அது. அவளுக்குப் பார்க்க வேண்டியதே இல்லை என்று உறுதிபடத் தோன்றியது. அவன் கண்களில் தான் எத்தனை தன்னம்பிக்கை! எத்தனை சிநேக பாவம்! தெளிவு! ரேங்க் குறைந்த பையன்கள் யாருக்கு இது சாத்தியம்? வாய்ப்பே இல்லை.

"பாரு" என்றான் ஜக்கு.

"வேணாம். எனக்கே தெரியும். நீ ஃபேர்ஸ்ட் ரேங்க் தானே?"

"உம்" என்றான் ஜக்கு.

"அதான் நினைச்சேன். ஆனா எங்க டீச்சர் தான் வேற மாதிரி சொன்னா."

"என்னவாம்?"

"உன்னை மாதிரி எல்லாத்துலயும் கெட்டிக்காரனா இருந்தா, படிப்பு வராதாம்."

ஜக்கு சிரித்தான்.

குட்டி அவனுக்கு ஒரு தேன் குழல் கொண்டு வந்து கொடுத்தாள்.

"யார்ராது? எம்பொண்ணோட ஃப்ரெண்டா?" என்று கேட்டுவிட்டு குட்டியின் அப்பா அன்றைய மாலை தினசரியுடன் உள்ளே போனார்.

"ஆமா சார். ஜகன்னாதன்" என்றான் ஜக்கு.

குட்டி கேட்டாள்: "ஒரு கேள்விக்குப் பதில் சொல்லு. ஃப்யூச்சர்ல நீ என்னவா ஆக விரும்பறே?"

அவன் ஒரு கணம் யோசித்தான். பிறகு சொன்னான். "ஆசை இருக்கு. ஆனா முடியாது!"

"ஏன்?" அவளுக்கு ஒரே வருத்தமாகப் போய்விட்டது. அப்படியென்ன முடியாத ஆசை வைத்திருப்பான்?

"சொல்லட்டுமா? சிரிக்கக் கூடாது."

"காட் ப்ராமிஸ். சிரிக்க மாட்டேன். சொல்லு."

அவன் சொன்னான்: "நான் ஒரு பட்டாம் பூச்சியா ஆகணும்."

அவளுக்கு நிஜமாகவே சிரிக்கத் தோன்றவில்லை. அது ஒரு முடியாத ஆசை என்பதாகவும் படவில்லை. ஜக்கு நினைத்து, முடியாமல் போகக் கூடிய விஷயமும் இருக்க முடியுமா என்ன? நிச்சயம் முடியும். அவனால் முடியும். ஒரு பட்டாம்பூச்சியாக முடிந்தால், அந்த அனுபவம்தான் எத்தனை பரவசமாயிருக்கும்!

"எனக்கு நீ பட்டாம்பூச்சி பிடிக்கக் கத்துத் தரியா?" அவள் தயங்கித் தயங்கிக் கேட்டாள்.

"அடக் கடவுளே! அது பிடிக்கறது இல்ல குட்டி! பிடிக்கறதுன்னா மத்த பசங்க மாதிரி வத்திப் பெட்டியோட அலையணும். கொலைகாரன் மாதிரி அப்ப நாம பூச்சிக்குத் தெரிவோம். நான் பண்றது, பட்டாம் பூச்சியைக் கூப்பிட்டுக் கொஞ்சறது. ஏய், ஏய், எங்கிட்ட வா, நான் உனக்கு விளையாட்டுக் காட்டறேன்னு கூப்பிடணும். அதுங்காதுல விழுந்து அது வரும்."

இத்தகவல் குட்டிக்கு உண்மையிலேயே பேராச்சர்யமாக இருந்தது.

"என்னது? பட்டாம் பூச்சிக்கு நீ பேசறது கேக்குமா?"

"ஆமா."

"அதுக்குத் தமிழ் புரியுமா?"

"நீ இங்கிலீஷ்ல கூப்பிட்டா கூடப் புரியும்."

"மை காட்!" என்று கத்தினாள் குட்டி. "நீ காட் ப்ராமிஸாவா சொல்றே?"

"மதர் ப்ராமிஸ்."

"ஐயோ" என்றாள் குட்டி.

அந்த வியப்பு அவளுக்குத் தீரவே இல்லை. ஒரு வாரம், பத்து நாள், ஒரு மாதம். ஆனால் அன்று தொடங்கி ஒரு நாள் கூட வண்ணத்துப் பூச்சி எதுவும் அவள் கண்ணில் தென்படாமலேயே இருந்தது.

அன்றுதான் பட்டது. ஜன்னலோரம் எட்டிப் பார்த்த செம்பருத்திக் கிளையில், பூவோடு பூவாக.

ஜக்கு சொன்னதைப் பரீட்சித்துப் பார்த்துவிட வேண்டும் என்று அவளுக்குத் தோன்றிவிட்டது. பூவைப் பறிக்கும் தன் திட்டத்தைத் தற்காலிகமாகக் கைவிட்டு, ஓசைப்படாமல் ஜன்னலருகே போய் நின்று கொண்டாள். மனத்துக்குள் ஒரு முறை கடவுள்களையெல்லாம் வேண்டிக் கொண்டு, "ப்ளீஸ்! நான் உன்னைக் கொஞ்சணும். ஜக்கு கூப்டா வர மாதிரி என் கிட்டயும் ஒரு வாட்டி வாயேன்? ஒரே ஒரு வாட்டி? தொட்டுப் பார்த்துட்டு விட்டுடறேன். நிச்சயம் உன்னைக் கொல்ல மாட்டேன்" என்று மனத்துக்குள் உருகிக் கேட்டாள்.

மூடியிருந்த அவள் விழிகளிலிருந்து ஒரு துளி நீர் கசிந்தது.

ஜன்னலைப் பிடித்திருந்த வலது கையின் புறத்தில் மெத்தென்று ஓர் உணர்வு தோன்றியது. வலிக்காமல் இமை பிரித்துப் பார்த்தாள்.

"ஜக்கூ...!"

சந்தேகமே இல்லை. அவளது புறங்கையின் மேல் குட்டியுருவமாக அவன் தான் அமர்ந்திருந்தான். இரண்டு சிறகுகளுடன், மஞ்சள் வண்ணத்தில், பட்டுப் போல.

(தொடரும்)

கூல் கலாம்!

அண்மையில், பீஹார் மாநிலத்துக்குச் சென்றிருந்த ஜனாதிபதி கலாம், அங்கிருந்த பால் வளத்துறைக்கும் திடீர் விஸிட் அடித்தாராம். அங்கிருந்தவர்கள், கப்புக்கப்பாக, ஐஸ்கிரீம் கொடுத்து, உபசரிக்க, "ஸாரி... நான் டயட்டில் இருக்கிறேன்" என்று தயங்கினாராம் கலாம்.



"இது பீஹார் பால் வளத்துறையின் ஸ்பெஷாலிட்டி... சர்க்கரை வியாதிக்காரர்களுக்காகத் தயாரிக்கப்படும் சுகர் ஃப்ரீ, கலோரி ஃப்ரீ ஐஸ்க்ரீம்" என்றதும் கலாம் ஆர்வமாகி, மேலும் சில தகவல்களைக் கேட்டுக் கொண்டாராம்.


— கௌதம் ராம்

மாறுவேடத்தில் சச்சின்!



சினிமா நட்சத்திரங்கள் ரசிகர்கள் தம்மை அடையாளம் கண்டு பிடிக்காமலிருக்க, மாறுவேடத்தில் சினிமாவுக்குச் செல்வதுபோல, மும்பை வொர்லியில் உள்ள சத்யம் தியேட்டரில் 'ரோஜா' படத்தை மாறுவேடத்தில் சென்று ரசித்தார் ஒரு கிரிக்கெட்டர். அவர்: சச்சின்தான்!

காரில் செல்லும்போது சௌரவ் கங்குலி கஸல் கேஸட்டுகளைக் கேட்டு ரசிக்கிறார்.



பளுதூக்கும் சாம்பியன் கர்ணம் மல்லேஸ்வரியின் கணவர் ராஜேஷ் தியாகி. அவரும் ஒரு பளு தூக்கும் வீரர்தான்!




''இந்திய 'ஏ' அணிக்கு கேப்டனா நியமிச்சிருக்கறது எனக்கு கிடைச்ச பெரிய அங்கீகாரம். கடந்த சில மேட்ச்கள்ல நான் சரியா ஆடலைதான். என்னோட தவறையெல்லாம் நான் சரி பண்ணிட்டேன். இங்கிலாந்து அணி கூட மோதப் போற ஆட்டத்தைப் பாருங்களேன். நிச்சயம் ஆச்சர்யப் படுவீங்க'' என்கிறார் சிவசுந்தர் தாஸ்.

டென்னிஸ் வீரர் ரமேஷ் கிருஷ்ணனும், அவரது தந்தை ராமநாதன் கிருஷ்ணனும் இணைந்து நடத்தி வரும் டென்னிஸ் பயிற்சிப் பள்ளியின் சார்பில், ஆண்டு தோறும் ஒரு டென்னிஸ் போட்டி நடத்தி, சிறந்த ஆட்டக்காரர்களுக்குப் பரிசு தருகிறார்கள். இதில் பங்கேற்று ஆடுபவர்கள் யார் தெரியுமா? பல்வேறு டென்னிஸ் கிளப்களிலும், உறுப்பினர்கள் டென்னிஸ் ஆடுகிறபோது பந்து பொறுக்கிப் போடுகிறவர்கள் தான்!



"இந்திய கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டு முக்கியஸ்தர்கள், கிரிக்கெட் போர்டு தேர்தல் சமயத்தில் காட்டுகிற அக்கறையில் முப்பது சதவிகிதம் கிரிக்கெட் விளையாட்டின் மீது காட்டினால் போதும், இந்திய கிரிக்கெட்டுக்கு ரொம்பப் பிரயோஜனமாக இருக்கும்." இப்படி அதிரடி கமெண்ட் அடிப்பவர் கிரிக்கெட்டர் நவ்ஜோத் சிங் சித்துதான்!



● உலகப் புகழ் பெற்ற டென்னிஸ் வீராங்கனை செரினா வில்லியம்ஸுக்குப் பிடித்த அமெரிக்க நகரம் லாஸ் ஏஞ்சல்ஸ். அங்கே இவரைக் கவர்ந்த விஷயம்? அங்குள்ள 'நகங்களுக்கான பிரத்யேக அழகு நிலையங்க'ளுக்குப் போய் கை, கால் நகங்களைச் சீர் செய்து அழகு படுத்திக் கொள்கிறபோதே போனஸாக, தோள்களுக்குக் கிடைக்கும் மஸாஜ்!

● 'இன்று உலகில் எந்தக் கால்பந்து விளையாட்டு வீரருக்கு வர்த்தக ரீதியில் மிகுந்த செல்வாக்கு' என்று சர்வே நடத்தியதில் நெம்பர் ஒன் ஆக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவர் டேவிட் பெக்காம். இந்த இங்கிலாந்து ஆட்டக்காரர் விளம்பரங்கள் மூலம் சம்பாதிப்பது சுமார் முந்நூறு கோடி ரூபாய். இவருக்கு அடுத்த இடம் ரொனால்டோவுக்கு.

● *"கல்யாணமா? அது என் கவனத்தைச் சிதறடித்து விடும். இப்போதைக்கு கோல் பிரண்டு, கல்யாணம் எதுவும் கிடையாது." இப்படி கட் அண்ட் ரைட்டாகச் சொல்பவர் பிரபல கார் ரேஸ்காரரான நாராயண் கார்த்திகேயன்.*



ரிடையர் ஆன கிரிக்கெட்டர்கள் டி.வி. விமர்சகர்களாக மாறுவார்கள். ஆனால் டென்னிஸிலிருந்து ஓய்வு பெறாமலேயே டி.வி. விமர்சகர் என்ற புது அவதாரம் எடுத்திருக்கிறார் லியாண்டர் பயஸ்.

● உலகப் புகழ்பெற்ற குத்துச் சண்டை வீரர் முகமது அலி இதுவரை மூன்று மனைவிகளை விவாகரத்து செய்து விட்டு நான்காவது மனைவியுடன் வசிக்கிறார். மூன்றாவது மனைவி வெரோனிகாவுக்குப் பிறந்த மகள் லைலா. அப்பா போலவே களமிறங்கியிருக்கிறார் லைலா அலி. பெற்றோருக்கு விவாகரத்து ஆனபோது லைலாவின் வயது ஏழு.

● சென்னை பார்க் ஷெராட்டன் ஓட்டலில், 'விஜய்'ஸ் ஸ்போர்ட்ஸ் கேப்' என்று ஒரு காபி ஷாப் இருக்கிறது. டென்னிஸ் வீரர் விஜய் அமிர்தராஜால் உருவாக்கப்பட்ட இதன் நுழைவாயிலில் டேவிஸ் கப் மாதிரி உருவம் இருக்கிறது. உள்ளே பல்வேறு விளையாட்டு வீரர்களின் படங்கள். மெனு கார்டு, டேபிள் டென்னிஸ் பேட் உருவில் இருக்கிறது.

தொகுப்பு : எஸ். சந்திரமௌலி



பரிகார ஸ்தலமான இராமேஸ்வரத்தில்
ஆடி அமாவாஸை திதியில்
அன்னதானம் செய்வோம் வாருங்கள்!

அமாவாஸையில் சூரியனும் சந்திரனும் ஒரே நேர்க்கோட்டில் சஞ்சரிப்பதால் அன்றைய தினம் மனிதர்களது புத்தி சஞ்சலம் இல்லாமல் தெளிவாகச் செயல்படுகிறது. நாம் எதை நினைத்து அமாவாஸை தினத்தில், இராமேஸ்வரத்தில் தான தர்மங்கள் செய்கிறோமோ, அந்த எண்ணங்கள் பல மடங்கு உறுதியோடு வெற்றி பெறும். ஆடி அமாவாஸை அன்னதானம் மேலும் சிறப்பான பலன்களை அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

அன்புடையீர், அனேக நமஸ்காரம். தலம், தீர்த்தம், மூர்த்தி இவற்றால் சிறப்புக்குரிய பல க்ஷேத்ரங்களில் இராமேஸ்வரம் பெருமைமிக்க புண்ணிய ஸ்தலமாகும். ஸ்ரீ இராமனும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவும், முனிவர்கள் பலரும் இங்கு வந்து நீராடியதால் இராமேஸ்வரம் க்ஷேத்ரத்திற்கு மென்மேலும் பெருமை உண்டு. இராமேஸ்வரத்தில் அன்னதானம் செய்வதும் ஜபம், ஹோமம், தானம் செய்வதும் என்றென்றும் அழியாத பலனைக் கொடுக்கும்.

இராமேஸ்வரத்தில் அமாவாஸை தினத்தில் அன்னதானம் செய்தால் மனித குலம் மாபெரும் புண்ணியத்தை பெறும். புத்திரப்பேறு உண்டாகும். நாகதோஷம் முதலியன நீங்கும். இராமேஸ்வரத்தில் அமாவாஸை அன்று அன்னமளிப்பவன் ப்ராணனளிப்பவன் ஆகிறான். இந்த புண்ணிய பூமியில் அன்னமளிப்பவன் மிக்க செல்வந்தராய் பிறப்பான். அன்னதானம் செய்பவனுக்கு போகமும், ஆயுளும், அழகும் பெருகும். பலம், புகழ், கீர்த்தி இவை உண்டாகும்.

★ தடைபட்ட திருமணம், புத்திர பாக்யம் இவை உண்டாகும் ★ வறுமை அகல ★ கொடிய நோய்கள் நீங்க ★ தொழில் மந்தம் நீங்கி முன்னேற்றம் காண ★ பிரிந்தவர்கள் ஒன்றுசேர ★ நீண்ட ஆயுள், கடன் தொல்லையிலிருந்து விடுதலை ★ மனநிம்மதி பெற ★ பெற்றோர், மூதாதையர் நினைவு நாளில் ★ ஆக நீங்கள் நினைத்த காரியம் நிறைவேற நாங்கள் உங்கள் சார்பாக வடை, பாயசத்துடன் அன்னதானமளித்து, பிரஸாதம் அனுப்பி வைக்கிறோம்.

★ சிறிய தொகை மற்றும் அரிசி போன்ற உணவுப் பொருட்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.
★ ரூ.500 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் ஒரு ஆண்டுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.1000, ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு கந்தபுராணம் (அ) பகவத்கீதை புத்தகம் அனுப்பி வைக்கப்படும்.

இராமேஸ்வரத்தில் பிறந்தநாள், திருமணநாள் என நீங்கள் நினைக்கும் நாளில் அன்னதானம் செய்ய எமது அறக்கட்டளை சிறப்பான ஏற்பாடுகள் செய்துள்ளன. ஆகவே, நீங்கள் நினைக்கும் நாளில் அந்தணர்கள், சாதுக்கள், ஏழைகளுக்கும் அன்னதானம் செய்யலாம்.

நன்கொடை அனுப்பும் அன்பர்கள் **GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST, CHENNAI-41** என்ற பெயரில் CHEQUE/D.D./M.O. மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். என்றென்றும் புனித ஸேவையில் மனப்பூர்வமாக செயலாற்றும் எமது பணிக்கு உங்களது ஒத்துழைப்பை நாடுகிறோம்.

CHEQUE/D.D./M.O. அனுப்ப வேண்டிய முகவரி :

கோபுர தரிசனம் அன்னதான அறக்கட்டளை
GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST

M-11/F-4, RAGAM APTS., I MAIN ROAD, THIRUVALLUVAR NAGAR,
THIRUVANMIYUR, CHENNAI - 600 041. SOUTH INDIA
☎: (044) 24900303, 24900603, 24416122 Mobile : 94441 16300

ஆடி அமாவாஸை நாளில் நேரில் கலந்து கொள்ள விரும்பும் அன்பர்கள் முன்பதிவு செய்துகொள்ளவும்.

★ நீங்கள் தேடும் மனநிம்மதி அன்னதானத்தில் கிடைக்கிறது ★ ஸர்வேஜனா: - ஸுகினோபவந்து

அட்ரஸ் புத்தகம்

வெகு நாட்களாக அட்ரஸ் புத்தகத்தை மாற்ற வேண்டும் என்று நினைத்துக் கொண்டே இருந்தேன். இருபத்தைந்து வருடங்களாக உபயோகித்து வந்த புத்தகம் என்றால் நம்ப முடிகிறதா? உண்மையில் அது ஒரு டைரி. 1978ஆம் வருட டைரி. டைரி வைத்துக் கொள்வதை நான் ஒரு கௌரவமாகக் கருதிய காலம். டைரியின் கடைசிப் பக்கத்தில் முகவரிகள் எழுத வசதியாக ஒரு தனிப் புத்தகம். டைரியில் பல குறிப்புகள்: மகளின் கல்யாணக் கணக்கு வழக்கு, மகனின் கல்யாணத்திற்கு அழைக்க வேண்டியவர்களின் பட்டியல், பேரனின் ஆயுஷ் ஹோமத்தில் ஆசிர்வாதமாக வந்த பரிசுப் பட்டியல், என்று பல இனிமையான நிகழ்வுகளின் அடையாளங்கள். திடீரென்று செலவைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று தோன்றிய சில மாதங்களின் மாதாந்திரக் கணக்கு வழக்குகளும் உண்டு. பல பழைய கடிதங்களைப் பத்திரப்படுத்தி வைக்கவும் டைரி உபயோகப்பட்டது. டைரியின் ஓரங்கள் அழுக்காகி நைந்து போய்விட்டன. ஒரு நல்ல புத்தகம் வாங்கி மறுபடியும் எல்லா முகவரிகளையும் எழுத வேண்டும். டைரியை மட்டும் ஞாபகார்த்தமாக வைத்துக் கொள்ளலாம்.

போன வருடம் அமெரிக்காவிலிருந்து விடுமுறைக்கு வந்திருந்த மகள் பூஜாவிடம் டைரியைக் காண்பித்தேன். பெரியதாக சுவாரஸ்யம் காட்டாமல், "அதான் நிறைய வீடியோ எடுத்தோமே அப்பா" என்று சொல்லி விட்டாள். நிகழ்வுகளைப் பதிய வைக்கலாம், நினைவுகளை நாம்தானே அசை போட வேண்டும்?

நான்தான் இந்த மாதிரி உணர்ச்சிபூர்வமாக இருக்கிறேனோ என்று தோன்றியது. வயதாவதாலா அல்லது நம்மைச் சுற்றி ஏற்படும் மாற்றங்களாலா என்று தெரியவில்லை. நீலா உயிருடன் இருந்தபொழுது அவ்வளவு தெரியவில்லை. அவள் போய் நான்கு வருடங்கள் ஆகிவிட்டன. அவள் இருக்கும்பொழுது கச்சேரி, கோவில், ஷாப்பிங் என்று பொழுது வேகமாக ஓடி விடும். இப்பொழுது தனியாக வெளியே போக வேண்டும் என்றால், ஒரு இனம் புரியாத பயம். 'டக்' கென்று கிளம்பத் தோன்றுவதே இல்லை. அதுவும் சாயந்திர வேளைகளில் மனது மிகவும் சோர்வடைந்து விடுகிறது.

எப்பொழுதும் 'பளிச்' சென்று உற்சாகமாக இருப்பாள் நீலா என்ற நீலயதாக்ஷி. எதைச் செய்தாலும் ஒரு நேர்த்தியிருக்கும். வீட்டில் நல்ல சங்கீதம் இலேசாக ஒலித்துக் கொண்டே இருக்கும். சந்தன ஊதுபத்தியுடன் மல்லிகையின் மணம் கமழ்ந்து கொண்டே இருக்கும். இப்பொழுது அதற்கெல்லாம் யாருக்கும் நேரம் இல்லை. மகன், மருமகள் இருவரும் வேலைக்குச் செல்பவர்கள். அன்பும், மரியாதையும் நிறைய உண்டு. ஆனால் அதை வெளிப்படுத்த நேரம் வேண்டுமே? அவர்களின் குழந்தைகளே அதற்காகப் பொறுமையாக ஞாயிற்றுக் கிழமையை எதிர்பார்க்கும்பொழுது, நான் வருத்தப்படுவது நியாயமில்லை அல்லவா? என்னால் முடிந்த உதவிகளைச் செய்து கொண்டு பொழுதைக் கழித்துக் கொண்டிருக்கிறேன்.

மகனும், மருமகளும் அலுவலகத்திற்குக் கிளம்பும் சமயம் 'ஒரு அட்ரஸ் புக் வேண்டும்' என்றேன்.

"பாம் பைலட் வாங்கித் தரட்டுமா?

நான் உபயோகப்படுத்தும் எலக்ட்ரானிக் டைரி. அதுதான் இப்பொழுது பிரபலம்'' என்றான் மகன்.

''அதெல்லாம் வேண்டாம்பா. எனக்கு பழக்கமும் இல்லை. கண்ணும் தெரியாது'' என்றேன்.

இப்பொழுது உள்ள வாழ்க்கை முறைக்கு ஏற்றதுதான் அது என்று நினைத்துக் கொண்டேன். கல்லூரியில் படித்த நண்பர்கள் உலகின் பல மூலைகளில் உள்ளார்கள். கூட வேலை செய்யும் நண்பர்கள் பலரும் ஒரு வேலையில் மூன்று, நான்கு வருடங்களுக்கு மேல் இருப்பதில்லை. கம்பெனிகளும் நன்றாகச் செயல்படும் காலங்களில், ஊழியர்களுக்கு அள்ளி அள்ளித் தருகிறார்கள். பிஸினஸ் மந்தமடைந்தால் உடனே வேலையை விட்டு நீக்கவும் தயங்குவதில்லை. அதனால் நண்பர்கள் வருகிறார்கள், போகிறார்கள். நிரந்தரமில்லாத உறவுகள். பாம் பைலட்டின் எழுத்துக்கள் போல், சுலபமாக எழுதலாம், சுலபமாக அழிக்கலாம்.



''அப்பா, அட்ரஸ் புக் கேட்டீங்களே'', ஞாபகமாக வாங்கிக் கொண்டு வந்து விட்டாள் மருமகள். இனி தள்ளிப் போட முடியாது. முதலில் கண்ணில் பட்ட பெயர் அனந்த ராமன். என்னுடன் வேலை பார்த்து ரிடையர் ஆனவன். தன் மகனுடன் அமெரிக்கா சென்றுவிட்டான். பூஜாவிற்குப் போன் செய்து அட்ரஸ் கொடுத்திருந்தான். அவளிடம் கேட்ட பொழுது ஈ-மெயில் அட்ரஸ்தான் கொடுத்தாள். ''முழு அட்ரஸ் எங்கே எழுதினேன்னு தெரியலை அப்பா. இப்ப எல்லாம் ஈ-மெயில்தான்'' என்றாள். இங்கும் அதே கதைதான். யாருக்கும் கடிதம் வருவதில்லை. வாழ்த்து என்றாலும் சரி, விஷயம் என்றாலும் சரி, நாலே வரிகளில் ஓர் ஈ-மெயில் அல்லது ஈ-வாழ்த்து. சுலபமாக ஒருவரோடு ஒருவர் தொடர்பு வைத்துக் கொள்ளலாம் என்று இருந்தபொழுதும், இவர்களிடம் ஒரு சோர்வு இருப்பதாகப் பட்டது எனக்கு.

ரம்யா நாகேஸ்வரன்

''பாம் பைலட் வாங்கித் தரட்டுமா? நான் உபயோகப்படுத்தும் எலக்ட்ரானிக் டைரி. அதுதான் இப்பொழுது பிரபலம்'' ''அதெல்லாம் வேண்டாம்பா. எனக்கு பழக்கமும் இல்லை. கண்ணும் தெரியாது''

நேரப் பற்றாக்குறையா, எண்ணப் பற்றாக் குறையா, அல்லது உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள விருப்பம் இல்லையா?

எனக்கு ஆங்கிலத் தட்டெழுத்து ஓரளவு தெரிந்தாலும், நம் கைப்பட எழுதும் சுகம் அதில் இல்லை. நிதானமாக ஒரு காலைப் பொழுதில் எழுந்து, மனத்தில் கோவையாகத் தோன்றும் விஷயங்களை முத்து முத்தாக எழுதும் சந்தோஷம் வருமா?

நண்பர்களிடமிருந்தும் உறவினர்களிடமிருந்தும் வரும் கடிதங்களை டைரியில் பத்திரப்படுத்தி, சில மாதங்களுக்குப் பிறகு எடுத்துப் படிக்கும் பொழுது ஏற்படும் உணர்வே தனி. நீலாவும் நானும் பிரிந்து இருக்க வேண்டிய சந்தர்ப்பம் அவ்வளவாக வந்ததில்லை. பிரசவத்தின் பொழுது மட்டும் சில வாரங்கள் பிரிய வேண்டிய நிலை. நீலாவுக்கு விரிவாகக் கடிதம் எழுதப் பொறுமை கிடையாது. ஒரு தபால் அட்டையில் விஷயத்தைச் சுருக்கி விடுவாள்.

இருந்தாலும் அதில் பாசமும், அக்கறையும் கண்டிப்பாக மேலோங்கி இருக்கும். இன்றும், நூறாவது முறையாக சில கடிதங்களை நான் படித்துப் பார்ப்பதுண்டு. நம் மன நிலைக்கு, ஏற்றாற் போல் கடிதத்தின் தன்மையும் மாறுவது போல் எனக்குத் தோன்றும். உற்சாகமாக இருந்தால் மேலும் புத்துணர்ச்சி கூடும். சோர்வாக இருந்தால், கடித வரிகள் மனத்தை வருடுவது போல் இருக்கும். பழைய கடிதங்களின் அண்மை மிகவும் ஆறுதலளிக்கும் விஷயம். கடிதங்களோடு நான் அமரும் நேரம் நிகழ்ச்சிகளை அசை போட அமைந்த ஒரு தனிமையான புகலிடம்.

பூஜாவின் ஈ-மெயிலை ஒருமுறை படித்துப் பார்த்தேன். "How r u? V r all gr8..." என்று இருந்தது. இணைய பாஷை. அலங்காரமான ஆனால் ஆழமில்லாத வார்த்தைகள். எழுதுபவர் மிகவும் பிஸியாக இருக்கிறார் என்ற தோற்றத்தை உண்டு பண்ணுவதற்கு ஏற்றதாக இருந்தது. ''என்னடா இது? ஆங்கிலமும் இல்லாம தமிழும் இல்லாம...'' என்று பேரனிடம் அங்கலாய்த்தேன். எனக்

மனசுக்குள் மெல்லிய காற்று!

✉ பாரதிபாலன் எழுதிய 'சுவாசிக்கத் தெரிந்தவர்கள்' மினி தொடர் மட்டுமல்ல; மணியான தொடரும்கூட! தொடரின் கடைசி வரியைப் போல் மெல்லிய காற்று எங்களது மனசுக்குள்ளும் ஊர்ந்தது.

திருவாரூர், ஆரூர். அரங்கநாதன்.



✉ உள்ளத்தைத் தொட்ட மினி தொடர். மனத்தில் நிற்கும். 'மாருதி'யின் ஓவியங்களோடு மென்மையான கதையைச் சொன்ன விதம் தனி அழகு!

சென்னை - 39, சுகந்தி நாராயண்

✉ நல்ல கிராமத்து சம்பாஷணைகளைப் படித்தவுடன், சிறு வயது ஞாபகங்கள், நெஞ்சில் அலை மோதின. பண்புள்ள மனிதர்களின் யதார்த்தமான உணர்வுகளைச் சுவாசித்தேன்.

சென்னை - 61, ஆர். நாகராஜன்.

✉ கிராமத்துக் காற்றையும், கோவில் திருவிழா வைபவங்களையும் சுவாசித்தேன். உணர்ச்சிகளின் மொத்த உருவங்களாய் பால்பாண்டி வாத்தியாரும், வசந்தியும் விளங்கினர். வசனங்களும், வார்த்தைகளும் நறுக்குத் தெறித்தாற்போல் விழுந்திருக்கின்றன.

திருநெல்வேலி - 7, வி. திலகம்.

குப் புரியும் தாத்தா. நீ ஏன் அனாவசியமா கவலைப்படறே?" என்றான். நேரம் கிடைக்கும்பொழுது இன்னொருமுறை படிக்கலாம் என்று பார்த்தால் "அதெல்லாம் டெலீட் பண்ணியாச்சு தாத்தா. அடுத்த தடவை அத்தை எழுதும்பொழுது சொல்றேன்" என்று சொல்லிவிட்டான் பேரன். நான் லெட்டர் எழுதலாம் என்று நினைத்து ஏராக்ராமில் நிதானமாக எல்லா விஷயத்தையும் எழுதினேன். அதுக்கும் இதே மின் பதில்தான் (Got pa's lr...)

வாசலில் ஹாரன் சப்தம் நிகழ்காலத்தை நினைவுபடுத்தியது. அடுத்த பெயர் சந்துரு. அவனுடைய கேரளா அட்ரஸ் இருந்தது. அவனைப் பற்றிக் கேள்விப்பட்ட விஷயம் நினைவுக்கு வந்து கண்கள் கசிந்தன. சந்துருவுக்குக் குழந்தைகள் கிடையாது. கணவன் மனைவி இருவரும் மிகவும் சாது. ரிடையர் ஆன பிறகு கேரளாவில் இருந்த தங்கள் பூர்வீக வீட்டிற்குச் சென்றுவிட்டனர். சமீபத்தில் அவன் மாரடைப்பால் போய் விட்டான் என்றும், சந்துருவின் கூடப் பிறந்தவர்களின் மகன்கள் அவன் மனைவியின் மேல் கேஸ் போட்டு அந்த வீட்டை விட்டு அவளைத் துரத்தி விட்டதாக உறவினர் ஒருவர் சொன்னார். அந்த அம்மா சாப்பாட்டிற்கே மிகவும் கஷ்டப்படுவதாகவும் சொன்னார். வருத்தப் பெருமூச்சு விடுவதைத் தவிர என்னால் வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை.

அடுத்த பெயர் துர்கா பலராமன். என் உயிர் நண்பன் சந்தானத்தின் மகள். அவள் திருமணத்துக்கு முன்பே அவன் போய்விட்டான். நானும் நீலாவும்தான் அவள் திருமணத்தை நடத்தி வைத்தோம். துர்காவை ஒரு விநோதமான நோய் படுத்தியது. அவளின் ரத்தத்திலுள்ள செல்கள் ஒன்றோடு ஒன்று ஒத்துப் போகாமல், தங்களையே தாக்கிக் கொண்டன. பலமுறை சிகிச்சை பெற்றாள். முதலில் ஆதரவாக இருந்த கணவன், சில வருடங்களுக்குப் பிறகு பொறுமை இழந்து அவளை விவாகரத்து செய்து விட்டான். துர்கா தைரியமான பெண். இப்பொழுது அவள் டெல்லியில் வேலைக்குப் போய்க் கொண்டு ஒரு குழந்தையை தத்தெடுத்து வளர்ப்பதாகக் கேள்வி. திருமணம் முடிந்த புதிதில் தன்னுடைய புது முகவரியை அவளே தன் கைப்பட இந்த டைரியில் எழுதிக் கொடுத்தாள். அப்பொழுது அவள் முகத்தில் தெரிந்த வெட்கம் கலந்த பெருமிதம், இன்னும் கண் முன்னே நிற்கிறது.

அடுத்தது குணசேகர். அவன் போய் மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. அடுத்து வந்த ஜனார்த்தன் குடும்பத்தாருடன் கோபித்துக் கொண்டு முதியோர் இல்லம் போய்ச் சேர்ந்துவிட்டான். ஜனார்த்தனுக்கு ரத்த அழுத்தம் உண்டு. அதற்குச் சாப்பிடும் மருந்தினாலோ என்னவோ தெரியவில்லை, எதற்கெடுத்தாலும் கோபம். எல்லாருடனும் வாக்குவாதம், சண்டை! இந்த அலோபதி மருத்துவம் உடலைக் குணப்படுத்தினால், மனத்தைப் பாதித்து விடும் போல் தோன்றியது. அவன் மனைவியை சந்தித்தபொழுது, "ஆமாம், இப்பொழுது வீட்டிலே எல்லோரும் நிம்மதியா இருக்காங்க. நான் மாதம் ஒருமுறை போய்ப் பார்த்துட்டு தான் வரேன்" என்றாள் யதார்த்தமாக.

ஒரு வழியாக அடித்தல், திருத்தல்களுக்குப் பிறகு ஒரு பத்துப் பன்னிரண்டு முகவரிகள் தேறின. அட்ரஸ் புத்தகத்தை மூடி வைத்தேன். புதுப் பொலிவுடன் பார்ப்பதற்கு நன்றாக இருந்தது. ஆனால் உள்ளே பல வெற்றிடங்கள் இருந்தன, என் மனத்தைப் போல. ○



"மணவறையில் பொண்ணு அழுதுகிட்டிருக்கிறாளே... இந்தக் கல்யாணத்தில் அவளுக்கு இஷ்டமில்லையோ!"

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை. வெறும் பழக்க தோஷம்தான். வழக்கமாக இந்த நேரம் சீரியல் பார்த்து அழுவாளாம்.

- ஜி. சுந்தரராஜன்

ஜெயிக்கும் வரை நீ அடிமை!



தட்டினேன் திறந்தது!

• தினா

'சித்தி' தொடர் டைட்டில் சாங் மூலம் குழந்தைகளைக் கூட கட்டிப்போட்ட இசையமைப்பாளர் தினா, பேசுகிறார்:

"அப்பா டி. பத்மன், அந்தக்கால இசையமைப்பாளர். எம்.ஆர்.ராதாவோட 'கண்ணாடி மாளிகை' படத்துக்கெல்லாம் இசையமைச்சிருக்காரு. பள்ளிக்கூடம் பக்கம் ஒதுங்கறதுக்கு முன்னாலேயே மியூசிக் பக்கம் மனசு திரும்பிடுச்சு. அப்பாவோடயே சுத்துவேன். பள்ளிக்கூடம் போடான்னு சொன்னா, சரின்னு சொல்லிட்டு அவருக்கே தெரியாம இசைக் கருவிகளோட விளையாடிட்டு இருப்பேன். இசை மேல இருக்கிற ஆர்வத்தைப் பார்த்து, கோட்டு வாத்தியம் பி.ஸ்ரீனிவாச ஐயங்கார்கிட்ட வீணை கத்துக்கச் சேர்த்து விட்டார் அப்பா. ஆறு வருஷம் இதைக் கத்துக்கிட்ட பிறகு யாராவது ஓர் இசையமைப்பாளர்கிட்ட உதவியாளரா சேரலாம்னு முடிவு பண்ணினேன்.

கன்னடத்துல பிரபல இசையமைப்பாளரா இருந்த ஜி.கே.வெங்கடேஷ் சார்கிட்டே சேர்றதுக்கு ரொம்ப ஆர்வமா இருந்தேன். என்னதான் அப்பா இசையமைப்பாளரா இருந்தாலும், இந்த மாதிரி விஷயத்துக்குப் பெரிசா ரெக்கமண்ட் எதுவும் பண்ணலை.

எந்த ஒரு விஷயத்துலயும் போராடி வந்தாதான் அதுல ஒரு சந்தோஷம் இருக்கும்னு சொல்லுவார். அதுவும் சரியாத்தான் பட்டது. தினமும் வெங்கடேஷ் அலுவலகத்துக்கு நடையா நடப்பேன். அவரை அவ்வளவு சுலபமா பார்த்துட முடியாது. காலைல போனா சாயந்திரம் வான்னு சொல்வாங்க. சாயங்காலம் போனா, காலைல வான்னு சொல்வாங்க. அலைஞ்சேன். ஒரு வாரம் இரண்டு வாரம் இல்ல. இரண்டு வருஷம்! அது ஒரு சுகமான அலைச்சல். அப்போதான் சினிமா ஈஸியில்லைன்னு புரிஞ்சுது. வெளியில இருந்து பார்க்கறப்போ, 'அட சினிமா இவ்வளவுதானா?'ன்னு நினைக்கிற மனசு, அதுக்காகப் போராடற போதுதான் 'இவ்வளவு போராடணுமா?'ன்னு கேட்கும்.

ரோட்டுல, டீக்கடையில, தியேட்டர்ல 'ஹிட்'டான பாடல்கள் ஒலிக்கும் போது, இதைப் போல என்னோட பாடலும் ஒலிக்கணுமே'ன்னு நெஞ்சுக்குள்ள குறுகுறுக்கும்.

இரண்டு வருஷம் கழிச்சு வெங்கடேஷ் சார் ட்ரூப்ல சேர்ந்தேன். அங்க நிறைய கத்துக்கிட்டேன். அப்புறம், கங்கை அமரன், தேவா இவங்களோட வேலை பார்த்தேன். பத்து வருஷம் இந்த மாதிரி வேலை பார்த்துகிட்டிருந்தப்போ, மனசுக்குள்ள சின்ன நெருடல். "ஏம்பா இவ்வளவு வருஷம் மியூசிக்ல காலந் தள்ளிட்ட, உன்னால தனியா பண்ண முடியாதா?'ன்னு ஒரு கேள்வி. 'முடியுமே'ன்னு சொல்ல முடியலை. ஏன்னா, என்மேல நம்பிக்கை வரலை. இதுக்குக் காரணம் எனக்கு ஆதரவா இருக்கற மாதிரி இருந்த சிலர். 'நீயெல்லாம் என்னத்தப்பா பண்ணப் போற? ஒழுங்கா வேலையப் பாரு'ன்னு முதுகுல கைவச்சு மனசுல அடிப்பாங்க. வலி, கண்ணீரா மாறும். பல நாள் அழுதிருக்கேன். இந்த நேரத்துல 'ஜெயிக்கும் வரை நீ அடிமை, ஜெயிச்சுட்டா உனக்கு அடிமை'ங்கிற வாசகம் என் மனசுக்கு மருந்து தடவும்.



பாட்டுங்கறது தயாரிப்பாளர், இயக்குனரோட ரசனையை விட, மக்கள் ரசனைக்கு ஒத்துப் போகணும். அவங்க தானே சினிமாவுக்கு நீதிபதியா இருக்கறாங்க. திரும்ப மூணு நாலு வருஷம் இப்படி ஒவ்வொரு இசையமைப்பாளரிடமும் வேலை பார்த்துக்கிட்டிருந்தேன். ஒரு நாள் சொந்தமா நான் போட்ட சில ட்யூன்களை ரெக்கார்ட் பண்ணி வச்சிருந்தேன். நண்பர் ஒருத்தர் கேட்டுட்டு, 'பட்டைய கிளப்புதடா'ன்னு அசந்து போனார். அந்த நேரத்துல ராதிகா மேடம் 'சித்தி' தொடரை ஆரம்பிக்க, டைரக்டர் மனோபாலா மூலமா அதுல எனக்கு வாய்ப்புக் கிடைச்சது. என்னோட முதல் பாடலே பட்டிதொட்டியெல்லாம் எல்லாரோட வாயிலும் முணுமுணுக்கப்படறதை நினைச்சுப் புல்லரிச்சுப் போய்ட்டேன். பதினைஞ்சு வருஷப் போராட்டத்துக்குக் கிடைச்ச வெற்றி தானே இதுன்னு மனசு 'ஃப்ளாஷ் பேக்'ல போய்ட்டு வந்தது. ஆரம்ப கால கஷ்டங்களையும், நான் பட்ட அவமானங்களையும் ஒரே பாடல் தூக்கியெறிஞ்சது.

'சித்தி' தந்த ஊக்கத்தால அப்புறம் சினிமாவுக்குப் பண்ணினேன். இப்ப 'திருடா திருடி', 'அன்பே உன் வாசம்', ஒரு தெலுங்குப்படம்னு என் இசைப் பயணம் போய்கிட்டிருக்கு.

இப்போ நிறையப் பேர் என் வாசல் கதவுகளைத் தட்டிக்கிட்டிருக்காங்க...

— அப்பு





பதினோராம் அத்தியாயம்

கனவும் கற்பனையும்

செம்பியன் வளவன் தன் மகளை அணைத்துக் கொண்டு, "அம்மா! கண்ட கனவு எல்லாம் எப்போதும் பலிப்பது கிடையாது. சில சமயம் பலிப்பதும் உண்டு. கனவுகளின் உண்மைக் கருத்தைக் கண்டுபிடித்துத் தெரிந்து கொள்வதோ மிக்க கடினம். ஆயினும், நீ கண்ட கனவைக் கூறு. நான் அறிந்த சொப்பன சாஸ்திரத்தை யனுசரித்து உன்னுடைய கனவு பலிக்குமா, பலிக்காதா என்று பார்த்துச் சொல்கிறேன்" என்றான்.

மகள் கண்டது ஏதாவது துர்ச் சொப்பனமாயிருந்தால் அதற்கு ஏதாவது நல்ல அர்த்தம் கற்பனை செய்து கூறி, அவளுக்குத் தைரியம் சொல்லி விட்டுப் போகலாம் என்று செம்பியன் நினைத்தான்.

மங்கையர்க்கரசி, "அப்பா! அந்தக் கனவை நினைத்தால் எனக்குச் சந்தோஷமாயுமிருக்கிறது; பயமாகவும் இருக்கிறது. இதோ பாருங்கள், இப்போதுகூட என் தேகமெல்லாம் சிலிர்த்திருப்பதை...!" என்று முன் கையில் ஏற்பட்டிருந்த ரோமச் சிலிர்ப்பைச் சுட்டிக் காட்டிவிட்டு, மேலும் கூறுவாள்.

சில காலமாகவே என்னுடைய கனவில் அடிக்கடி ஒரு சுந்தரமான யௌவன புருஷர் தோன்றி வருகிறார். அவர் என்னை அன்பு கனிந்த கண்களினால் அடிக்கடி பார்க்கிறார். வெளி உலகத்தில் அத்தகைய ஒருவரை நான் பார்த்ததேயில்லை. நமது மாமல்ல சக்கரவர்த்தியைக் காட்டிலும் அவருடைய முகம் களையானது. அவர் என்னைப்

பார்க்கும்போதெல்லாம் 'நீ எனக்கு உரியவள் அல்லவா? ஏன் என்னுடன் இன்னும் வந்து சேரவில்லை?' என்று கேட்பது போலத் தோன்றும். அப்போது என் நெஞ்சு படபடக்கும்! உடம்பெல்லாம் பதறும். நேற்று நான் கண்ட கனவிலும் அந்தச் சுந்தர புருஷர் தோன்றினார். ஆனால், மிக்க பயங்கரமான சூழலுக்கு மத்தியில் அவரை நேற்றிரவு நான் கண்டேன். அவரைச் சுற்றிலும் பத்துப் பன்னிரண்டு பிசாசுகள் அம்மணமாக நின்று ஏதோ கோரமான சப்தம் போட்டுக் கொண்டு கூத்தாடின. அந்தப் பிசாசுகள் ஒவ்வொன்றின் கையிலும் மயில் இறகுக் கத்தை ஒன்று இருந்தது. சில சமயம் அப் பிசாசுகள் தங்கள் மத்தியில் நின்ற சுந்தர புருஷர் மீது மயில் கத்தைகளை வீசி அடிப்பது போல் தோன்றியது! அவர் பாவம், ஏதோ ஒரு தேக உபாதையினால் கஷ்டப்படுகிறவர் போல் காணப்பட்டார். இதற்கிடையில் அவர் என்னைப் பரிதாபமாகப் பார்த்து, "இந்தப் பிசாசுகளிடம் நான் அகப்பட்டுக் கொண்டு விட்டேனே! என்னை நீ காப்பாற்ற மாட்டாயா?' என்று கேட்பது போலிருந்தது.


"நான் உடனே திரும்பி ஓட்ட ஓட்டமாக ஓடினேன். எங்கே ஓடுகிறோம் என்ற நினைவே இன்றி நெடுந்தூரம் ஓடினேன். கடைசியாக ஒரு கோவில் தென்பட்டது. அதற்குள் பிரவேசித்தேன். கோவிலுக்குள் அப்போது யாரும் இல்லை. அம்பிகையின் சந்நிதியை அடைந்து முறையிட்டேன். 'தாயே! என் உள்ளம் கவர்ந்த புருஷரை நீதான் காப்பாற்ற வேண்டும்!' என்று கதறினேன். 'குழந்தாய்! பயப்படாதே! என் குமாரனை அனுப்புகிறேன். அவன் உன்னுடன் வந்து உன் விருப்பத்தை நிறைவேற்றுவான்!' என்று ஒரு அசரீரி பிறந்தது. அசரீரி சொல்லி நின்றதோ இல்லையோ, அம்பிகை விக்கிரகத்தின் அருகில் திவ்ய மோகன ரூபங் கொண்ட ஒரு பாலன் நின்றதைப் பார்த்தேன். 'என் குமாரனை அனுப்புகிறேன்' என்று தேவி சொன்னபடியால் வள்ளி நாயகன்தான் வரப் போகிறார் என்று எண்ணினேன். ஆனால், அங்கே நின்ற பிள்ளையோ விபூதி ருத்ராட்சம் தரித்த சிவயோகியாகக் காணப்பட்டார். இனிமையும் சாந்தமும் நிறைந்த குரலில் அந்தப் பிள்ளை, 'தாயே! என்னுடன் வா! உன் நாயகனைக் காப்பாற்றித் தருகிறேன்!' என்றார். அந்தத் தெய்வீகக் குழந்தையின் திருவாயில் 'உன் நாயகன்' என்ற வார்த்தைகள் வந்ததும், எனக்கு மெய் சிலிர்த்தது. உடனே உறக்கம் நீங்கி எழுந்து விட்டேன்! அந்தச் சுந்தர புருஷர் காப்பாற்றப்பட்டாரோ இல்லையோ என்ற சந்தேகத்தினால் இன்னமும் என் உள்ளம் துடித்துக் கொண்டிருக்கிறது. நான் கண்ட கனவின் பொருள் என்ன, அப்பா? அதனால் எனக்கு ஏதேனும் தீமை விளையுமா? அல்லது நன்மை ஏற்படுமா?'' என்று புதல்வி கேட்டு வாய்மூடு முன்னே, "கட்டாயம் நன்மைதான் ஏற்படும்!'' என்று செம்பியன் உறுதியாகக் கூறினான்.

சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்து விட்டு அச் சோழர் பெருந்தகை மேலும் கூறியதாவது: "நீ கண்ட கனவு ஏதோ தெய்வீகமாகத் தோன்றுகிறது. உன் மனதுக்கிசைந்த சுந்தர மணவாளனை நீ இங்கேயே அடையப் போகிறாய். அப்படி நீ அடையும் மணாளனுக்கு ஏதோ பெரிய கஷ்டங்கள் நேரலாமென்றும், நமது குல தெய்வமாகிய முருகப் பெருமானின் அருளால் அந்தக் கஷ்டங்கள் எல்லாம் நீங்கும் என்றும் உன்னுடைய கனவிலிருந்து ஊகித்து அறிகிறேன். என் அருமை மகளே! ஒரு விஷயத்தில் நீ உறுதியாக இருக்க வேண்டும். நான் இல்லாத சமயத்தில் உன்னைத் தேடி அதிர்ஷ்டம் வந்தால் அதை நீ வேண்டாமென்று தள்ளாதே! இராஜ குலத்தில் பிறந்தவன் எவனாவது உன்

அமரர் கல்கி



னைக் கரம் பிடிக்க விரும்பினால், அப்படிப்பட்டவனை மணந்து கொள்ள இப்போதே உனக்கு நான் அனுமதி கொடுத்து விடுகிறேன். போர்க்களத்திலிருந்து நான் உயிரோடு திரும்பி வந்தால் உன்னையும் உன் மணாளனையும் பார்த்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்து ஆசிர்வதிப்பேன். ஒருவேளை போர்க்களத்தில் உயிர் துறக்



கும்படி நேரிட்டால், ஆவி வடிவத்திலே திரும்பி வந்து உங்களை ஆசிர்வதித்து விட்டு அப்புறந்தான் வீர சொர்க்கத்துக்குப் போவேன்.''

இவ்விதம் கூறியபோது செம்பியன் வளவனின் கண்களிலிருந்து கண்ணீர் தாரையாகப் பெருகியது. மங்கையர்க்கரசியும் தந்தையின் விசால மார்பில் முகத்தைப் பதித்துக் கொண்டு விம்மினாள்.

பன்னிரண்டாம்
அத்தியாயம்

நெடுமாறன்

மங்கையர்க்கரசி கண்ட கனவின் பொருள் இன்னதென்று செம்பியன் வளவனால் கண்டுபிடிக்க




முடியவில்லையல்லவா?

இவள் தன் கனவைச் சொல்லிக் கொண்டிருந்த அதே நேரத்தில் காஞ்சிக்குத் தெற்கே பத்து காத தூரத்தில் வராக நதிக்கரையில் என்ன நடந்து கொண்டிருந்தது என்பதைப் பார்த்தோமானால், ஒருவேளை அந்தக் கனவின் பொருளை நாம் ஊகித்தறிந்து கொள்ளலாம்.

நடுநிசியில் நிலவொளியில் வராக நதிக்கரையானது அதுவரையில் என்றும் கண்டறியாத காட்சி அளித்தது. மாபெரும் பாண்டிய சைனியம் அந்த நதிக் கரையில் தண்டு இறங்கி இருந்தது. ஆங்காங்கு அமைந்திருந்த கூடாரங்கள் மீது பறக்கவிட்டிருந்த மீனக் கொடிகள், இளங் காற்றில் படபடவென்று அடித்துக் கொண்டிருந்தன. யானைகளும் குதிரைகளும் ரதங்களும் வண்டிகளும் கண்ணுக்கெட்டிய தூரம் காணப்பட்டன. குளிர் அதிகமில்லாத புரட்டாசி மாதமாகையால், வீரர்கள் பெரும்பாலும் திறந்த வெளியில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

தூக்கம் வராதவர்கள் ஆங்காங்கே கும்பல் கூடி உட்கார்ந்து, கதை பேசிக் கொண்டிருந்தார்கள். நடுநிசியின் நிசப்தத்தைக் கலைத்துக் கொண்டு சில சமயம் அவர்களுடைய சிரிப்பின் ஒலி கேட்டது. அத்தகைய கூட்டம் ஒன்றின் அருகில் சென்று அவர்கள் என்ன விஷயத்தைப் பற்றிப் பேசுகிறார்கள் என்று தெரிந்து கொள்வோம்.







பொதுவாக அவ்வீரர்கள் சிறிது கவலையுடனேயே பேசிக் கொண்டிருந்தார்கள். மேலே காஞ்சியை நோக்கிப் போகாமல் மூன்று நாளாக அந்த வராக நதிக்கரையில் சைனியம் தங்கியிருப்பதைப் பற்றியும், அவர்களுடைய சேனாதிபதி நெடுமாற பாண்டியனுக்கு என்ன உடம்பு என்பது பற்றியும் அவர்கள் பேசினார்கள். "உடம்பு ஒன்றும் இல்லை; வேறு ஏதோ காரணம் இருக்கிறது!" என்று சிலர் காதோடு காதாகச் சொன்னார்கள். "இளவரசருக்கு மோகினிப் பிசாசு பிடித்திருக்கிறது!" என்று ஒருவன் சொன்னபோது இலேசாகச் சிரிப்பு

உண்டாயிற்று.

"என்ன சிரிப்பு வேண்டிக் கிடக்கிறது? நாளைக் காலையில் காஞ்சியிலிருந்து பல்லவர் படை கிளம்பப் போகிறது. நாம் நடு வழியில் உட்கார்ந்திருக்கிறோம்!'' என்றான் இன்னொருவன்.

"இங்கிருந்து திரும்பி மதுரைக்குத்தான் போகப் போகிறோமோ, என்னவோ?'' என்றான் இன்னொருவன்.

''அப்படித் திரும்பிப் போவதைக் காட்டிலும் இந்த வராக நதியில் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்ளலாம்!'' என்றான் இன்னொருவன்.

''ஆகா! உயிரை மாய்த்துக் கொள்ள நல்ல வழி கண்டுபிடித்தாய்! இந்த வராக நதியில் தலைகீழாக நின்றால் தண்ணீர் மூக்கு வரையில் வரும். இந்த நதியில் மூழ்கி உயிரை மாய்த்துக் கொள்ள ரொம்பக் கெட்டிக்காரத்தனம் வேண்டும்'' என்றான் இன்னொருவன்.

"எது எப்படியிருந்தாலும் நான் திரும்பிப் போகப் போவதில்லை. வாதாபியிலிருந்து அதைக் கொண்டு வருகிறேன்; இதைக் கொண்டு வருகிறேன் என்று என் காதலியிடம் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். வெறுங்கையோடு போனால் அவள் என்ன சொல்லுவாள்?" என்றான் வேறொருவன்.

''வீர பாண்டியர் குலத்தில் பிறந்தவருக்கு இப்படிப்பட்ட விளக்கெண்ணெய்ச் சுபாவம் எப்படி வந்ததோ?'' என்று ஒருவன் கூறிப் பெருமூச்சு விட்டான்.

இவ்வாறெல்லாம் மேற்படி வீரர்கள் அலுத்துச் சலித்துப் பேசுவதற்குக் காரணமாயிருந்த பாண்டிய இளவரசன் நெடுமாறனை வராக நதிக்கரையோரமாக அமைந்திருந்த அவனுடைய கூடாரத்துக்குச் சென்று பார்ப்போம்.

ஆம்! இதோ வீற்றிருக்கும் இந்தக் கம்பீரமான சுந்தர புருஷன்தான் நெடுமாறன். பல்லவ குலம் தோன்றியதற்கு எத்தனையோ காலத்துக்கு முன்னாலிருந்து வாழையடி வாழையாக வளர்ந்து வந்த பாண்டிய மன்னர் குலத்திலே பிறந்தவன்.

அவனுக்கு எதிரில் ஒரு திகம்பரசமணர் உட்கார்ந்திருக்கிறார். அவருக்கு அருகில் மயிலிறகுக்கத்தை, சுருட்டிய பாய், கமண்டலம் ஆகியவை இருந்தன.

கட்டையாகவும், குட்டையாகவும், மொட்டைத் தலையுடனும் விளங்கிய அந்தத் திகம்பர சமணரைப் பார்த்து நெடுமாறன், "சுவாமி! இன்னும் எத்தனை நேரம் காத்திருக்க வேண்டும்?'' என்று கேட்டான்.

அவன் கேட்டு வாய் மூடுவதற்குள்ளே எங்கேயோ வெகுதூரத்திலிருந்து ஒரு மெல்லிய கம்பனசப்தம் - உடுக்கு அடிப்பது போன்ற சப்தம் - வரலாயிற்று. 'தரிரிம்' 'தரிரிம்' என்று ஒலித்த அந்தச் சப்தம் மெல்லியதாயிருந்தபோதிலும் காது வழியாக உடம்பிற்குள்ளே புகுந்து உடம்பின் ஒவ்வொரு அணுவையும் ஒரு குலுக்குக் குலுக்கியது.

''அதோ! நமக்கு அழைப்பு வந்துவிட்டது! இளவரசே, கிளம்புங்கள்!''என்றார் அந்தச் சமண முனிவர்.

நெடுமாறன் மறுமொழி கூறாமல் புறப்பட்டான். இருவரும் கூடாரத்திலிருந்து வெளியில் வந்து நதிக்கரையோரத்தை அடைந்தனர்! அங்கே ஒரு படகு காத்திருந்தது. அதன் இரு முனைகளிலும் இரு வீரர் துடுப்புடன் காத்திருந்தனர்.

நெடுமாறன் படகில் ஏறுவதற்கு முன் ஒருகணம் தயங்கினான். அதைப் பார்த்த சமணர் "இளவரசே! தங்களுக்கு அச்சமாயிருக்கிறதா? அப்படியானால் வர வேண்டாம்! திரும்பிப் போய்விடுங்கள்!" என்று கூறவும், நெடுமாறன் அவரைப் பார்த்து ஒருதடவை அலட்சியமாக 'ஹ்ூம்' என்று சொல்லிவிட்டுப் படகில் முன்னதாகப் பாய்ந்து ஏறினான்.

சமண முனிவரும் ஏறிக்கொண்டார்.

வீரர்கள் சப்தம் அதிகமாகக் கேட்காத வண்ணம் துடுப்பை மெதுவாகப்

அருள்வாக்கு!

ஒருத்தன் பீரோ நிறையத் துணி வைத்திருப்பதாலோ, கண்ட வேளைகளில் ஹோட்டலுக்குப் போய்க் கண்டதைத் தின்பதாலோ, வீட்டை ஏர்-கண்டிஷன் செய்துகொண்டு விட்டதாலோ, அவனுடைய வாழ்க்கை தரமாகி விடாது. மனம் நிறைந்திருந்தால், அதுவே வாழ்க்கைத் தர உயர்வாகும்.



மனநிறைவு வெளி வஸ்துக்களால் ஒருநாளும் கிடைக்காது. வெளி வஸ்துக்களைச் சேர்க்கச் சேர்க்க மேலும் மேலும் சௌகரியத்துக்கு ஆசைப்பட்டுக் கொண்டு, புதுப்புது வஸ்துக்களைக் கண்டுபிடித்து வாங்கிக் கொண்டேதான் இருப்போம். நாம் இப்படி இருப்பதைப் பார்த்து, வசதியில்லாதவர்களுக்கும் இதே ஆசை வெறியை உண்டாக்கி விடுகிறோம். இதனால் போட்டி, சண்டை எல்லாம் உண்டாகின்றன. வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாக ஏக முஸ்தீபுடன் இறங்கிய பின்தான் சகலருக்கும் எப்போது பார்த்தாலும் எதையாவது வாங்கிக் கொண்டேயிருக்க வேண்டியிருக்கிறது. நமக்கு அது வேண்டும். இது வேண்டும் என்று சதா அரிப்பு இருக்கிற வரையில், நாம் தரித்திரர்கள்தான். இப்போது கோடீஸ்வரனிலிருந்து எல்லோருக்கும் இந்தக் குறை இருப்பதால் எல்லோருமே தரித்திரர்களாகத்தான் ஆகியிருக்கிறோம். பணம் இல்லாவிட்டால்தான் தரித்திரம் என்பதில்லை. பணம் அதிகமாகி விட்டதாலேயே எல்லோரும் தரித்திரர்களாகியிருக்கிறோம்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

போட்டு ஜாக்கிரதையாகப் படகைச் செலுத்தினார்கள்.

படகு அக்கரையை அடைந்தது.

வீரர் இருவரையும் அங்கேயே படகுடன் காத்திருக்கும்படி சொல்லி விட்டு, நெடுமாறனும் சமண முனிவரும் மேலே சென்றார்கள்.

போகப் போக உடுக்கையின் ஒலி அதிகமாகிக் கொண்டு வந்தது. அந்த ஒலியானது ஒருவகைக் காந்த சக்தியைப் போல் நெடுமாறனைக் கவர்ந்து இழுத்தது. இனிமேல் அவன் விரும்பினாலும் திரும்பிப் போக முடியாதபடி அதன் சக்தி கணத்துக்குக் கணம் அதிகரித்துக் கொண்டிருந்தது. நெடுமாறனின் நடையும் விரைவாகிக் கொண்டு வந்தது. கடைசியில் அவனுடைய நடை ரொம்ப வேகமாகி ஓட்டமாகவே மாறியது.

"இளவரசே! நில்லுங்கள். நாம் சேர வேண்டிய இடம் இதுதான்!" என்று சமண முனிவர் கூறியது கனவிலே கேட்பது போல் நெடுமாறன் காதில் கேட்டது.

நெடுமாறன் நின்றான். அவனுக்கு எதிரே பாறையில் குடைந்த குகை ஒன்று காணப்பட்டது. குகையின் வாசலில் இரண்டு துவாரபாலர் நின்றார்கள். உண்மையில் கல்லில் செதுக்கிய சிலைகள்தாம் அவை. எனினும் மயக்கத்தில் ஆழ்ந்திருந்த இளவரசன் ஒரு கணம் அவர்கள் உண்மையான காவலர்கள் என்றே நினைத்தான்.

குகைக்குள்ளேயிருந்து மங்கலான வெளிச்சம் வந்து கொண்டிருந்தது. உடுக்கையின் சப்தமும் அக் குகைக்குள்ளிருந்துதான் வந்தது.

ஆம்! இந்தப் பாறையும் குகையும் துவாரபாலர் சிலைகளும் நாம் ஏற்கெனவே பார்த்தவைதாம்.

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னால் ஆயனச் சிற்பியார் குடைந்தெடுத்த குகைதான் அது. அந்தக் குகையைத் திகம்பர சமணர்கள் கைப்பற்றிக் கொண்டிருந்தார்கள்.

(தொடரும்)

● மஞ்சுதேவன்,
நவிமும்பை.

? ரூ. 25 கோடி வசூல் செய்யும்படி கூறியிருக்கிறாரே கருணாநிதி?

! சிறு வியாபாரிகள், வணிகர்கள் தொழிலதிபர்கள் உஷார்!

● ஜி. குப்புசாமி,
சங்கரபுரம்.

? அ.தி.மு.க. அமைச்சர்கள் வசிக்கும் இலாகாக்களையும் அவர்களது பெயர்களையும் கூறினால் தலைக்கு ஆயிரம் ரூபாய் தருகிறேன் என்று ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் கூறியுள்ளது குறித்து...?

! தமிழக இ. காங்கிரஸ் தலைவர்களில் உட்கட்சிப் பூசலில் இறங்காத ஒரு நபரை இனம் காட்டினால், தலைக்கு ஆயிரம் ரூபாய் தருவதாக எதிர் அறிக்கை பிறக்கக் கூடும்.

● கே.துரைசாமி, மங்களப்பட்டி.

? எதையும் வென்றுவிடத் துடிப்பது மனித மனம். அதை அடக்குவது அவசியமா? இயல்பை ஏன் மாற்ற வேண்டும்?

! மாற்றவே வேண்டாம். அதே துடிப்போடு மனத்தையும் வென்றுவிடப் பாருங்களேன்!

● கு. அரவிந்தராஜ், சேலம்.

? அயோத்தி விவகாரம் முடிவுக்கு வருமா?

! அவ்வளவு இலேசில் முடிவுக்கு வர விட்டு விடுவார்களா? பொன்னான (வோட்டு) முட்டையிடும் வாத்தாச்சே!

● டி.சுப்ரமணியன்,
மேலையூர்.

? ரஜினியை விக்ரம் உண்மையிலேயே முந்திவிட்டாரா...?

! படையப்பா வசூலைத்தான் 'சாமி' மிஞ்சியிருக்கிறது. விக்ரம், ரஜினியை அல்ல! அதுக்கு ஸ்பெஷல் வசிகரம் தேவை.

● டி.கே.அலெக்ஸாண்டர்,
தூத்துக்குடி.

? அரசியல் தலைவர், மதத் தலைவர், சாதித் தலைவர்... இதில் யாருடைய தவறான செயல்பாடு சமுதாயத்தில் பெருத்த பாதிப்பை ஏற்படுத்தும்...?



• 'கோடி'க்கை!

சட்டத்தால் கந்து வட்டியை ஒழிக்க முடியுமா?



• நம்பிக்கை



• வாடிக்கை



• நடவடிக்கை!



• எச்சரிக்கை!



• வேடிக்கை!



• 'புரட்சி'க்கை!

! சாதி, மதம் பெயரைச் சொல்லிக் கொண்டு அரசியல் செய்யும் தலைவரின் செயல்பாடுதான்!

● அ. சின்னசாமி, அம்மாப்பேட்டை.

? மண்ணின் மங்கை மமதா – பொறுமையாயிருந்தால் வருங்காலப் பிரதமர்தானே?

! தேசியப் பிரச்னைகளில் கவனம் செலுத்தி, பார்வையை விரிவுபடுத்தி, கிடைக்கிற மத்திய பதவிகளில் செயல் வீராங்கனை எனப் பெயர் சம்பாதித்து, பொறுமை காத்தால் வாய்ப்பிருக்கிறது. எடுத்தோம் கவிழ்த்தோம் என்ற புரட்சித் தலைவி மனநிலை மமதாவுக்கு உண்டு என்பதை மனத்தில் கொண்டால், பிரதமர் பதவி அவருக்குப் பகல் கனவு!

● பா. செல்வ விநாயகம், சென்னை - 11.

? கூட்டுக் குடும்பத்தில் வாழும் எனக்கு, அம்மாவையும் மனைவியையும் பிரச்னையில்லாமல் சமாளிக்கச் சிறந்த வழி ஒன்றைக் கூறுங்களேன்...?

! 'எனது அம்மா முன்னால், உள்வாக்கட்டிக்கு உன்னைக் கொஞ்சம் மட்டம் தட்டிப் பேசுவேன்; அதைக் கண்டுக்காதே' என்று முன் கூட்டியே மனைவியிடம் சொல்லி வைத்துவிட்டு, உங்கள் அம்மாவின் முன்னால்,

'ஆயிரமிருந்தாலும் எங்க அம்மா மாதிரி ருசியா குழம்பு வைக்க யாருக்கு வரும்!' என்று பேசுங்கள். உங்கள் சாதுர்யத்துக்குக் கிடைக்கும் ரிசல்டைப் பாருங்களேன்!

● **என். பாலகிருஷ்ணன், மதுரை - 1.**

? சட்டத்தால் கந்து வட்டியை அடியோடு ஒழித்துவிட முடியுமா ஸார்...?

! முடியாது ஸார்! தெருவில் சிறுநீர் கழித்தால் அபராதம் / ஜெயில் என்று சட்டம் வந்தது. அதன் கீழ் கைதானவர்களுள் பலர், பெயில் கொடுக்கவும் முடியாமல், அபராதம் செலுத்தவும் முடியாமல் அரசு செலவில் ஜெயிலில் குடியிருக்கிறார்களாம். கந்து வட்டிச் சட்டமும் அப்படித்தான் கைதிகளை உருவாக்குமேயொழிய குற்றத்தை ஒழிக்காது.

● **எஸ்.முரளி, குறிஞ்சிப்பாடி.**

? தமிழகத்துக்கு இந்த ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீடாக முதல்வர் ஜெயலலிதா கேட்ட ஏழாயிரம் கோடி ரூபாயை மத்திய திட்டக் கமிஷன் அப்படியே வழங்க ஒப்புக் கொண்டுள்ளதே...?

! கேட்டதிலும் தப்பில்லை; கொடுத்ததிலும் தவறில்லை. அதைப் பயன்படுத்தப்போகும் விதத்தில்தான் ஏகப்பட்ட கோளாறுகள், தவறுகள், குற்றங்கள் நிகழும். நாமும் சிவனே என்று பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, மறுபடியும் வோட்டுச் சாவடிக்கே போய், வழக்கம்போல் தலையில் மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்வோம்!

● **எஸ்.பாலசந்தர், திருவாரூர்.**

? ஒரு கட்சியின் உட்கட்சித் தேர்தல், கொலை செய்யும் அளவுக்கா தூண்டும்?

! கொலை செய்யத் தூண்டுவது உட்கட்சித் தேர்தல் அல்ல... உட்கட்சிப் பூசல்; விரோதம். தேர்தல் சமயத்தில் இவை அதிகம் தலை தூக்கும்.

● **லெ.நா.சிவகுமார், சென்னை - 33.**

? சோனியா காந்தி தலைவியாக இருக்கும்வரை காங்கிரஸ் கட்சியுடன் உறவு கிடையாது என்கிறாரே ஜெ...?

! ஒரு திருத்தம்: சோனியா பிரதமராக இனங்காட்டப்படும்வரைதான் காங்கிரஸ் தொடர்பு கிடையாது என்கிறார். இதில் ரொம்பத் தெளிவாய் இருக்கிறார் ஜெ. திட்டம் என்ன என்பது நமக்கும் தெளிவாயிருக்கிறது.

● **எஸ்.கோவிந்தராஜன், கோவை - 9.** ✱

? கல்வித் துறையையும் தனியார்மயமாக்கி, கல்விக் கட்டணங்களை உயர்த்தி, பாடப்புத்தகங்களின் விலையை உயர்த்தி, ஜெயலலிதா அரசு ஏழை - பாமர மக்களைக் கல்வி பெற முடியாமல் ஒதுக்குவது, நம் ஜனாதிபதியின் கவனத்தைக் கூடவா கவரவில்லை...?

! இப்படியெல்லாம் விமர்சனம் பண்ணினால் கல்வி கிடைத்து விடாது. உங்க பேர்ல மான நஷ்ட வழக்குதான் வரும்!

● **ஷ்யாமளா ஸ்வாமிநாதன், வல்லக்காடு (திருவனந்தபுரம்)**

! அமெரிக்க ராணுவத்தின் கீழ் இந்திய ராணுவத்தை ஈராக்கிற்கு அனுப்பக் கூடாது என்று சோனியா கூறுவதைப் பற்றி...?

! மிகச் சரியான சிந்தனை. அறிவு பூர்வமாகவும் சரி, உணர்வு பூர்வமாகவும் சரி, மிகத் தவறான முடிவாக அமையும்.

● **பொன்விழி, அன்னூர்.**

? தமிழ் நாட்டில் தண்ணீர்ப் பஞ்சம் இருக்கும்போது, பன்னாட்டு கம்பெனிகள் தண்ணீரை விற்பனை செய்யும் உரிமையை, அரசு ரத்து செய்யாதது ஏன்...?

!ஐய்யயோ! அப்புறம் குடிநீருக்கு எங்கே போவதாம்!

❒ ரூ. 100/- பரிசு பெறுபவர்:

டி.கே. அலெக்ஸாண்டர்,
64161ஏ, பொன்னகரம்,
தூத்துக்குடி - 628002

✱ ரூ.50/- பரிசு பெறுபவர்:

எஸ். கோவிந்தராஜன்,
69, விவேகானந்தா சாலை,
இராம் நகர்,
கோவை - 641 009.

Kosmic Music

உங்களுக்காகவும் உங்கள் குழந்தைகளுக்காகவும்

பெருமையுடன் வழங்கும்

SLOKAS *for* CHILDREN

Part - 2

"Learn"

- *Aadhithyahrudhayam*
- *Margabandhu Sthothram*
- *Mahishaasuramardhini Sthothram*

& Other Slokas



by: S. RAJESWARI

Vol. 1 & 2

FREE !!! Slokas Booklet (Sanskrit & English) Inside Cst. & CD packs

also available

SLOKAS FOR CHILDREN - Part One

அனைத்து கேசட்

கடைகளிலும் கிடைக்கும்

Kosmic Music Pvt. Ltd., Chennai.

No. 33, Shaffee Mohammed Road, Chennai - 600 006. India. Tele : (+91-44) 5214 2500 (Ten Lines)

ESTD 1955 ஸ்ரீ: Ph: 0431-2706823, 2704312

"நன்றி மறவாத யாத்ரீகர்கள் துணை" Cell: 94431-77023

வட இந்தியாவில் கைலாசம், மானசரோவர், கங்கோத்ரி, யமுனோத்ரி முக்திநாத், அமர்நாத் போன்ற க்ஷேத்திரங்களுக்கு ஒருசிலர்தான் போய்வர இயலும். அதற்கு அதிகமான பணவசதியுடன், உடல் வலிமையும், உறுதியும் தேவை என்பதால் எல்லோராலும் போய்வர முடியாத சூழ்நிலை உள்ளது. ஆனால் கேதார்நாத், பத்ரிநாத் போன்ற க்ஷேத்திரங்களுக்கு ஸ்பெஷல் பஸ் மூலம் போய்வரும் வாய்ப்பு எளிதாக உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது **12** நாட்கள் கொண்ட

ஸ்ரீபத்ரிநாத்-கேதார்நாத் ஸ்பெஷல் யாத்திரை

சென்னை–டில்லி–அரித்வார்–ரிஷிகேஷ்–பத்ரி–கேதார்–டில்லி–சென்னை **1-9-2003**ம் தேதி **G.T.** எக்ஸ்பிரஸ் மூலம் ரிசர்வ் செய்து புறப்படுகிறோம். **3 TIER** ரயில் -2x2 பஸ், வழக்கமான போஜன வசதியுடன் ரூ **6275/-** இந்த யாத்திரையில், சென்னை திரு. நல்லதம்பி, கஸ்தூரி, மகமாயி, திருச்சி திரு. ராமபத்ரன், திரு. நாகராஜன், நாகலட்சுமி தம்பதியர், திரு. நடராஜன், புவனேஸ்வரி தம்பதியர், மதுரை திரு. சுப்ரமண்ய ஆசாரி, ராமர், புதுக்கோட்டை திரு.K.விருத்தாசலம், மாரிகண்ணு தம்பதியர் முதலானோர்கள் சேர்ந்துள்ளார்கள். இன்னும் சில டிக்கட்டுகளே உள்ளதால் உடன் பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

ஆடி 18க்கு அரித்வாரில் **கங்கா ஸ்நானம்** செய்யும் **16** நாட்கள் கொண்ட

ஆடிமாத காசி யாத்திரை

27-7-2003ல் சென்னையிலிருந்து தனி **3** டயர் கேரேஜ் மூலம் ஆரம்பம். டில்லி–ஆக்ரா–மதுரா–அரித்வார்–கயா–காசி–அலகாபாத்–சென்னை ரயில் கட்டணம்–போஜனம் உள்பட நபருக்கு ரூ **8950/-** இன்னும் சில டிக்கட்டுகளே உள்ளன. உடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

ஸ்ரீ நாமகிரி டிராவெல் சர்வீஸ் Regd.

34-A/2, அக்ரஹாரம், மேலச்சிந்தாமணி, திருச்சி-2.



குருஜிக்கு மூன்று வயது கூட ஆகாத போது, அந்தக் கால வழக்கப்படி, அவருக்குத் தினசரி பிரார்த்தனை முறைகளைச் சொல்லித் தர, பக்கத்து வீட்டிலிருந்த ஓய்வு பெற்ற ஆசிரியையின் வீட்டுக்குப் பெற்றோர் அழைத்துக் கொண்டு போனார்கள்.

குழந்தையை உட்கார வைத்துவிட்டு, பகவத் கீதையிலிருந்து முதல் வரியைத் தெளிவாக, 'பார்த்தாய ப்ரதிபோதிதாம்' என்று சொல்லிவிட்டு, ''எங்கே திருப்பிச் சொல், பார்க்கலாம்'' என்றார் ஆசிரியை.

குழந்தை, 'பகவதாம் நாராயணேன ஸ்வயம்' என்ற அடுத்த வரியைச் சொல்லியபோது, அப்படியே அசந்து போய் விட்டாராம் அந்த வயதான பெண்மணி.

''இது சாதாரணக் குழந்தை அல்ல. பிறவியிலேயே ஞானம் மிகுந்த குழந்தை!'' என்று பிரமித்துப் போய்ச் சொன்னாராம் அந்த ஆசிரியை.



அன்பின் ஊற்று–2

மயிலிறகு மனசு வேண்டுமா?

ஒரு நல்ல நாளில் குருஜியைப் பள்ளிக் கூடத்தில் சேர்க்க அழைத்துப் போனார்கள் குருஜியின் பெற்றோரான தகப்பனார் கே.எஸ். வெங்கடரத்னமும் (ஆசார்ய ரத்னாநந்தா) தாயார் விசாலாட்சியும். குழந்தையின் அறிவுத் திறனைக் கண்டு வியந்து போன ஆசிரியர், ''இவனை ஒன்றாம் வகுப்புக்குப் பதில் நேராக இரண்டாம் வகுப்பில் சேர்த்து விடுகிறேன்'' என்றார். இரண்டாம் வகுப்பிலும் அதே கதைதான் நடந்தது! ''இவனுடைய அறிவுத் திறனுக்கு மூன்றாம் வகுப்புக்கூடச் சரியாக இருக்காது. நான்காம் வகுப்பில் சேர்த்து விடுகிறேன்'' என்றாராம் ஆசிரியர். ''ஒரே நாளில் எனக்கு மூன்று புரமோஷன்கள் கிடைத்தன'' என்பார் குருஜி வேடிக்கையாக.

ஒரு சாதுவுக்குப் பசி எடுத்தது. ஆனால் அவர் அதை வெளியே காட்டிக் கொள்ள விரும்பவில்லை. தம் இருப்பிடத்தி லேயே சற்று நேரம் அயர்ந்து கிடந்தார். யாரோ ஒரு வழிப் போக்கர் அவரைப் பார்த்துவிட்டுச் சில கனிகளை அவர் முன் வைத்துவிட்டுச் சென்றார். அந்த வழியாகக் கடந்து சென்ற பலரில் அவரும் ஒருவர். அவர் மீது நேசம் தோன்றவே அப்படிச் செய்தார்.

உங்கள் வாழ்க்கை உங்களுக்குப் பிரச்னையாக இருக்கும்போது, உங்களை யாரும் நேசிக்கவில்லை என நீங்கள் குறை கூறுவதில்லை. ஆனால் நீங்கள் பாதுகாப்பாகவும், பத்திரமாகவும் இருக்கும்போது, பிறருடைய கவனத்தை ஈர்ப் பதற்காகப் பாடுபடுகிறீர்கள். பிறர் கவனத்தை ஈர்ப்பதற்காகப் பலர் சண்டை சச்சரவுகளில் கூட இறங்கிவிடுகிறார்கள்.

நீங்கள் நிம்மதியும் மகிழ்ச்சியுமான சூழ்நிலையில் இருக்கும்போதுகூட, உங்கள் மனம் போராட்டத்தை உருவாக்க ஏதாவது காரணத்தைத் தேடிக் கண்டுபிடிக்கிறது. பெரும்பாலும் பெரிய அமளியை உண்டாக்க, மிகச் சிறிய விஷயங்களே போதும். நீங்கள் எப்போதாவது இதைக் கவனித்திருக்கிறீர்களா?

உங்களுக்கு எப்போதும் மயிலிறகு போன்ற இலகுவான மனசு வேண்டுமா? அல்லது வேறுபாடுகள், சச்சரவுகளை அதிகப்படுத்திக் கொண்டு, நீங்கள்தான் நேர்மையானவர், உங்கள் கருத்தே சரியானது என்று சாதிக்க வேண்டுமா?

யோசித்துப் பாருங்கள்...

உங்களுக்குள் இருக்கிற எதிர்மறையான குணம், பூசலை உண் டாக்கக் கூடிய போக்கு, இவற்றை எல்லாம் அவை வித்தாக இருக்கையிலேயே அழிக்க, சாதனை ஒன்றே வழி.

சாதனை என்றால் வேறு எதுவுமல்ல.

ஆன்மிகப் பயிற்சிகள்தாம்.



ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

“இன்னாசிமுத்து மீது அவதூறுகளை வீசியடித்து அவரை விரட்ட சதி நடக்கிறதாம். அந்த நோக்கத்தில் அவர் மீது அபாண்டமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறதாம்” - இந்த வருடம் ஜனவரி மாதம் ‘பாழாய்ப் போகும் பல்கலைக் கழகம், பரிதவிப்பில் பாதிரியார்’ என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரையில் இவ்வாறு நாம் குறிப்பிட்டிருந்தோம். இப்போது டாக்டர் இன்னாசிமுத்து, சென்னை பல்கலைக் கழகத் துணை வேந்தர் பொறுப்பிலிருந்து ராஜினாமா செய்திருக்கிறார். என்ன நடந்தது? ஏனிந்த அதிர்ச்சி முடிவை எடுத்தார் டாக்டர் இன்னாசிமுத்து?

“கடந்த சில மாதங்களாகப் பல்கலைக் கழகத்தின் நிர்வாகம் மிகச் சுறுசுறுப்பாக நடந்து வந்தது. பரீட்சை விடைத்தாள் ஜெராக்ஸ் நகல்களை மாணவர்களுக்கு வழங்குவது, மாணவர்களின் உண்மையான கல்வித் தரத்தை அறிய வழி வகை செய்யும் மதிப்பீடு முறை, ஏழை மாணவர்களுக்கு உதவித் தொகை, செனட் ஹவுஸ் புதுப்பித்தல் என்று பல சாதனைகளைக் குறுகிய காலத்தில் செய்து முடித்தவர் டாக்டர் இன்னாசிமுத்து. இன்னமும் சிறிது காலத்திற்கு அவரைச் சுதந்திரமாக பொறுப்பில் விட்டிருந்தால், சென்னைப் பல்கலைக் கழகத்தை உலகத் தரத்திற்கு மிக முன்னணியில் கொண்டு வந்திருப்பார்” என்று நம்மிடம் சொன்னார் ஸீனியர் பேராசிரியர் ஒருவர்.

“டாக்டர் இன்னாசிமுத்து ஒரு கல்வியாளர்தானே தவிர நெளிவு, சுளிவு தெரிந்த நிர்வாகியல்ல. அவருக்கு ‘வேண்டியவர், வேண்டாதவர்’ என்ற பாகுபாடு கிடையாது. தகுதி, திறமை, விதிகள் இவற்றின் அடிப்படையில் மனிதாபிமானமும் இழையோட முடிவுகள் எடுப்பார்” என்று சொன்ன மற்றொரு பேராசிரியர், “இந்தக் கல்வியாண்டு அட்மிஷனில் டாக்டர் இன்னாசிமுத்து, மேற்கண்ட அளவுகோல்களைக் கடைப்பிடித்ததால் ரொம்பவும் சிக்கலுக்கு ஆளானார்” என்றார். குறிப்பாக, கோட்டையில் இருந்து வந்த சிபாரிசுக் கடிதங்கள் கண்டு கொள்ளப்படவில்லையாம். வழக்கமாக ‘வேந்தர்’ அலுவலகத்திலிருந்து வரும் வேண்டுகோள்களை எந்தத் துணைவேந்தரும் மறுக்க மாட்டார்கள். ஆனால் இந்த முறை அதற்கும் ஆபத்து வந்து விட்டதாம்.



* இன்னாசி முத்து



பழி வாங்கப்பட்டாரா பாதிரியார்?

'ஏற்கெனவே இன்னாசிமுத்து மீது எரிச்சல் கொண்டிருந்த ஓர் அதிகாரி, மற்றும் சில பேராசிரியர்கள் சதி வேலைகளைத் துரிதப்படுத்தி பழி வாங்கி விட்டார்கள்' என்கிறார்கள்.

'பல்கலைக் கழக மானியக் குழு மூலிகை ஆராய்ச்சிக்காகக் கொடுத்த பத்து கோடி ரூபாயை முறைகேடாகப் பயன் படுத்தினார்' என்ற குற்றச்சாட்டின் அடிப் படையில் துணைவேந்தர் மீது விசாரணை நடத்தப்பட்டது. அதேபோல, கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தில் கட்டடம் கட்டியதில் ஊழல் என்று சொல்லி மற்றொரு விசாரணை நடந்தது. இந்த இரண்டு விசாரணைகளிலும் 'டாக்டர் இன்னாசிமுத்து மீது எந்தத் தவறும் இல்லை' என்று கண்டறியப்பட்டதாம். ஆனால் விசாரணை அறிக்கை சம்பந்தப் பட்டவர்களிடத்தில் கொடுக்கப்பட்டு மூன்று மாதங்களாகியும், அவற்றை வெளிப் படுத்தாமல் மூட்டை கட்டி வைத்தார் களாம். அது மட்டுமல்லாமல் "நடந்த விசாரணை சரியல்ல; வேறு ஒரு புதிய விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்" என்றும் ஏற்பாடானதாம். இதை நம்மிடம் சொன்ன பல்கலைக் கழக ஊழியர் ஒருவர் "இந்த விவகாரங்கள் மிகுந்த மன உளைச் சலை அவருக்கு உண்டாக்கியிருக்கக் கூடும். முக்கியமாக பல்கலைக் கழக மானியக் குழு கொடுத்த நிதியை எல்லாத் துறைகளுக்கும் சமமாகப் பிரித்துக் கொடுத்து, ஆக்கபூர்வமான வழியில் அதைச் செலவிட ஏற்பாடு செய்தார் இன் னாசி முத்து. அதை யு.ஜி.சியே பாராட் டியது. இப்படியிருக்க நிதிமுறைகேடு பற்றிய விசாரணை முடிந்த நிலையில் அதை மீண்டும் கிளற வேண்டிய அவசியம் என்ன? டாக்டர் இன்னாசிமுத் துவை எப்படியாவது பழி வாங்க வேண்டும் என்ற கெட்ட எண்ணம்தானே இதற்குக் காரணம்?" என்று கோபத்துடன் கேட் டார் அந்த ஊழியர்.

பல்கலைக் கழகத்தின் பதவியை ராஜினாமா செய்துவிட்டு தமது தாய் வீடான லயோலா கல் லூரிக்கு வந்து செட்டி லாகி விட்டார் இன் னாசிமுத்து. பூச்சி யியல் துறையில் பல அற்புதமான ஆராய்ச்சிகளை மேற் கொண்டிருக்கும் இன்னாசி முத்து, தமது ராஜினாமா குறித்து எதுவும் பேச மறுத்து விட்டார். "தனிப்பட்ட காரணங்களுக்காக ராஜினாமா செய்து விட்டேன்; அவ் வளவுதான்" என்றார் நம்மிடம்.

பயோடெக் இளங்கலை வகுப் பினருக்கான பாடப் புத்தகம் ஒன்றை எழுதிக் கொண்டிருக்கிறார் இன்னாசி முத்து.

— சஞ்சயன்

ஆராதனை



2

பிருத்வி பரமபதத்தின் கதவுகளைத் தட்டிக் கொண்டிருந்தான்.

வாயிலே போட்டதும் கரையாமல், நின்று நிதானமாய் சுவை சேர்த்த வாழைக்காய் வறுவல், இந்திய பாரம்பரியத்தின் இணையற்ற சின்னமாக அவனுக்குத் தோன்றியது. சுவையரும்புகளைச் சீண்டிய உப்பும் காரமும் வெறும் மாயை! அவை கரைந்தபின் தென்படும் துவர்ப்பும் இனிப்பும் கலந்த சமச்சீரான வாழைக்காய் சுவையே பிரும்மம். விழுங்கிய பிறகும் வாயிலே நீடிக்கும் அதன் குணமும் மணமும், அந்த பிரும்மத்தை அனுபவிக்கக் கொடுத்து வைத்தவர்களுக்கு மட்டுமே உரித்தான பேரானந்தம்...

அடாடா! இத்தகு ஏற்றமிகு சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ள ஒரு தர்மபத்தினி மட்டும் அமைந்துவிட்டாளேயானால், அப்புறம் வாழ்க்கையில் வேறு என்ன வேண்டிக்கிடக்கிறது ... வாழைக்காய் வறுவலைத் தவிர...

வரவிருக்கும் மனைவியிடம் அவன் அதிகம் எதிர்பார்க்கவில்லை. அவளுக்கு வாழைக்காய் வறுவல் செய்யத் தெரிந்திருக்க வேண்டும் என்பது கூட அவசியமில்லை. ஒரே நாளில் அதை அம்மாவிடம் அவள் கற்றுக் கொண்டு விட முடியும்...



ஆனால், மேட்ரிமோனியல் டாட் காமில் பார்த்த தலைவிரித்த பிசாசுகள் அவனை அச்சுறுத்துகின்றன. வாய்க்கிற பெண், ம.செ. வரைந்த ரமணிசந்திரன் கதாநாயகிபோல் இருந்தால் மகிழ்ச்சி. சேலையைச் சிராய் உடுத்தி, மங்கள கரமாகப் பூவும் பொட்டும் தரித்து... சை! அமெரிக்காவில் பூவுக்கு எங்கே போவது?... பாதகமில்லை; பிளாஸ்டிக் சரங்களைக் கொண்டு சமாளித்துக் கொள்ளலாம். போட்டோவில் கூடுதல் அழகாய்த் தெரியும்...

"ப்ருத்வி! அசை போடறதை நிறுத்திட்டு இங்கே கொஞ்சம் கவனி..." _ அம்மாவும் அப்பாவும் சாப்பாடு இறங்காமல் தட்டெதிரே உட்கார்ந்திருந்தார்கள். நவநீதா வழக்கமாக உட்காரும் நாற்காலி காலியாக இருந்தது.

"ம்..." ப்ருத்வி வாழைக்காய் திறந்துவிட்ட ஸ்வர்க்கத்தின் கதவுகளைத் தற்காலிகமாய் மறந்துவிட்டு வெளியேறி வந்தான். 'என்ன?' என்பது போல் பார்த்தான்.



அம்மா மூக்கைச் சிந்திக் கொண்டிருந்தாள்.

"அவன்கிட்டே பேசிப் பார்த்தேன்".... என்று ஆக்ஷன் ரீப்ளே ஆரம்பித்தார் அப்பா.

"இதோ பாரு... உன்னைக் கண்டா எங்களுக்குப் பிடிக்கல்லே... எங்களால ஒரு வெள்ளைக்காரனை மருமகப் பிள்ளையா ஏத்துக்க முடியாதுன்னு முகத்துக்கு நேரவே சொன்னேன்..."

"அதனால பரவாயில்லை... நான் நவநீதாவைத்தானே கட்டிக்கப் போறேன்; உங்களை இல்லையே... எதுக்கு இவ்வளவு கோபப்படறீங்க?'ன்னு கேட்டான்!... அதுக்குள்ளே அவளே கீழே இறங்கி வந்தா... அவன் கையைப் பிடிச்சு இழுத்துக்கிட்டு வெளியே போயிட்டா. செல் போன்ல நூறு முறை கூப்பிட்டாச்சு... பதிலே இல்லை..."

– அப்பா முடிக்கவும் அம்மா மூக்கைச் சிந்திவிட்டு ஆரம்பித்தாள்:

"புயல் எச்சரிக்கை வேறு பண்ணிக்கிட்டேயிருக்காங்க... இரண்டு பேரும் எங்க போய்த் தொலைஞ்சாங்களோ தெரியலை... இந்தப் பெண்ணாலே இப்படிப் பிரச்னை வரும்னு நான் நினைக்கவேயில்லை..."

ப்ருத்வி, அம்மா பிள்ளைதான். சாப்பாட்டு ருசியிலும் சரி, சங்கீத ரசனையிலும் சரி. அவன் காந்திமதியின் வக்கணையான வாரிசு. கார் கொள்ளாத சாமான்களும் வாய் கொள்ளாத வம்புமாக

சீதா ரவி

வரும் அவள் தோழிகளையும் அவளையும், ஐந்நூறு மைல் கடந்து நடக்கும் தியாகராஜ ஆராதனைக்குத் தன் காரில் அழைத்துப் போய்வர அவன் தயார்.

அப்பாதானே பெருமாள் கோயில் புரவலர் என்று மகன் ப்ருத்வி சும்மா இருந்து விடுவதில்லை. திருவாராதனைப் பணிகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வான். அவர் என் என்பதற்குள் இவன் எண்ணெயாக மட்டுமின்றிப் புண்ணாக்காகவும் ஆகி, தமிழ்ச் சங்கப் பணிகளில் தோள் கொடுப்பான்.

ஆனால் இந்த ஒரு விஷயத்தில் மட்டும் ப்ருத்வி பெற்றோரிடமிருந்து வேறுபட்டான்.

நவநீதா - ஜெர்ரி பிரவுன் காதல் அவனுக்குப் பிரச்னையாகத் தோன்றவில்லை. மாறாக, தன் பிரச்னைகளுக்கு அது ஒரு தீர்வாகவே அவனுக்குத் தோன்றியது.

நவநீதா! பெயரைப் பொருத்தமாகத்தான் சூட்டியிருக்கிறார்கள் பெற்றோர். நவீன பெண்மையின் புத்திசாலித்தனமும் ஆதி சக்தியின் உக்கிரமும் இணைந்த ஏவுகணை அவள்.

நல்லதொரு நாளில், சம்பிரதாயமாக அவன் ஜாதகத்தை எடுத்து, பெற்றோர் வரன் பார்க்க ஆரம்பித்தார்களேயானால், வீரத் தமிழ் மகள்கள் விரைந்து ஒளிந்து கொள்வார்கள். எதற்கெடுத்தாலும் 'ஏன்? எதற்கு? எப்படி?' என்ற கேள்விகளால் வாழ்க்கையை நிறைக்கும் பெண்ணுடன் குடித்தனம் நடத்த யாரால் ஆகும்!

சம்பிரதாயத்தைச் சார்ந்து இயங்கினால் நவநீதா காலமெல்லாம் கன்னியாக இருக்க வேண்டியதுதான். தொடர் விளைவாக, தானும்...

நினைத்துப் பார்க்கவே நெஞ்சு நடுங்கியது ப்ருத்விக்கு. பட்டுப் புடவையும் பூவும் (பிளாஸ்டிக்தான் என்றாலும்) தரித்த பெண்ணுருவம் கனவோடு கனவாகப் போய்விட்டால்...? சங்கீத நுணுக்கங்களையும், வாழைக்காய் வறுவலையும் சேர்ந்து சுவைக்க, நல்லதொரு துணையின்றி அவன் வாழ்க்கை நலிவுற்று... சே! என்ன கோரக் கற்பனை!

மிக மிக நல்ல வேளையாக, நவநீதாவை ஜெர்ரி பிரவுன் நேசிக்கிறான். தன் வாழ்வின் குறுக்கே கிடக்கும் தடைக்கல்லை நீக்கி, சாபவிமோசனம் அளிக்க வல்லவன் அவனே!

அவனைப் போய் 'பிரச்னை' என்று முத்திரை குத்துகிறார் அப்பா. அம்மா, அவன் பெயரைச் சொன்னாலே மூக்கைச் சிந்திக் கொண்டு அழுகிறாள்.

மேயோ ஃபுட்ஸ் மார்க்கெட்டிங் பிரிவுத் துணைத் தலைவர் என்கிற முறையில் ஏராளமான சிக்கல்களைக் கண்ணிமைக்கும் நேரத்தில் அவிழ்த்துப் பழகிய ப்ருத்வி சொக்கலிங்கம், தன் வாழ்க்கைப் பிரச்னைக்குத் தெளிவும் தீர்வும் தேடினான்...

"கவலைப் படாதீங்க. இந்தப் பிரச்னையை எங்கிட்டே விட்டுடுங்க... இரண்டு பேரும் இப்ப நிம்மதியா சாப்பிடுங்க. சாப்பிட்டு முடிச்சதும் நான் போய் நவநீதாவைத் தேடிப் பிடிச்சு அழைச்சிட்டு வரேன்..." என்றான்.

அமெரிக்க மைய மேற்கு மாநிலம் ஒன்றின் மேட்டுக்குடி நகரம் ராபர்ட்ஸன். அந்த பின் மாலைப் பொழுதில் மொத்த நகரும் பொந்துக்குள் அடைந்து கிடந்தது. பகலெல்லாம் பண வேட்டையாடிக் களைத்துப் போயிருந்த பாமர – பண்டித மக்கள், தொலைக்காட்சி முன் கிறங்கிக் கிடக்க, தெருக்கள் வெறிச்சோடியிருந்தன. ப்ருத்வியின் கார், வழக்கமான காதலர் சந்திப்புக் களங்களிலெல்லாம் நுழைந்து புறப்பட்டு வெளியேறிக் கொண்டிருந்தது. வார இறுதி அல்ல என்பதால், எல்லா இடங்களுமே காற்றாடிக் கொண்டிருந்தன.

'எங்கே போயிருப்பார்கள்?...' என்று மூளையைக் கசக்கினான் ப்ருத்வி. அப்பா – அம்மாவிடம் சவடால் பேசி வந்தாயிற்று... இப்போது திரும்பிப் போய் என்ன பதில்

அமைதி தந்த மாலை

✉ தெய்வத்தின் குரலிலிருந்து தேர்ந்தெடுத்த முத்துக்களை ஒரு மாலையாகக் கோத்து, பல அரிய புகைப்படங்களையும் இணைத்திருந்தது மனத்திற்கு இனம் புரியாத அமைதியைத் தந்தது.

சிம்மவாஹினி
வியாசர் காலனி,

✉ அலை பாயும் மனங்களில் அசட்டு எண்ணங்களுக்கு வழிகொடுக்காமல் வாழ்க்கையை வழி நடத்தும் பொறுப்பை இறைவனுக்கு வழங்கி விட்டு நிம்மதி பெறும்

பக்குவத்தைப் பலப்பல மனங்களுக்கும் வழங்கிய 'கல்கி'க்கு நன்றிகள் பல!
காங்கயம், சேலம் செல்வக்குமார்

✉ 'மாணவனை அடிக்கலாமா?' என்ற தலைப்பில் வந்துள்ள அறிவுரை இன்றைய எல்லாப் பள்ளி ஆசிரியர்களும் பலமுறை படிக்க வேண்டிய மிகச் சிறந்த பகுதி. சபாஷ், பிரமாதமான வெளியீடு.
கொடுமுடி, ந. சேதுராமன்

✉ சத்குருவின் படம், பதம், பாதம், பாடம், யாவுமே பரவசத்தில் ஆழ்த்தி விட்டன!
திசையன்விளை, ஆர். ஜி. ஹரிஹரா



சொல்ல...?'– தீவிர கவலையை இடைமறித்து செல்ஃபோன் அடித்தபோது தூக்கிவாரிப் போட்டது. ப்ருத்விக்கு.

"ஹலோ... நான் ப்ருத்வி..."

அசரீரி போல் மறு முனையில் ஜெர்ரி பிரவுன் தன்னை அறிவித்துக் கொண்டான். நவநீதா தன்னுடன் இருப்பதைத் தெரிவித்து விலாசமும் கொடுத்தான்.

"நீ உடனே இங்கே வரணும் ப்ருத்வி... நீ மட்டும்.... வேற யாருக்கும் சொல்லாம வா..."

"ஓகே..."

ப்ருத்விக்கு அந்தக் கோடை இரவிலும் முதுகுத் தண்டு சில்லிட்டது.

மூன்று வயதில் நவநீதா புடைவைதான் உடுத்திக் கொள்வேன் என்று அடம்பிடித்த இனிய நாட்களை அசைபோட்டு, துயரக் கடலில் மூழ்கி மூழ்கி எழுந்து கொண்டிருந்தாள் காந்திமதி.

பிசாசு! இன்றைக்குப் புடைவை அவளுக்கு ஃபேன்ஸி டிரெஸ். மூன்று ஜீன்ஸ், நாலு சட்டை என்று மாற்றி மாற்றி அணிந்து அழுக்கு செய்வதும், பெண்மைக்கு இழுக்கு செய்வதுமாக நாட்களைக் கடத்துகிறாள். என்றைக்காவது புடைவை உடுத்தினால் அவள் படும் அவஸ்தையைக் காட்டிலும், பார்ப்பவர்களின் அவஸ்தை அதிகமாயிருக்கிறது. இதெல்லாம் போதாத குறைக்கு ஜெர்ரி பிரவுன்!...

சொக்கலிங்கம் டெலிபோனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். 'ப்ருத்வி ஏன் இன்னும் கூப்பிடவில்லை?... ஏழரை மணிக்குப் புறப்பட்டுப் போனான். இரண்டு மணி நேரம் ஆகிவிட்டது. இந்த அவகாசத்தில் மூன்று தடவை நகரை வலம் வந்திருக்கலாம். அப்படியானால், தேடிய இடங்களில் நவநீதா இல்லை... எங்கே போயிருப்பாள்...?'

ஜெர்ரி பிரவுன் தனி வீட்டில் இல்லை என்பது தெரியும். இத்தாலிய நண்பனொருவனுடன் அபார்ட்மெண்ட் பகிர்ந்து வாழ்கிறான். ஒரு வேளை அங்கே போயிருப்பார்களோ...? அதற்கு மேல் கற்பனையை ஓட்டும் துணிவு இல்லை அவருக்கு.

டெலிபோன் அடித்தபோது துணுக்குற்று எழுந்தார்...?

"சொக்கலிங்கம்...!"

"வணக்கம். நான் ஜெயா. காந்திமதி கிட்டே பேசலாமா...?"

"உனக்குத்தான்...!"

தொடர்ந்த உரையாடலின் ஒரு முனை வசனங்கள், நவநீதாவின் கல்யாணம் குறித்து ஜெயா காட்டிய திடீர் அக்கறையை உணர்த்தின.

"ஜாதகமே இன்னும் எடுக்கலை..."


"வயசு இருபத்தியொண்ணுதான்...!"

"இந்தக் காலத்திலே யாரும் அவசரப்படறதில்லையே...!"

கரக்பூர் ஐ.ஐ.டியில் படித்துவிட்டு ஆராய்ச்சிக்கு அமெரிக்கா வந்த தென்பாண்டி நாட்டுச் சிங்கம்; இருபத்தைந்து வயது இளவரசன் இருக்கிறான். இணையாக இன்னொரு வரன் கிடைப்பது துர்லபம். காந்திமதி – சொக்கலிங்கம் விரைவில் முடிவுக்கு வருவது நல்லது. ஜாதகப் பொருத்தத்தில் பிள்ளை வீட்டாருக்குப் பற்றில்லை. கரக்பூர் பட்டதாரி, கார்னகி மெலன் டாக்டரேட், கை நிறைய டாலர், பர்ஸ் நிறைய கிரெடிட் கார்ட்கள் கொண்ட

ஊசி முனை அதிசயம்!

பழைய காலத்து கறுப்பு – வெள்ளைப் படங்களில் மெட்ராஸைக் காட்ட வேண்டுமென்றால், சென்ட்ரல் ரயில் நிலையத்தையோ, எல்.ஐ.சி. கட்டடத்தையோ சிம்பாலிக்காகக் காட்டி விட்டு, கதையைத் தொடருவார்கள். அதே போலத்தான் நியூயார்க்குக்குச் சுதந்திர தேவி சிலை, பாரீஸுக்கு ஈஃபிள் டவர்!



ஆஸ்திரேலியாவுக்கு என்னடா செய்வது என்று கையைப் பிசைந்து கொண்டிருந்தவர்களுக்கு, 'யாமிருக்க பயமேன்?' என்று அபயக்கரம் நீட்டியுள்ளது மெல்போர்னில் உள்ள விக்டோரியா ஆர்ட்ஸ் சென்டர்.

செயின்ட் கில்டா சாலையில் உள்ள இந்தக் கலை நிலையத்தில், ஆஸ்திரேலிய கலைப் பொருட்கள் காட்சிக்கும் விற்பனைக்கும் உள்ளன. இந்தக் கூடத்திலேயே மியூஸியம், பொட்டானிக்கல் கார்டன், பிளே ஹவுஸ் (தியேட்டர்) என பிரமிக்க வைக்கும் சமாசாரங்களும் இருப்பதால், சுற்றுலா நெரிசல் தாள முடியவில்லையாம்!

– அபி

கணேஷ் சுப்ரமண்யம், பெருமாள் திருவாராதனைக்குக் குடும்பத்தோடு வருகிறான். நவநீதா மட்டும் அன்று புடைவையுடுத்தி வரட்டும்... எல்லாம் முடிந்து விடும்... அவனுக்கு முடித்தால் தானே ப்ருத்விக்கு ஒரு பெண் பார்த்து அவனையும் 'செட்டில்' பண்ண முடியும்.

ப்ருத்வியின் ஆறடி சரீரம் அந்தக் காட்சியைக் கண்டு கலகலத்துப் போயிற்று.

ஜெர்ரி பிரவுன் கொடுத்த விலாசத்தில் வாசல் மணி அழுத்த, 'கம் இன்' என்ற குரல் கேட்டது.

கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தபோது நவநீதா பூனைக்குட்டி போல் தரையில் சுருண்டு அமர்ந்திருந்தாள். சோஃபாவின் நுனியில் தொத்திக்கிடந்த ஜெர்ரி பிரவுனின் ஜீன்ஸ் மடியில் அவள் தலை கவிழ்ந்து கிடந்தது. அவன் விரல்கள் அவள் தலையை உரிமையுடன் வருடிக் கொண்டிருக்க... கண்கள் சர்க்கரைப் பாகு சிந்திக்கொண்டிருந்தன.

வாழைக்காய் வறுவல் கூட உணர்த்தாத பிரும்ம ரகசியம் அக்கணத்தில் ப்ருத்விக்குப் புலனாயிற்று...

(தொடரும்)



வீணை காயத்ரியின் வீணை ஒலித் துண்டுதான் தில்லி குடியரசுத் தலைவர் மாளிகையில், டெலிபோனில் காத்திருக்கும்போது இசைக்கப்படுகிறது.

உபந்நியாசக் கலைஞர் கல்யாணபுரம் ஆராவமுதன் பிரபல கம்ப்யூட்டர் நிறுவனமான ஐ.பி.எம்மில் சி.இ.ஓ.வாக இருந்தவர்.

வயலின் மேதை லால்குடி ஜெயராமன், மகன் கிருஷ்ணன், மகள் விஜயலட்சுமி மூவருமே 'ஆர்ட் ஆஃப் லிவிங்' பயிற்சி எடுத்துக் கொண்டவர்கள்.

சங்கீத கலாநிதி ஆர். வேதவல்லியின் மருமகன் உலகின் மிகப் பிரபல விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான 'நாஸா' (NASA)வில் விஞ்ஞானியாகப் பணிபுரிகிறார்.



பாடகி காயத்ரி கிரீஷ் ஒரு மென்பொருள் இஞ்சினியரும் கூட.



டீவி இல்லை; ஊஞ்சல் உண்டு!



நித்யஸ்ரீ மகாதேவனின் அம்மா லலிதா சிவகுமார், தமிழில் பாடல்களும் எழுதுவார். கண் தானம் பற்றி இவர் எழுதிய பாடலை, கோவையில் ஒரு கண் மருத்துவமனை திறப்பு விழாவில் நித்யஸ்ரீ பாடினார்.

'கடம்' கார்த்திக் சம்ஸ்கிருதத்தில் எம்.ஏ. பட்டம் பெற்றவர்.





பிரபல பாடகர் உன்னிகிருஷ்ணனின் தாயார் ஹரிணி ஒரு சிறந்த ஆயுர்வேத மருத்துவர். உன்னியின் மனைவி ப்ரியா, மோகினி ஆட்டத்தில் தேர்ச்சி பெற்றவர்.

வீணைக் கலைஞர் ரேவதி கிருஷ்ணா பல பழைய, சமீபகாலத் திரைப்படப் பாடல்களை வீணையில் இசைத்து ஒலிநாடாவாக வெளியிட்டுள்ளார். ரேவதியின் மகன் நாராயண், ஃபேஷன் டெக்னாலஜி படிக்கும் இளைஞர். கூடவே மிருதங்கமும், வாய்ப்பாட்டும் கற்றுக் கொண்டு வருகிறார்.



குன்னக்குடி வைத்தியநாதன், மூன்று வருடங்களுக்கு ஒரு முறை தமது காரை மாற்றிக் கொண்டே இருப்பார்.



ப்ரியா சகோதரிகளில் ஒருவரான ஹரிப்ரியா தேர்ச்சி பெற்ற ஒரு கிரிக்கெட் ஆட்டக்காரர். மாநில அளவில் விளையாடிய அனுபவம் உண்டு.

மல்லாடி சகோதரர்களில் ஒருவரான ராம்பிரசாத், விஜயவாடா வானொலியில் பணிபுரிபவர். ரவிகுமார் ஆந்திரப் பல்கலைக் கழகத்தில் இசைத்துறையில் ஆராய்ச்சி மேற்கொள்ளவிருக்கிறார்.



மிருதங்கக் கலைஞர் காரைக்குடி மணிக்கு, அவர் சிஷ்யர்கள் சென்ற வாரம் புத்தம் புதிய ஹூண்டாய் ஆக்ஸெண்ட் கார் ஒன்றைப் பரிசாக அளித்தார்கள்.


பம்பாய் சகோதரிகளில் ஒருவரான லலிதாவின் கணவர் சந்திரன்தான் தற்போதைய தமிழக அரசின் அட்வகேட் ஜெனரல்.

'ஸ்ருதி' பத்திரிகையின் ஆசிரியராக இப்போது பொறுப்பேற்றிருப்பவர் கே.வி.ராமநாதன். இவர் முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி.

ரஞ்ஜனி – காயத்ரி சகோதரிகள் வீட்டில் டி.வி. கிடையாது. ஆனால் மிக அழகான பழைய கால ஊஞ்சல் உண்டு.

சன் டி.வி. செய்தி வாசிக்கும் டி.எஸ். ரங்கநாதன் நன்றாகப் பாடுவார். பல பக்திப் பாடல் காசட்டுகளை வெளியிட்டிருக்கிறார்.

– ஜி. ஸ்வாமிநாதன்
சித்தார்த்



அம்மா கொடுத்த டிபன் பாக்ஸை வாங்கிக் கொண்டு நடந்தான் சுந்தரம்... அம்மா வாசலில் நின்று தன்னைப் பார்ப்பதாய்த் தோன்றியது. திரும்பிப் பார்த்தான். அம்மா நின்று கொண்டு தான் இருந்தாள். தான் முதல் முதலாய் டயர் கம்பெனிக்குச் சென்ற நாள் ஞாபகத்துக்கு வந்தது. அன்று சென்றதற்கும், இன்று செல்வதற்கும்தான் எத்தனை வித்தியாசம்! அன்று துள்ளலோடு, ஒரு ஸ்டைலோடு, உற்சாகத்தோடு இருந்தோம்... அந்த நாளைய சந்தோஷம் இன்று இல்லை... எதிர்காலத்தைப் பற்றிய பயம் கொஞ்ச கொஞ்சமாய் ஆளையே தின்று விட்டதாகத் தோன்றியது.


மெயின் ரோட்டிற்கு வந்தான்... பஸ் ஸ்டாப்பை நோக்கி நடந்தான். அவனுக்குத் தன் கம்பெனிக்கு என்ன நம்பர் பஸ்ஸென்று கூட ஞாபகம் இல்லை... மறந்தா விட்டோம்? யோசித்தான். எட்டாம் நம்பரா... ஒன்பதாம் நம்பரா... இப்படிக் கூட மறதி வருமா என்று நினைத்தான். இந்த இரண்டு வருஷங்களாய்த் தொடரும் சோகம் நிறைய விஷயங்களை மறக்கடித்துவிட்டது. இப்படியெல்லாம் கூட வாழ்க்கை இருக்குமா? அதிர்ச்சியுடன் கூடிய ஆச்சர்யம் ஏற்பட்டது. சந்தோஷம், உல்லாசம், உற்சாகம். ஆரவாரம் எல்லாம் போய்விட்டது. நல்ல சாப்பாட்டைக்கூட மறந்தாயிற்று. ஆனாலும்... எதை மறந்தாலும் வசந்தாவை மறக்க முடியாது.

பஸ் ஸ்டாப்புக்கு வந்தான். கூட்டமாய்த்தான் இருந்தது. திரும்ப யோசித்தான். தன் கம்பெனிக்கான பஸ்ஸின் எண் என்ன? பக்கத்தில் இருந்த நபரிடம் "சி.எப்.எப். டயர் கம்பெனிக்கு எட்டாம் நம்பர் பஸ்ஸில்தானே போகணும்?" தன் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதற்குக் கேட்டான். "ஆமா தம்பி..." என்றார் அவர்... எட்டாம் நம்பர் பஸ் வருகிறதா என்று பார்த்தவாறு நின்றான். கம்பெனியை இரண்டு வருஷத்திற்கு முன் மூடிய சமயம். எம்.எய்ட்டியில்தான் கம்பெனிக்குப் போய்க் கொண்டு இருந்தான். வேலைக்குச் சேர்ந்த புதிதில் பஸ்ஸில் போய் வந்தான். ஆறு மாசம் கழித்து - புத்தம் புது சைக்கிளில் பயணமானான். பிறகு செகண்ட் ஹாண்ட் மொபட் ஒன்றை வாங்கினான். பிற்பாடு லோனில் எம்.எய்ட்டி வாங்கி இருந்தான்.

அம்மா சொல்வாள்... "நம்ம கஷ்டமெல்லாம் தீர்ந்து போச்சு.." என்று. ஆனால் உண்மையில் அவை கண்ணுக்குத் தெரியாத விதமாய் இருக்கின்றன. கஷ்டங்கள், அவலங்கள் எல்லாம் மனிதனின் மரணம் வரை இருக்கக் கூடியவை. 'என் கஷ்டமெல்லாம் தீர்ந்து போச்சு' என்று யாராவது சொன்னால் அது பொய்! இதை சுந்தரம் அனுபவ பூர்வமாய் உணர்ந்திருக்கிறான்.

"மாவு ஆட்டி, ஆட்டி இரண்டு தோள் பட்டையும் வலிக்குதுப்பா... ஒரு கிரைண்டர் வாங்கு தம்பி" என்றாள். "பார்ப்போம்... பார்ப்போம்.." என்பான் சுந்தரம். "இரண்டு பேத்துக்கு எதுக்கு கிரைண்டர்?" என்பான். "நான் சொன்னா வாங்க மாட்டே... நாளைக்கு உம் பொண்டாட்டி வந்து வாங்கச் சொன்னா வாங்குவே.." என்று பரிகாசம்

யோகி



செய்வாள். கிரைண்டர் வாங்கினான். பின்னாளில் டயர் கம்பெனியை மூடின பிறகு, அம்மா அந்த கிரைண்டரில் மாவு அரைத்து - மாவு விற்கத் துவங்கினாள்.

"தம்பி... முன்ன மாதிரி மணிக்கணக்கா ரேஷன் கடையில் நிற்க முடியல... கேஸ் அடுப்பு வாங்குப்பா...!" என்றாள். தீபாவளிக்கு வந்த போனஸ் பணத்தில் கேஸ் அடுப்பு வாங்கியாயிற்று.

அம்மா சொன்ன மாதிரி - "நம்ம கஷ்டமெல்லாம் தீர்ந்துதான் போச்சு" என்று சந்தோஷப் பட்டுக் கொண்டு இருந்தபோதுதான் - பணிபுரிந்து கொண்டு இருந்த டயர் கம்பெனியில் பிரச்னை உண்டாயிற்று. முதலில் பணி நேரத்தைக் குறைத்தார்கள். பிறகு ஆட்களைக் குறைத்தார்கள். பிறகு சம்பள பாக்கி ஏற்பட்டது... முத்தாய்ப்பாக ஒரு நாள் கம்பெனியையே இழுத்து மூடி விட்டார்கள்.

அப்போதுதான் அம்மா, பெண் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

"கை நிறைய சம்பாதிக்கிறான். நல்ல லட்சணமான பொண்ணா இருக்கணும். வசதி இல்லன்னாலும் பரவாயில்ல. அவங்க கொடுத்து தான் நமக்கு நிறையப் போகுதா?" என்று அம்மா தரகரிடம் சொன்னாள்.

நாலைந்து பெண்களின் போட்டோக்கள், ஜாதகங்களைத் தரகர் கொண்டு வந்தார். ஒரு பெண்ணின் ஃபோட்டோ பிடித்துப் போக... ஜாதகம் கச்சிதமாய் அமைய, பெண் பார்க்கப் போனார்கள். ஓரளவு வசதியான இடம். பெண் பிடித்துவிட்டது. "தங்களால் முடிந்த அளவு செய்வதாய்"ச் சொன்னார்கள்... மற்ற விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டு இருந்தபோதுதான் கம்பெனியை மூடிவிட்டார்கள்.

கம்பெனி மூடிய இரண்டாம் நாள் பெண்ணின் அப்பா வந்தார். அம்மாவிடம், "மாப்பிள்ளை வேலை பார்க்கிற கம்

பெனியை மூடிட்டதா பேப்பரில் போட்டு இருந்தாங்களே.. நிஜந்தானா?'' என்று கேட்டவாறு வீட்டை மேலும் கீழுமாய்ப் பார்த்தார். ''இது சகஜம்ங்க... நாலு நாள் மூடினா அஞ்சாம் நாள் திறந்துடுவாங்க. இவங்கப்பா அந்த காலத்துல மில்லுல வேலை பார்த்தப்ப இப்படித்தான். எங்களுக்குப் பழகிப் போச்சு. நாம மட்டுமா அங்க வேலை பார்க்கிறோம். நம்மள மாதிரி அஞ்சாயிரம் பேரு. எல்லாத்துக்கும் நடக்கிறதுதானே நமக்கும் நடக்கும்'' என்றாள் அம்மா.

''சரிக்கா... சும்மா கேட்டுட்டுப் போக லாம்னு வந்தேன்'' என்று போய்விட்டார்... இரண்டு நாள் கழித்து தரகர் வந்தார். ''சுந்தரத்துக்கு வேலை போயிடுச்சாம்ல... வேற இடம் பார்த்துக்கிறாங்களாம்.'' அம்மா அதிர்ந்து போனாள்.

எனக்குக்கூட அதிர்ச்சியாய் இருந்தது. வாழ்க்கையில் அதிர்வுகள் நாம் எதிர்பாராத வடிவத்தில் எல்லாம் வருவதாய்த் தோன் றியது... பெண் பார்க்கப் போயிருந்த சம யத்திலேயே வசந்தாவின் முகம் மனசோடு ஒட்டிக்கொண்டு விட்டது... தினமும் அவள் கனவில் வந்தாள்... சிரிப்பாள்... பேசுவாள்... குடித்தனமே நடத்தத் துவங்கி விட்டாள். உதட்டில் உள்ள சிகரெட்டைப் பிடுங்கி எறிவாள். தலையைச் சீவி விடுவாள். கடற் கரை மணலில் கால்கள் பசையப் பசைய கூடவே வந்தாள்.

வெட்டி எறிந்தது போல் ஆயிற்று. சக லமும்.


''இல்லப்பா... திரும்ப வேலைக்கு போயிடுவான்ப்பா. கம்பெனிய ஒரு வாரத்துல திறந்துடுவாங்கன்னு சொல் லுப்பா..'' என்றாள் அம்மா. ''நாம போய் கெஞ்ச முடியாதும்மா... முதல்லயே மனசுல ஒண்ணு தோணுச்சுன்னா அத மாத்த முடியாது. சுந்தரத்துக்கு வேற இடத்துல பார்ப்போம்'' என்று தரகரே சொன்னார். அவருக்கென்ன வந்தது. ஒரு இடத்தில் முடி வது இரண்டு இடத்தில் முடிந்தால் இரண்டு கமிஷன் வருமே...!

கம்பெனி மூடின முதல் இரண்டு மாசம் வேலைக்குச் செல்லாதது குறித்து எந்த மன உளைச்சலும் இல்லாது இருந்தது. வங்கி சேமிப்பு, இரண்டு மாதச் செலவுக்குப் போதுமானதாய் இருந்தது. தினசரி யூனிய னுக்குப் போவதும், வருவதுமாய்ப் பொழுது போனது... பிறகு தான் எதிர்காலத்தைப் பற்றிய பயம் படமெடுத்து ஆடியது.

''அரிசி தீர்ந்து போச்சப்பா... அரிசி மூட்டை வாங்கணும்'' என்று அம்மா இழுத்தாள். அன்றாடம் வாங்குவது கிடை யாது. மில்லில் போய் மூட்டையாய்த்தான் வாங்குவது... வாடகை, பலசரக்கு சாமான் கள் என்று செலவுக்கான சமாசாரங்கள் பல்லைக் காட்டின... வண்டியை விற்றுத் தான் மூன்றாம் மாசச் செலவுகளை ஈடு கட்ட வேண்டி இருந்தது.

அம்மா திரும்ப கல்யாணப் பேச்சைத் துவக்கினாள். ''நம்ம வசதிக்குத் தகுந்த இடமா பார்ப்போம். பெரிய மண்டைக் கர்வம் பிடிச்ச இடமா இருந்தது. முதலில் பார்த்த இடம். வேலை, பணங்காசு எல்லாம் இன்னிக்கு வரும். நாளைக்குப் போகும். பேசின பேச்சு மீறலாமா. வாட்ச்மேன் மகள் கனகாவைப் பார்ப் போமா?'' என்று கேட்டாள்.

வசந்தா மனசில் இருந்து இறங்க மறுத் தாள்... வசந்தாவுக்கு வேறு இடத்தில் முடிந்த தாய்த் தெரியவில்லை. முடியாமல் இருந் தால், திரும்பக் கேட்கலாம். கொடுப்பார் களா. அதேசமயம் கல்யாணம் தேவையா என்ற கேள்வியும் எழுந்தது. தெருவில் சக தொழிலாளர்களைக் காண நேர்ந்தபோது- ரத்தக் கண்ணீர் வடித்தார்கள். வாழ வழி



பயங்கரமான செப்டம்பர் 11க்குப் பிறகு விமானப் பயணிகளே குறைந்து போனார் கள். பயணிகளை ஈர்க்கப் பலவிதத் திட்டங் கள். வரும் ஜூலை மாதம் முதல் ஏர் இந் தியா நிறுவனம், கேரளா ஆயுர்வேத கேந்திரா வின் உதவியுடன் தில்லி, லண்டன் விமா னங்களில் முதல் வகுப்பில் பயணம் செய்யும் பிரயாணிகளுக்கு, இலவசமாக எண்ணெய், பவுடர் மஸாஜ் கொடுக்க முடிவெடுத்துள் ளது!

– அகமதாபாத் பாண்டு

தெரியாமல் - கண்ணைக் கட்டி காட்டில் விட்டமாதிரி இருந்தது. கல்யாணமாகாமல் இருந்ததால்தான் பல சுமைகளில் இருந்து தப்பித்தோம். கல்யாணம் ஆகி இருந்தால் - வாழ்க்கை மிகவும் மோசமானதாய் ஆகி இருக்குமே...

அம்மா கஷ்டத்தை உணர்ந்துகொண்டு, பல்லைக் கடித்து கொண்டு இருந்து விடுகிறாள். வருகிறவள் - அவ்விதமாய் இருப்பாள் என்று சொல்ல முடியாது. "நம்ம கஷ்ட நஷ்டம் தெரிஞ்ச பொண்ணு இருக்குப்பா. அப்படியான பொண்ணைப் பார்த்து முடிப்போம்" என்றாள் அம்மா. "கொஞ்ச நாள் போகட்டும்மா.." என்றான்.

அமைச்சரின் இடைவிடாத முயற்சிக்குப் பின் தொழிற்சாலை திரும்பத் திறப்பது என்று முடிவானது. தொழிற்சாலை மூடப்பட்டபோது, என்ன சம்பளம் கொடுக்கப்பட்டதோ, அந்த சம்பளம்தான் தர முடியும் என்பது போன்ற, மேலும் சில நிபந்தனைகளுடன் திறக்கப்பட்டது.

எப்படியோ - கஷ்டங்கள் துடைத்தெறியப்பட்டால் போதும். இங்கு இருந்து போனபின்தான் பணத்தின் அருமை தெரிகிறது. ஒண்ணாந் தேதியானால் - டாணென்று அஞ்சாயிரத்து சொச்சம் வந்த காலத்தில் பணத்தின் அருமை தெரியவில்லை. வெளியே போனபின்தான் ஒவ்வொரு நயாபைசாவுக்கும் எத்தனை கஷ்டப் பட வேண்டி இருக்கிறது என்று புரிந்தது. இனி யூனியன்கூட அடங்கிதான் போகும்...

கம்பெனிக்கு வந்து இறங்கினான் சுந்தரம். தளர்ச்சியுடன் சக தொழிலாளர்கள்... இந்தச் சில வருஷங்கள் (சரியாய் இரண்டே கால் வருஷம்) இடைவெளி, எல்லோரது தோற்றத்திலும் சில மாறுதல்களைச் செய்திருந்தது. வேலையில் எப்போதும் போல் மனசு ஒட்டிக்கொண்டது.

முதல் மாத சம்பளம் கைக்கு வந்த அன்று. "பழைய வண்டி ஒண்ணு வருது. வாங்கணும். சைக்கிளை மிதிக்க முடியலை" என்றார் சூபர்வைஸர் கணேசன். "அதான் கம்பெனி தொறந்தாச்சு. அந்த வீட்டைக் காலி பண்ணிட்டு... கம்பெனிக்கு எதிர்த்தாற்போல் இருக்கிற காலனிக்கு வர வேண்டியதுதானே? பெட்ரோல் செலவுக்கு - நூறு இருநூறு வாடகைகூட இருந்தாலும், அலுப்பு இல்லாமல் இங்கயே இருந்துக்கலாம்" என்றார் வெல்டர் பிரசாத்.

"அடகு வெச்ச நகைகளை எல்லாம் முதல்ல மீட்கணும்" என்றான் பாண்டி... அவர்கள் வாழ்க்கையைப் பற்றி நேற்றிலிருந்து பயங்களைத் தொலைத்தவர்களாய்க் காணப்பட்டார்கள். இனி இந்த வாழ்க்கை நிரந்தரம் என்கிற ரீதியில் பேசினார்கள். தனக்கு வாழ்க்கையில் முன்பாதியில் கிடைத்த அனுபவம். பின்பாதியை வெகு ஜாக்கிரதையாய்க் கொண்டு செல்ல உதவும். முதலில் எல்லா விஷயத்திலும் தன்னிறைவு பெறுவோம். பிறகு - எது தேவை, எது தேவையில்லை என்பது பற்றி யோசிக்கலாம்.

"என்ன சுந்தரம்... நீ ஒண்ணும் பேசாம இருக்கே? உனக்கு எதுவும் வாங்கற யோசனை இல்லியா?" என்று சக தொழிலாளி கிருஷ்ணன் கேட்டான்.

சுந்தரத்தின் நெஞ்சில் வசந்தாவின் சிரித்த முகம் நிழலாடியது! ○

பாட்டுக்காரன்

'அமிதாப்பச்சன் உதயசூரியன் முத்திரை காட்டுகிறாரே... கட்சி கிட்சி மாறிட்டாரா?' என்று குழம்ப வேண்டாம்.



சினிமா, விளம்பரம், போக மிச்சமிருக்கும் நேரங்களில், கவியரங்குங்களில் கலந்துகொண்டு கலக்குகிறார். சொந்த சரக்கும், அப்பா ஹரிவன்ஷ்ராய் பச்சனின் கவிதையும் சேர்த்து, பாடலாகவே பாடி அசத்துகிறாராம். மும்பையின் பிரபல செயின்ட் ஆன்ட்ரூ ஆடிட்டோரியத்தில் அப்பாவின் 'மதுஷாலா' கவிதைத் தொகுப்பை அமிதாப் வாசித்தபோது எடுத்த படம்.

- ஆது

• தாரிணி கிருஷ்ணன்



கல்லூரிப் பெண்களுக்குப் பேல்பூரி தடையா!?

'வியர்க்க விறுவிறுக்க எக்சர்சைஸ் செய்ய வேண்டாம். பட்டினி கிடக்கவும் தேவையில்லை. ஆறே வாரம் போதும். நாற்பது பவுண்டு எடை குறைத்து அழகாக மாறலாம்' இப்படி இணையதளத்தில் ஆங்காங்கே கவர்ச்சிகரமான விளம்பரங்கள் சிக்கென்ற பெண்களின் புகைப்படங்களுடன் கண் சிமிட்டுகின்றன.... "இதெல்லாம் பித்தலாட்டம். பர்ஸுக்கு வேட்டு வைப்பதோடு, உடல் ஆரோக்கியத்தையும் நாசம் செய்துவிடும்'' என்று எச்சரிக்கிறார் தாரணி கிருஷ்ணன். இவர், இந்தியாவின் டயடிடிக்ஸ் அஸோஸியேஷனின், சென்னை பெருநகரப் பிரிவுத் தலைவி.

ஐஸ்வர்யாராய், சிம்ரன் போன்ற நடிகைகள்தாம் இன்றைய டீன்ஏஜ் பெண்களின் கண் கண்ட ரோல் மாடல்களாக இருக்கிறார்கள் என்பது தெரிந்த செய்திதான். ஆனால் பென்சில் போன்ற உடலழகைப் பெற வேண்டி, கல்லூரிப் பெண்கள் டயட் செய்யும்போது, புலியை நினைத்து பூனை சூடு போட்டுக் கொண்ட கதையாகி விடுகிறதாம்!



சமீபத்தில் டெல்லி, மும்பை, போன்ற ஹைடெக் நகரங்களில் உள்ள கல்லூரிப் பெண்களிடையே ஆரோக்கிய பரிசோதனை செய்தபோது, இருபது சதவிகித பெண்களுக்கு அனீமியா இருப்பது தெரியவந்துள்ளது. அது தவிர, அனரெக்ஸியா நெர்வோஸா, புலீமியா போன்ற புதுப்புது வியாதிகள் எல்லாம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதாம். அனீமியா என்றால் ரத்த சோகை என்று தெரியும். மற்ற இரண்டும்?

''நல்லா சாப்பிட்டா, சதை போட்டு குண்டாயிடுவோமோங்கிற பயத்துலே சாப்பிடாமலேயே, பட்டினி கிடப்பது முதல் வகை. நாக்கைக் கட்டுப்படுத்த முடியாமல், நன்றாகச் சாப்பிட்டுவிட்டு, ஊளைச் சதை ஏறிடுமோங்கிற பயத்துலே, ஆட்டோ சஜஷன் முறையில், தானாவே வாந்தி எடுத்துடுவாங்க. – இது இரண்டாவது வகை. இந்த சின்ட்ரோம்கள் மிகவும் கவலைக்குரிய விஷயம்'' என்கிறார் தாரிணி கிருஷ்ணன்.



இந்த மாதிரி ஒல்லிக்குச்சி உடம்புக்காரிகளுக்கு குழந்தைகள் எடை குறைவாகவும், மூளை வளர்ச்சி குன்றியதாகவும் பிறக்க வாய்ப்பிருக்கிறது. அந்தப் பெண்கள் நாற்பது வய



ளைக் கடக்கும்போது, எலும்பு மெலிவு நோய்க்கு ஆளாவார்களாம்.

அப்படியானால், கல்லூரிப் பெண்கள் எத் தகைய உணவைச் சாப்பிட வேண்டும்?

"முறையாகச் சாப்பிட்டு, மிதமாகத் தேகப் பயிற்சி செய்தாலே போதும். நம்ப ஊரின் சீதோஷ்ணம் என்ன, நமக்கு ஏற்ற உணவு முறை எது என்று முதலில் தெரிந்து கொள்ள வேண் டும்.

"மேலை நாடுகளில் பீட்ஸாவும் பர்கர் களும் சாப்பிடுகிறார்கள் என்றால் அது குளிர்ப் பிரதேசம். எவ்வளவு கொழுப்பு சாப்பிட் டாலும் அது தரும் வெப்பம் அவர்களுக்குத் தேவை. ஆனால் நம் ஊரில் 110 டிகிரி சர்வ சாதாரணம். இங்கே கஞ்சி, இட்லி, நீர்மோர், கம்பு, கீரை வகைகள்தான் சாப்பிடணும்.

'நிறையப் பேர், சோயாபீன்ஸ், சோயா சங்க்ஸ் (chunks) சாப்பிடுகிறார்கள். சோயாவில் புரதச்சத்து மிக அதிகம். ஜப்பான், சைனா போன்ற நாடுகளில் சோயாதான் முக்கிய உணவு. ஆனால் அங்கே சோயா பீன்ஸ் பல நிலைகளில் சுத்திகரிக்கப்பட்டு 'aflatoxin' என்ற நச்சுப் பொருள் நீக்கப்படுகின்றது. நம் ஊரில் அது போன்ற தரமான ட்ரீட்மெண்ட் செய்யப்படுகின்றதா என்று தெரியவில்லை. ஆஃப்லா டாக்ஸின் நச்சுப் பொருள் புற்றுநோயை விளைவிக்கக் கூடும் என்பதால், சோயா பீன்ஸைவிட, கொத்துக் கடலையே சிறந்தது. சோயா பாலைவிட, நம்ம ஊர் ஆவின்பாலே பாதுகாப்பானது" என்றார் உறுதியாக!

'பால்' என்ற அத்தியாயத்துக்குள் நுழைந்தபிறகு இன்னும் உற்சாகமாகி, அதிகத் தகவல்களைக் கொட்ட ஆரம்பித்துவிட்டார் தாரிணி கிருஷ்ணன்.

"பொதுவாகவே சர்க்கரை, உப்பு, பால் இந்த மூன்றையும் 'த்ரீ வைட் தீவ்ஸ்' என்பார் கள். இவர்கள் உடம்புக்குள்ளே புகுந்து, உடல்நலத்தைத் திருடுபவர்கள் என்பார்கள். ஆனால் இந்த விஷயத்தைப் பொறுத்தவரை, பால் மீது போடப்பட்ட பொய்கேஸ்தான் இது. உண்மையில், பால் ஒரு முழுமையான உணவு!

பால் சாப்பிட்டால் குண்டாகி விடுவோம் என்று பல பெண்கள், பாலைத் தொடுவதுகூட இல்லை. இது மிகவும் தவறான போக்கு. நாற்பது வயதுக்குப் பிறகு, தம்ளர் தம்ளராக எவ்வளவு தான் பால் அருந்தினாலும், அது உடம்பில் மிகக் குறைந்த அளவே ஒட்டுகிறது. இளம் வயதில் என்ன பால் சாப்பிட்டோமோ, அதை வைத்துதான் எலும்பு, பல், தலை முடி உறுதி அடைகிறது. பருவ மடைந்த பெண்கள் தினமும் ஒரு லிட்டர் பாலாவது குடிக்க வேண்டும்" என்றார்.

பாலுக்கு அடுத்தபடியாக இளம் பெண்கள்











''சார்! உங்களுக்கு வாஸ்து மேல நம்பிக்கை இருக்கலாம்! அதுக்காக பல்கூட வாஸ்துபடிதான் கட்டணும்னு சொல்றதெல்லாம் ரொம்ப டூ மச் சார்!

– பூவனூர் ராஜாராமன்

தள்ளியே வைக்கும் நெய்யைப் பற்றியும் பேச்சு வந்தது.

"டீன் ஏஜ் பெண்கள் அலறிக் கொண்டு ஓடும் இன்னொரு பொருள் நெய்! நெய்க்கு, அன்னசுத்தி செய்யும் குணம் உண்டு. அற்புதமான சாசுரேடட் ஃபேட்! உடலுக்கு வலிமையும், சருமத்துக்கு மினுமினுப்பு- கண்களுக்கு ஒளியும் தரும். அதனால் நெய், நல்லெண்ணெய், சூரிய காந்தி எண்ணெய் இம் மூன்றையும் சமமாக உபயோகிக்க வேண்டும்" என்றார்.

''கல்லூரிப் பெண்களுக்கு ஏற்ற நல்லதொரு டயட் ஷீட் தயாரித்துக் கொடுங்களேன்" என்று கேட்டபோது, "அப்படியெல்லாம் பொத்தாம் பொதுவாக மெனு அண்ட் மீல் ஷீட் தந்துவிட முடியாது. ஒரு பெண்ணின் உயரம், எடை, வயது, வேலை பளு, சைவமா, அசைவமா போன்ற பல விஷயங்களை வைத்துத்தான் தர முடியும். ஆனாலும் உத்தேசமாகத் தருகிறேன்" என்றார்.

"ஊருக்கு வெளியே இருக்கும் கல்லூரிக்கு, அதிகாலையில் பஸ்ஸில் ஏறிச் செல்கிறார்கள். டிபன்பாக்ஸிலும், பிரெட், சமோஸா என இருக்கும். மத்தியானம் கேன்டீனில், கட்லெட், டீ, கூல்டிரிக்ஸ் சாப்பிடுகிறார்கள். சாயங்காலம் வீட்டுக்கு வந்ததும் ஃபுல் மீல்ஸை ஒரு கட்டு கட்டிவிட்டு, தூங்கி விடுகிறார்கள். இது எதுவுமே சரியில்லை" என்று சொன்ன தாரிணி கிருஷ்ணன், கல்லூரிப் பெண்களுக்குத் தரும் ஒன்பது கட்டளைகள் இதோ!

- திடீரென்று எடையைக் கூட்டவோ, குறைக்கவோ, செய்யாதீர்கள். அப்படிச் செய்வதாக இருந்தால் டயட்டீஷியன் ஆலோசனையுடன் செய்யுங்கள்.
- உங்கள் மனசுக்குப் பிடித்த உணவை, காலை உணவாகச் சாப்பிடுங்கள். குறிப்பிட்ட நேரத்தில் சாப்பிடுங்கள். மூளைக்கு குளுகோஸ் சப்ளை கிடைப்பதால் பளிச்சென்று இயங்க முடியும்.
- தினமும் இரண்டுவேளை வயிறு முட்ட சாப்பிடுவதைவிட, நான்குவேளை, கொஞ்சமாகச் சாப்பிடுங்கள்.
- காலையில் டிபன் சாப்பிடப் பிடிக்கவில்லை என்றால், ஓட்ஸ் அல்லது நவதானியக் கஞ்சி சாப்பிடுங்கள்.
- மத்தியானத்துக்கு, தயிர் சாதம் கீரை அல்லது சப்பாத்திக் கூட்டு போதும்.
- அசைவ விரும்பிகளாக இருந்தால், மீன், சிக்கன் போன்றவற்றை வறுத்துச் சாப்பிடாமல், வேக வைத்துச் சாப்பிடுங்கள்.
- ஆரஞ்சு, பப்பாளி, தர்ப்பூசணி, நுங்கு, பாதாம் பருப்பு, கேரட், வேர்க்கடலை, தக்காளி, பச்சைப் பட்டாணி போன்றவற்றை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.
- காபி, டீ, ஐஸ்க்ரீம், கூல்டிரிங்க்ஸ் என சாப்பிட நேர்ந்தால், உடனே இரண்டு தம்ளர் தண்ணீர் குடித்து விடுங்கள்.
- இஞ்சி, பூண்டு, வெங்காயம், உங்கள் உணவில் இடம் பெறட்டும். இதில் உள்ள 'அலிசின்' சருமத்தைப் புதுப்பித்து அழகூட்டும்.

''அப்ப... மசால் தோசை, பேல் பூரி, சாக்லேட் என கல்லூரிப் பெண்கள் ஆசைப்படவே கூடாதா?"

"தாராளமாக... என்ன வேண்டுமானாலும் சாப்பிடுங்க... ஆனால் மிதமாகச் சாப்பிடணும். தினமும் வாக்கிங், ஸ்கிப்பிங், சைக்ளிங்னு ஏதாவது தேகப் பயிற்சி கட்டாயம் செய்யணும். இல்லை, துவைக்கிறது, பெருக்கிறதுன்னு நாள் முழுக்க ஆக்டிவ்வா இருக்கணும். அப்ப சேமிச்ச கலோரிகள் எல்லாம் தன்னாலே கரைஞ்சுடும்" என்றார் தாரிணி.

பன்னிரண்டு வருடங்களாக கன்ஸல்டன்ட் டயட்டீஷியன் அண்ட் நியூட்ரிஷனிஸ்டாகப் பணியாற்றிவரும் தாரிணி, www.edigestdoc.com என்று பிரத்யேக வெப்சைட் வைத்திருக்கிறார். www.sitagita.com ல் ஆன்லைன் டயட்டரி அட்வைஸ் தருகிறார்.

இரண்டே நிமிஷம்... பாடி மாஸ் இன்டெக்ஸில் ஒரு தட்டு. டயட் டயரியில் ஒரு தட்டு. சரசரவென பிரிண்ட் அவுட் வெளிவருகிறது, என்ன சாப்பிடணும், எப்ப சாப்பிடணும், எப்படி சாப்பிடணும் என்ற அறிவுறுத்தலுடன்...

– அனு

படம் : யோகா



காட்சி : 40

பகல்/அலுவலகம்

பாத்திரங்கள்: கீதா - கல்லூரி மானேஜர் கருணாகரன்

தனியார் பொறியியல் கல்லூரியில் அலுவலக வேலைக்கு விண்ணப்பித்து, நேர்முகத்துக்கு அழைக்கப்பட்டிருக்கிறாள், கீதா. ஒரு கோப்புடன் கல்லூரிக்குள் பிரவேசிக்கிறாள். கல்லூரி என்பது, ஒரு வீடு. இரும்புக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைகிறாள். காவலர் இவள் முன் வருகிறான்.

ஜீவநதி



காவலர்: யாரைப் பார்க்கணும், மேடம்?

கீதா: மானேஜர் மிஸ்டர் கருணாகரனைப் பார்க்கணும். வேலை விஷயமா, பேட்டிக்கு வரச் சொல்லி இருக்கிறார்.

காவலர்: இருங்க வர்றேன்...

ஒரு நாற்காலியில் அமர்கிறாள். சுற்று முற்றும் பார்த்துக் கொண்டிருக்கிறாள். வரிசையாகக் குரோட்டன்ஸ் செடிகள் வெட்டப்பட்டுக் காணப்படுகின்றன.

காவலர்: மேடம். மானேஜர் வரச் சொல்றார். நேராப் போனா, 'ரைட்ல' இருக்கிற அறை.

உள்ளே நடக்கிறாள். டைப்பிஸ்ட்டுகள், கிளர்க்குகள் என்று சிலர் இவளைப் பார்க்கிறார்கள். மானேஜர் என்று போட்டிருக்கும் அறைக்குள் நுழைகிறாள்.

கீதா: குட் மார்னிங் சார்... ஐ ஆம் கீதா.

மானேஜர்: வாங்க... கீதா.. உக்காருங்க...

ஒரு நாற்காலியில் அமர்கிறாள்.

ஃபைலை அவரிடம் நீட்டுகிறாள்.

அவர் வாங்கிப் பார்க்கிறார். நிமிர்கிறார். அவருக்குப் பின்னால், காந்தி, அம்பேத்கர் படங்கள் தொங்குகின்றன.

மானேஜர்: கீதா... முன்னாலே நீங்க வேலை பார்த்த கம்பெனி, கௌரவமான கம்பெனியாச்சே. அதை ஏன் விட்டீங்க...? சொல்லலாம்னா, சொல்லலாம்.

கீதா: சொல்றேன் சார்... கம்பெனி நல்ல கம்பெனிதான். என்னையும் கௌரவமாத்தான் நடத்தினாங்க. ஆனா, நேர்மை இல்லாத வியாபாரமா இருந்தது. அதனால விட்டுட்டேன்.

மானேஜர்: புரியலை. நேர்மை இல்லாத வியாபாரம்னா? நேர்மையான வியாபாரம் எது?

கீதா: ஒரு பொருளைப் பத்து ரூபாய்க்கு வாங்கி, பதினொரு ரூபாய்க்கு விற்கலாம். நாற்பது ரூபாய்க்கு விற்கலாமா? அது அதர்மம் இல்லியா?

மானேஜர்: வியாபார தர்மம் இதை அனுமதிக்குதே.

கீதா: இது தர்மம் இல்லை. கொள்ளை. கொள்ளைக்காரர்கள் வியாபாரத்துக்கு வந்ததால, அவங்க அவங்களுக்கு உருவாக்கிக்கிட்ட தர்மம் இது.

மானேஜர்: நம்ம காலேஜ், இந்த வருஷம்தான் சரியா தொடங்குது. இனிமேல்தான் கட்டடங்கள், வகுப்பறைகள், எல்லாம் உருவாகணும். 'ஃபேகல்டி' கூட அடுத்த வாரம்தான் தேர்ந்தெடுக்கிறோம்.

கீதா: (ஆச்சரியமுடன்) டீச்சர்ஸ் இல்லாமே, எப்படி சார் காலேஜ் ஆரம்பிச்சீங்க?

மானேஜர்: நாலு பேர் இருக்காங்க... இன்னும் சிலபேரை இந்த ஆண்டு நியமிக்கப் போறோம். நீங்க, எங்ககிட்ட என்ன சம்பளம் எதிர்பார்க்கிறீங்க?

கீதா: அங்க வாங்கிட்டு இருந்த சம்பளத்தை விடவும் கூடுதலாக எதிர்பார்க்கிறேன் சார். (அவர் ஃபைலைப் பார்க்கிறார்)

பிரபஞ்சன்

மானேஜர்: அவ்வளவு தர முடியாது. சாரி... நாங்க எதிர்பார்க்கிற கிளார்க்குக்கு மாசம் அதிக பட்சம் மூவாயிரம்தான் தர முடியும்.

கீதா: சார், நீங்க தொண்டு செய்தா, நானும் செய்யத் தயார். நீங்க வாங்குற பீஸ், பில்டிங் டொனேஷன், ஹாஸ்டல் பீஸ் எல்லாம், ஏழைகளால கொடுக்க முடியும்னு நம்பறீங்களா? ஏழைகள், பிற்படுத்தப்பட்டவர்கள், தலித்துகள் பெயரைச் சொல்லி, சம்பாதிக்கிறீங்க. உங்க நோக்கம், கல்விப் பரவல்னா, இவ்வளவு கட்டணம் எதுக்கு? தவிரவும், உங்க கல்லூரியில, சேர்ந்திருக்கிற அண்டை மாநில மாணவர்கள் எத்தனை பேர்? அவங்ககிட்ட நீங்க வசூலிச்ச தொகை எவ்வளவு? இஞ்ஜினியரிங் வாத்தியாருக்கு, இரண்டாயிரம், மூவாயிரம் எல்லாம் ஒரு சம்பளமா? சென்ற கல்வியாண்டுல நீங்க சம்பாதிச்சது எவ்வளவு? சம்பளமா கொடுத்தது எவ்வளவு? இதெல்லாம்தான் தொண்டா?

மானேஜர்: *(சிரித்துக் கொள்கிறார்)* ரொம்ப விவரமா இருக்கீங்க. காலேஜ் நடத்த இடம், அனுமதி வாங்கன்னு நாங்க செலவு பண்ணது பல லட்சம் மேடம். இதையெல்லாம் எதிலேயிருந்து நாங்க ஈடுகட்டறது? மாணவர்கள்கிட்டே இருந்துதானே?

கீதா: சார், உங்களுக்கு இது ஒரு தொழில். சின்ன ஆட்கள், பெட்டிக்கடை, பெரிய ஆட்கள் சாராயக்கடை அல்லது காலேஜ். உங்க வசதிக்கு ஏற்ற தொழில். சரி, வாங்குற 'ஃபீசுக்கு' ஏற்பத் தரமான கல்வியைத் தர்றீங்கன்னு உங்களால சொல்ல முடியுமா? வாங்குறதுக்கும் தருவதற்கும் சரியா இருந்தா, அது தர்மம். இல்லேன்னா அதர்மம்தானே?

மானேஜர்: நாங்களும், அதர்மமா, முன்னால நீங்க வேலை செஞ்ச கம்பெனி மாதிரி நடந்துக்குவோம். எங்களோடயும் சண்டை போடுவீங்களா?

கீதா: முடியாது சார். என்னால உங்களோட சண்டை போட்டு ஜெயிக்க முடியாது சார். என்னைப் போன்றவர்கள் எப்போதும் மைனாரிட்டி. உங்க செல்வாக்கு எவ்வளவு உயரத்துக்குப் பரவும்னும் எனக்குத் தெரியும். என் போன்றவர்கள், படிச்சிருக்கோம். அரசாங்கத்திலே வேலை காலி இல்லை. வேலை வாய்ப்பும் பத்து சதம். உங்ககிட்டதான் தொண்ணூறு சதம் வாய்ப்பு இருக்கு. ஒரு நாற்காலிக்கு ஆயிரம் பேர் போட்டி போடறோம். அதனால, அந்த நெருக்கடியைச் சாதகமாப் பயன்படுத்திக்கிறீங்க. பரவாயில்லை. நான் தட்ட வேண்டிய கதவு எங்கேயோ இருக்கு. அது வரைக்கும், கண்ணுல படற எல்லாக் கதவையும் தட்டிக்கிட்டுதான் இருப்பேன். ரொம்ப நன்றி, வரேன்.

மானேஜர்: ஒரு நிமிஷம், கீதா, நீங்க சொன்னதெல்லாம் சரி, நாங்க நாலு பேர் கூட்டா சேர்ந்து, இந்தத் தொழிலைத் தொடங்கி இருக்கோம். எங்களுக்கு எத்தனையோ பிசினஸ் இருக்கு. அதுல காலேஜ் பிசினசும் ஒண்ணு. இதுல ஃபியூச்சர் நிறைய இருக்கு. டிரெய்னிங், நர்சிங், மெடிக்கல்னு மேல மேல போகப் போறோம். உங்க போல்ட்னஸ் எனக்குப் பிடிச்சிருக்கு. உங்களை இழக்கக் கூடாதுன்னு என் உள்மனசு சொல்லுது. நான் என் பார்ட்னர்ஸ்கிட்ட பேசி சம்பளத்தைக் கூட்டிப் போடச் சொல்றேன். என்ன சொல்றீங்க?

கீதா: சாரி சார். எல்லாருக்கும் கிடைக்கிற சம்பளம் எனக்கும் கிடைச்சாதான் எனக்கு மனசு அமைதியா இருக்கும். எனக்குத் தனியா சலுகை பண்ணீங்கன்னா, வேலைக்கு அப்பாற்பட்ட சில சலுகைகளை நான் உங்களுக்குப் பண்ணணும்னு நீங்க எதிர்பார்ப்பீங்க. அப்படி என்னால செயல்பட முடியாது.

மானேஜர்: இந்த உலகத்துல உங்க ஐடியலிசத்துக்கு ஏற்ற மாதிரி இடம் கிடைக்கும்னு நம்பறீங்களா?'

கீதா: நம்பிக்கை இருக்கு சார். சமுத்திரம்னு ஒரு எழுத்தாளர். வக்கீலைப் பார்க்கிறதுக்குக் காலையில கிளம்பி இருக்கார்.



நீங்க டீவி நாடக டைரக்டராக இருக்கலாம்! அதுக்காக பெண் பார்க்க வந்தவங்களை வெறும் தம்ளரைக் கொடுத்து காபி குடிக்கச் சொல்றதெல்லாம் டூ மச் சார்!

– பூவனூர் ராஜாராமன்

மத்தியானம் சாப்பாடு, எத்தனைப் பக்கம், எத்தனைக் கதைகள் எழுதணும்னு இருந் திருப்பார்? எத்தனை அவருக்குத் தயாரா இருந்திருக்கும்... எல்லாம் முடிவுக்கு வந்துடுச்சி. தினம் தினம், இப்படி மனிதர் கள் விடை பெற்றுக்கிட்டே இருக்கும்போது, நம்பிக்கை இருக்கிறதாலதான் பல அடுக்கு மாடி கட்டறோம். இருபது முப்பது சட்டை, புடைவைகள் வாங்கி வச்சிருக்கோம். பேங்கில பணம் போட்டு வைக்கிறோம். தப்பும் தவறுமா தொழில் பண்ணி ஏழு தலைமுறைக்கும் சொத்து சேர்க்கிறோம்... எனக்கு நம்பிக்கை இருக்கு, சார்...

காட்சி: 41

மாலை, இரவு / வீடு

பாத்திரங்கள்: கீதா, கீதாவின் அப்பா சிவதாணு.


(காட்சி மாறுகிறது. என்றாலும், அதே 'மூட்' தொடர்கிறது... அப்பாவுக்கு தான் போய் வந்த சேதியைச் சொல்லிக் கொண் டிருக்கிறாள். கீதா, நைட்டியில் இருக்கிறாள். தம்பூராவை ஒழுங்கு செய்து கொண்டு இருக்கிறாள்...)

கீதா: எனக்கு நம்பிக்கை இருக்குப்பா. என் மனசுக்கேற்ப, எனக்கு சந்தோஷம் தர்ற வேலையிலதான் சேரணும்பா. அப்படி ஒரு வேலை கிடைக்கும்னு நான் நம்ப றேன்.

சிவதாணு: ரொம்ப சரி. உலகத்துல நல்ல வங்க, நல்ல தொழில் இல்லாமப் போயிட லைம்மா. உன்னைச் சிரமப்படுத்திக்க வேணாம். ரொம்பவும் அலைஞ்சு திரியாதே. உடம்பையும் கவனிச்சுக்கோ. கறுத்தே போயிட்டே. வெயில்லயே சுத்தறே போல... மெலிஞ்சு போயிட்டே.

கீதா: *(சிரிக்கிறாள்)* அப்படி இல்லப்பா... நான் எப்பவும் போலத்தான் இருக்கேன். பெத்தவங்க கண்ணுக்கு, பிள்ளைங்க இளைச்சே தெரிவாங்க போல...

சிவதாணு: அல்லிக் குளத்துல, இருந் தப்போ, உன் அம்மா இருந்தாங்க, நம்ம வீட்டுக்கு எதிரிலே ஒரு பெரியவர் இருந் தார். அப்பவே அவருக்கு எண்பதுக்கும் மேல. தினம் காலைல காக்கைக்குச் சோறு வைப்பார். அப்புறம்தான் சாப்பாடு. மாடிப் படியில தட்டுத் தடுமாறி ஏறி மாடிக்குப் போறதைப் பார்க்கவே கஷ்டமாக இருக்கும். போய், காக்காய்களைக் கூப்பிடுவார். அதுக்கு அவசியம் இல்லாமே, காக்கைகள் கும்பலா அவருக்காகக் காத்திருக்கும். சோறு வச்சு,



''நம்ம கோவிந்தசாமியை மந்திரி பதவி யிலிருந்து நீக்கியது அநியாயம்...''

''எப்படி...?''

''கோவிந்தசாமிக்கு மந்திரி பதவியே தராதபோது எப்படி நீக்க முடியும்...?''

- நாமக்கல் பாலு

அதுங்க சாப்பிடறதைப் பார்த்த பிறகே கீழே இறங்குவாரு. வெயிலோ, மழையோ, குளிரோ, இது நித்தியப் பழக்கம். மனிதர்கள் இப்படியும் இருக்காங்க. இருக்கிறதாலதான் மழை பெய்யுது. எல்லாக் காலத்திலயும் சூதும் வாதும் இருக்கத்தான் இருந்துச்சு. இப்ப கூடி இருக்கு. ஜனத் தொகை கூடி இருக்கோல்லியோ? இதுவும் கூடத்தானே செய்யும்?

(அழைப்பு மணி ஒலிக்கிறது. சரோ ஜாவும் சேதுவும் நுழைகிறார்கள்.)

கீதா: என்ன ஆச்சு

சரோஜா: வீடு பார்த்தாச்சுக்கா... நீ பார்த்து முடிவு பண்ணினா சரி.

கீதா: நான் என்ன பார்க்கிறது? உனக்குப் பிடிச்சா சரி. அங்க வாழப் போறது நீங்க...

சேது: அப்படி இல்லை, கீதா. நாங்க கல்யாணம் பண்ணிக்கிட்டு எங்க போற துன்னு தெரியாமே விழிச்ச போது, எங் களுக்கு அடைக்கலம் கொடுத்தது நீங்க. நீங்களே குடும்பத்தையும் தொடங்கி வையுங்க.

கீதா: செய்தா போச்சு. பெரிசா நினைக் காதிங்க, சேது. இது எல்லா நண்பர்களுக்கும் நண்பர்கள் செய்ய வேண்டியவைதானே. சரோஜா, உங்க அப்பா எப்படி எடுத்துக் கிட்டாரு... சமாதானமாயிட்டாரா?

சரோஜா: இந்நேரம் ஆகி இருக் கணும்.

சேது: கண்ணன் வீட்டுக்குப் போயி கோபப்பட்டாராம்.

(காட்சி மாறுகிறது)


(தொடரும்)

'எந்த தைரியத்தில் இரண்டு பெரிய ஹீரோக்களை ஒரே வண்டியில் பூட்டியிருக்கிறார்கள்' என எடுத்ததுமே நமக்கு மிரட்சி. ஆனால், பா.ஜ.கவை வழிநடத்தப் போவது வாஜ்பாயா இல்லை அத்வானியா, என்ற வெங்கையா பிராண்ட் குழப்பம் எதுவுமில்லை இயக்குனருக்கு.

சரத் டிரைவராக இருக்கும் லாரியில் ஜெயராம் கிளீனர். நட்புக்கும் அப்பால் இருவருக்குள்ளும் பாச இழைகள். எதிர்பாராமல் வாகன விபத்தில் ஜெயராம் இறந்து போக, உடலை ஒப்படைக்க அவரது கிராமத்துக்குச் செல்லும் சரத் அங்கேயே தங்கி விடுகிறார். பாசம், கடமை, காதல் என்று மிதமான சென்டிமெண்ட்டுகளில் சிக்கலில்லாமல் ஓடிக் கொண்டிருக்கும் வண்டி, ஓரிடத்தில் 'சடன் பிரேக்' போட்டு நிற்கிறது. நாம் எதிர்பார்த்த படியே குறுக்கே வந்து நிற்கும் கந்து வட்டி ஸ்டைல், கிராமத்து வில்லனை கணக்குத் தீர்த்து விட்டு ஹீரோ நிமிர, மம்தா பேனர்ஜி போல, ஹீரோயின் தம் பங்குக்கு ஒரு தடாலடி பண்ணுகிறார்.

"ஐ! இதோடா!" என்று ரசிகர்கள் வாய்விட்டுக் கூவுகிறார்கள்.

டி.ஆரைத் தி.மு.க. கழற்றி விட்டதுபோல் தமது பிரத்யேக பிராண்ட் மசாலாவை இப்படத்தில் கழற்றி விட்டிருக்கிறார் ரவிகுமார்.



தொகாடியா ரக டயலாக் பேசும் லேடி டீ மாஸ்டர் ரம்யா கிருஷ்ணன், திரிசூலத்தின் இடத்தில் அரிவாளைத் தூக்குகிறார்.

இவரது பாத்திரப்படைப்பு, படத்தின் முடிவுக்கு லாஜிக்கோடு பயன்படுகிறது.

கண்ணில் படுவதையெல்லாம் கமுக்கமாய்ச் சுட்டுத் தள்ளும் (திருட்டுத் தொழில்) கடலையாக, பட்டையைக் கிளப்பும் சிட்டிபாபுவும், சவரக் கத்தியால் வில்லனையே நடுங்க வைக்கும் பாவாடையாக ரமேஷ் கண்ணாவும் பேராசிரியர் பாதையில் வந்த உண்மைத் தொண்டர்கள். இருவரும் இணையும் நகைச்சுவைக் காட்சிகள் யாரையும் புண்படுத்தாத மென்மை ரகம்.

இசை அமைத்திருக்கும் தேவாவின் சகோதரர்கள் சபேஷ்-முரளி இருவரும் அண்ணன் காட்டிய ஷார்ட் கட் வழியில் பயணம் செய்வதற்குள்ளாகவே தடுக்கி விழுகிறார்கள்.

கதை + பாத்திரப் படைப்புக் கூட்டணியில் இயக்குனர் நம்பிக்கை வைத்திருப்பதால், பாறையில் ஈரம் கசிகிறது.

- விஷுவல்தாசன்

● ஆவரேஜ்

பாறை பாறை பாறை பாறை பாறை



கௌசல்யா அழுதால் கூட்டமே அழும்!

ஹரிகதை விற்பன்னர் டி.எஸ். பாலகிருஷ்ண சாஸ்திரிகள் அண்மையில் காலமானார்.

அவரைப் பற்றி நினைவு கூர்கிறார் ஹரிகதை விற்பன்னர் கல்யாணபுரம் ஆராவமுதாச்சார்யார்:

பளபளப்பான அங்கவஸ்திரத்தை, தோளில் மாலையாகப் போட்டுக் கொண்டு, ருத்ராட்ச மாலை துலங்க, சிப்ளாக்கட்டையை ஏந்திக் கொண்டு அவர் மேடையேறி நின்றாலே... அவையில் குண்டூசி விழும் சப்தம் கூடக் கேட்டு விடும்! அவ்வளவு நிசப்தம்!

பாலகிருஷ்ண சாஸ்திரிகள் உபன்யாசம் எப்போதும் 'பேக்ட் - ஹவுஸ்' நிகழ்ச்சிகள் தாம். நாற்பது நாட்கள் தொடர்ந்து இராமாயணம், மகாபாரதம் சொன்னாலும், நாளுக்கு நாள் களை கட்டிக் கொண்டே போகுமே ஒழிய, நிகழ்ச்சி சற்றும் தொய்வடையாது.

அதற்குக் காரணம், ஹரிகதையை

• டி.எஸ். பாலகிருஷ்ண சாஸ்திரிகள்


டிரமடைஸ் செய்து சொல்வதில் அவருக்கு இருந்த அசாத்தியத் திறமை. " 'இராமன் காட்டுக்குப் போறானே'னு கௌசல்யா அழுறான்னு" அவர் சொல்வார். அதைக் கேட்டுட்டு, மொத்த ஜனமும் கதறி அழும். பட்டாபிஷேகக் காட்சியை விவரிப்பார். என்னவோ அந்த உத்சவத்துலே தாங்களே கலந்துக்கிட்ட மாதிரி ஜனங்களும் குதூகலிப்பார்கள்... அற்புதமாக சிச்சுவேஷன்ஸ் கிரியேட் பண்ணுவார்.

மாங்குடி சிதம்பர பாகவதர், திருவையாறு அண்ணாசாமி பாகவதர் போன்ற தொன்மையான ஹரிகதைக் கலைஞர்கள், மராட்டிய பாணியில் 'ஹரி கீர்த்தன்' நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருந்தார்கள். ஆனால் அதை பக்கவாத்தியத் துணையோடு, இராமாயண, மகாபாரத ஸ்லோகங்களையெல்லாம் தாளத்தோடு பாட்டாக மாற்றி, மிக ஜனரஞ்சமாக்கியவர் பாலகிருஷ்ண சாஸ்திரிகள். நல்ல சங்கீத ஞானம் கொண்ட, வல்லீஸன் அவருக்குச் சகோதரராக அமைந்ததும் கூடுதல் சிறப்பம்சமாகிவிட்டது. சங்கீதத்தில் அவர் புகுத்திய புதுமைகளைக் கேட்க என்றே பெரிய சங்கீதக்காரர்கள் அவருடைய நிகழ்ச்சிக்கு வருவார்கள்.

கிட்டத்தட்ட பன்னிரண்டு வருஷமாக மும்பை ஆஸ்திக சமாஜத்தில் தொடர்ந்து ஹரிகதை செய்து கொண்டிருந்தவர் பாலகிருஷ்ண சாஸ்திரிகள். திடீரென்று உடல் நிலை சரியில்லாமல் போனபோது, "எனக்குப் பதிலாக ஹரிகதை நிகழ்த்த யாரையாவது கூப்பிடுவதாக இருந்தால், கல்யாணபுரம் ஆராவமுதனைக் கூப்பிடுங்கள்" என்று அவரே சொல்லியிருக்கிறார். அவரது சிபாரிசு காரணமாக நான் பதின்மூன்று வருஷமாக மும்பை ஆஸ்திக சமாஜத்தில் ஹரிகதை செய்கிறேன்.

அந்தத் தங்க மகுடம் அவருக்கே உரியது!

— வாணிஸ்ரீ







திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், 35 கூத்தனூர், அருள்மிகு

ஸ்ரீ மஹா ஸரஸ்வதி அம்பாள் ஆலய உத்தம பக்ஷ

மஹா கும்பாபிஷேக பத்திரிகை

6-7-2003 ஞாயிற்றுக் கிழமை

தெய்வத் தமிழ் நாட்டில் மஹா நதியாகிய அரசலாற்றங்கரையின் தென்கரையில் உள்ள அம்பாள் புரி என்னும் இடத்தில் சந்தக் கவியான ஒட்டக்கூத்தர் நித்தம் வழிபட்டு தவம் புரிந்ததால் தேவி ஸரஸ்வதி காட்சி தந்து அருளினாள். மகாகவி கம்பரின் தமிழ்ப் பாடலின் மேல் கொண்ட விருப்பத்தினால் ஸ்ரீமஹா சரஸ்வதி அம்பாள் அரசனின் தண்டனையில் இருந்து காப்பாற்றினாள். தற்காலம் இவளை வந்து உளமார வழிபடுகிறவர்களுக்கு ஆய கலைகள் அறுபத்தி நான்கினையும் அவரவர் விருப்பத்திற்கும், தகுதிக்கும் ஏற்றார் போல வாரி வழங்கிக் கொண்டிருக்கிறாள். அதே போல பேசும் ஆற்றல் இல்லாதவர்களும், திக்குவாய் உள்ளவர்களும் அம்பாள் சந்நிதியில் வழிபட்டு அவள் அருள் பிரசாதத்தை அடைகின்றனர்.

பல அரசர்கள், பல சான்றோர்கள் வழிபட்டு வந்த இந்த ஆலயம் இப்போது புதுப்பிக்கப்பட்டு இராஜகோபுரம் கட்டி முடிக்கப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. சுபானு ஆண்டு ஆனி மாதம் 22-ந் தேதி (06-07-2003) ஞாயிற்றுக்கிழமை உத்திர நட்சத்திரம் அமிர்தயோகம் கூடிய சுபதினத்தில் உதயாதி நாழிகை 7.30க்கு மேல் 11.15 நாழிகைக்குள் (காலை 9.00 மணிக்கு மேல் 10.30 மணிக்குள்) வரும் சிம்மலக்ன சுப வேளையில் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீஸ்ரீ ஜெயேந்திர ஸரஸ்வதி சுவாமிகள், ஜகத்குரு ஸ்ரீஸ்ரீ சங்கர விஜயேந்திர ஸரஸ்வதி சுவாமிகள் முன்னிலையில் கூத்தனூர் அருள் தரும் ஸ்ரீ மஹா ஸரஸ்வதி அம்பாளுக்கு உத்தம பக்ஷயாகத்துடன் வேத சிவாகம முறைப்படி மஹா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. கும்பாபிஷேகத்திற்கு மெய்யன்பர்கள் வந்து தரிசித்து சகலகலாவல்லியின் அருளைப் பெற பணிவன்புடன் அழைக்கிறோம்.

எஸ். இளங்கோ B.A., B.L.,
இணை ஆணையர் - இந்து அறநிலையத்துறை - தஞ்சாவூர்

ஏ. விஜயகுமார் M.A. B.L.,
உதவி ஆணையர். இந்து அறநிலைத் துறை - நாகப்பட்டினம்.

என். தெட்சிணாமூர்த்தி, B.A.,
செயல் அலுவலர், இந்து அறநிலைத் துறை.

இங்ஙனம்
கூத்தனூர் ஸ்ரீ மஹா ஸரஸ்வதி சேவா சமிதி நற்பணி மன்றம்
35, கூத்தனூர், பூந்தோட்டம் Post,
Pin Code: 609 503. Ph: 04366 - 238445.
மற்றும் கிராமவாசிகள்

கும்பாபிஷேக சர்வசாதகராக இருந்து நடத்தி வைப்பவர் "சிவாகம ஞானசாகரம் சாக்ஷரத்னம் திருக்கோலக்கா"
என். இராமநாத சிவாச்சாரியார்
தலைமை ஆசிரியர், சம்பூர்ண வேத சிவாகமபாடசாலை, திருஞானசம்பந்தர் அவதார ஸ்தலம், சீர்காழி - 609 110.

கூத்தனூர், மயிலாடுதுறை - திருவாரூர் பஸ் மார்க்கத்தில் பூந்தோட்டம் பஸ் நிலையத்திலிருந்து 1/2 கி.மீ. தொலைவில் உள்ளது.

'பூசாரியைப் பார்க்கப் போய் தெய்வமே எதிர்பட்டாற் போல்' என்ற உவமை இங்கே பொருந்துமா தெரியவில்லை... காஜோல் வெறும் பூசாரி, தேவ்கன் என்ன தெய்வமா என்ற அனாவசிய சர்ச்சை எதற்கு? பேசாமல் 'அம்மன் தரிசனத்திற்கு ஏங்குகையில் ஈசனே காட்சியளித்தாற் போல்' என்று வைத்துக் கொள்வோமா?

காஜோலுக்குப் பெண் குழந்தை பிறந்திருக்கிறதென்றவுடன், அவருடன் நாலு வார்த்தை பேசத்தான் முயற்சித்தோம்... ஆனால் அதிர்ஷ்ட வசமாக சிக்கியவர் அஜய் தேவ்கன். 'அப்பா'டா என்று இல்லாமல், புதுப் பதவியால் 'அப்பப்பா' என்று சந்தோஷக் கூத்தாடுகிறார். புதிதாக முளைத்திருக்கும் இரண்டு கொம்புகளுக்கு, பூ சுற்றும் வேலையைத் துவங்கினோம்...

"கங்கிராட்ஸ்... மனம் கனிந்த வாழ்த்துக்கள்... யாரைப் போலிருக்கிறது குழந்தை!"

"ஒரு குட்டி தேவதையைப் போல் இருக்கிறது; காஜோலைப் போலவா, என்னைப் போலவா என்று முகத்தைப் பார்த்து இப்போது சொல்ல முடியவில்லை; ஆனால் ஒன்று நிச்சயமாகச் சொல்ல முடியும். இந்த முகத்தைப் பார்த்தால் என்னுடைய டென்ஷன், கவலைகள், கஷ்டங்கள் எல்லாமே பறந்தோடி விடுகின்றன.

'நைசா'க நாலு வார்த்தை!

இத்தனைச் சின்ன வடிவில் இவ்வளவு பெரிய ஆனந்தத்தை எப்படி அடக்கி இருக்கிறானோ அந்த இறைவன்? இந்த அரிய பொக்கிஷத்தை எனக்களித்தவனுக்கு எப்படி என் மன நிறைவைத் தெரிவிப்பதென்றே தெரியவில்லை."

"அன்புப் பரிசு அது இதுவென்று வாரி வழங்கிவிட வேண்டியதுதானே?"

"காஜோலுக்கு ஒரு மெர்சிடெஸ் காரைப் பிரசண்ட் பண்ணியிருக்கிறேன் என்பது உண்மைதான்! ஆனால் அவை எல்லாம் என் உள்ளத்து உணர்ச்சிகளுக்கு அளவு கோல் அல்ல. என் குடும்பத்தாரும் காஜோலும் எனக்களித்திருக்கும் இந்தப் பொன்னான கணங்களை, என் மனத்தின் அடித்தளத்தில் அப்படியே வைத்துப் பூட்டிவிட்டேன்."

"மற்றவர்களுக்குப் பார்ட்டி எல்லாம் கொடுத்தாகி விட்டதா?"

"அதெல்லாம் எப்போ வேண்டுமானாலும் கொடுக்கத் தயார்"

"நைசாக நழுவுகிறீர்களே?"

"நைசா நழுவுவதா? நோ நோ... நைசாவைத் தழுவிக் கொஞ்சத்தான் ஆசைப்படுகிறேன். ஏனென்றால் 'நைசா' என் மகள்; அழகிய முகம் கொண்ட கிரேக்க தேவதையின் பெயர் "நைசா". அதையே குழந்தைக்கு வைத்திருக்கிறோம்."

"அது சரி... நைசான சூழலில் இதென்ன பயங்கரமான ஒரு சினிமா. உங்கள் லேட்டஸ்ட் படம் 'பூத்' பற்றித்தான் கேட்கிறோம்!"

"ஆமாம், எல்லோரும் அது பூதப் ப்ரேதப் படம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்; உண்மையில் அது ஒரு திகில் படம்தான்; ஒரிஜினல் கதை; தியேட்டரே அலறும் என்பது நிச்சயம். அதுவும் ரேகாஜி, நானா பாடேகர், ஊர்மிளா போன்றோர் தூள் கிளப்புகிறார்கள். படா த்ரில்லிங்காக இருக்கும்! அதேபோல் 'கயாமத்'திலும் வித்தியாசமான, உணர்ச்சி வயப்பட்ட ரோல், பயங்கர டிப்ரஷனைப் போக்க, 'ட்ரக்ஸ்' தேவைப்படும் பாத்திரம்!"

"'லெஜண்ட் ஆஃப் பகத் சிங்'கின் வெற்றிக்குப் பிறகு, நீங்கள் தேச பக்தி மிகுந்த பாத்திரங்களையே எடுத்துக் கொள்வதாகச் சொல்கிறார்களே?"

"அப்படி இல்லை; ஜே.பி. தத்தாவின் LOCயில் கூர்க்கா பெட்டாலியனில் பரம்வீர் சக்ரா வாங்கிய மனோஜ் பாண்டேயின் பாத்திரம் பண்ணுகிறேன், மற்றபடி, 'தீவானகே'யில் நான் செய்த நெகடிவ் ரோல் மனசுக்கு ரொம்பப் பிடித்திருந்தது. 'ஜகம்' பாத்திரம் வித்தியாசமானது. பலருக்கு 'தில்



தே சுகே சனம்' படத்தின் காதல் தியாகிப் பாத்திரம் பிடித்தது. 'கம்பெனி'யில் என் திறமையுடன் நம்பிக்கையும் வளர்ந்தது. முதல் படமான ஃபூல் அவுர் காண்டே-யிலேயே 'சாக்லேட்' ஹீரோ இமேஜை உடைத்தெறிந்தவன் நான் ஒரே மாதிரி ரோலை நிச்சயம் ரிபீட் பண்ண மாட்டேன்."

"குழந்தை பிறந்த அதிர்ஷ்டம் என்று பொதுவாகச் சிலர் சில முடிச்சுப் போடுவார்கள். அப்படி ஏதாவது...?"

"வித்தியாசமான ஒரு படத்தைத் தயாரிக்க வேண்டுமென ஆவல், சஞ்சய் தத், நிதின் மன்மோஹனுடன் புதிதாகக் கூட்டுச் சேர்ந்திருக்கிறேன். பார்ப்போம்... இப்போதைக்கு 'நைசா'தான் என் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கிறாள். சினிமா ப்ரொட்யூசர் பதவியைவிட, இந்தப் பாப்பாவின் அப்பா பதவி உசத்திதானே?

ஓ.கே... பூப்பூக்கும் ஓசையைக் கேட்டிருக்கிறார். அந்த சந்தோஷத்தில் இன்னும் கொஞ்சம் திளைக்க விடுவோமே?

— ஜேயார்

• வடசென்னை மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான பி.கே. சேகர் பாபுவை, சனிக்கிழமை தோறும் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாள் கோயிலில் பார்க்கலாம். பெருமாள் பக்தர். இவரைப் போலவே மற்றொரு ரெகுலர் விசிட்டர் : சசிகலா.

• காலையில் எழுந்தவுடன் டிரெட் மில் மிஷினில் உடற்பயிற்சி செய்வதோடு மகள், செந்தாமரையுடன் ஷட்டில் காக் விளையாடுவது ஸ்டாலினின் அன்றாட வழக்கம்.

• பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் குடும்பத்தில் குவா... குவா சத்தம். மகன் அன்பு மணிக்கு மூன்றாவ தாக பெண் குழந்தை பிறந்திருக்கிறது.

• சீனாவிலிருந்து வாங்கி வந்த ஃபென் சூய் வாஸ்து பொருள்களைக் கொண்டு, ஆழ்வார்பேட்டை புது வீடெங்கும் அலங்கரித்திருக்கிறார் ராசாத்தி அம்மாள்.











• 'விடுதலைச் சிறுத்தை' திருமாவளவன், தமது அமைப்பு சார்பாக வெளியிடப்படும் 'தாய்மண்' என்ற பத்திரிகையைத் தயாரிப்பதில் ஆர்வமாய் ஈடுபடுகிறார். சமீபத்தில் அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை சார்பாக அமெரிக்கா சென்று 'சாதி விழிப்பும் தமிழ் தேசியமும்' என்ற பெயரில் உரையாற்றி விட்டு வந்திருக்கிறார்.

• அ.தி.மு.க. மாணவரணிச் செயலாளரான டாக்டர் விஜயபாஸ்கருக்கு கல்யாணம் நிச்சயமாகியிருக்கிறது. மணமகள் கோவையைச் சேர்ந்த எம்.பி.ஏ. பட்டதாரி. முதல்வர் குறிக்கும் நாள்தான் முகூர்த்த நாள்.

• அப்பாவைப் போலவே எளிமையான ரப்பர் செருப்பு அணிகிறார் ஜி.கே.வாசன்.

• சோ. பாலகிருஷ்ணன் கைவசம் எப்போதும் என்பது பக்க நோட்டு இருக்கிறது. மனத்தில் பளிச்சிடும் எண்ணங்களைக் கவிதையாக வடித்து வருகிறார். இரண்டாவது கவிதைத் தொகுப்பு விரைவில் வெளிவர இருக்கிறது.

• கலைஞர் குடும்பத்தினர் திருக்குவளை அங்காளம்மன் கோயிலில் வேண்டிக் கொண்டு மந்திரிக்கப்பட்ட கயிறு ஒன்றை அழகிரிக்குக் கட்டிக் கொள்ள கொடுத்திருக்கிறார்கள்.

• முன்னாள் அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரனைப் பலர் மறந்திருக்கக் கூடும். அசோக் நகரில் வீடு இருந்தாலும், பெசன்ட் நகரில் ஓர் அழகான குடில் அமைத்து, அதில்தான் விசிட்டர்களைச் சந்திக்கிறார். துணைக்கு நிறைய புத்தகங்கள்.

• கோக் - கோக்கு - காய் என்ற ஜப்பானிய கராத்தே பயிற்சி அமைப்புக்கு இந்தியாவின் தலைமைப் பயிற்சியாளர் கராத்தே தியாகராஜன்தான். ஒரு லட்சம் மாணவர்கள் இந்தப் பயிற்சிப் பள்ளியில் கராத்தே பயில்கிறார்கள். சுமார் நூறு ஆசிரியர்கள் 'கராத்தே'வின் தலைமையில் இயங்குகிறார்கள்.



• டாக்டர் ராமதாஸ் வசிக்கும் தைலாபுரம் பண்ணை வீட்டை ஒட்டி, அரசியல் பயிற்சிப் பள்ளி அரங்கு ஒன்றை அமைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஏரியாவிலிருந்தும் வாரம் ஒரு தொண்டர் குழுவை அழைத்து, தன்னலமற்ற மக்கள் சேவை, சுற்றுப்புறச் சூழல், அரசியல் சட்டம் ஆகியவற்றைப் பற்றி பாடம் எடுக்க இருக்கிறார்கள்.

• முன்னாள் அமைச்சர் துரைமுருகன் குடும்பத்தினர் காய்கறிகள், பழங்கள், ஏற்றுமதி வியாபாரம் செய்து வருகின்றனர். இப்போது பளிங்கு சலவைக் கற்கள் வியாபாரத்தில் இறங்கியிருக்கிறார்கள். இதற்காக ராஜஸ்தானில் முப்பத்தாறு குவாரிகளைக் குத்தகைக்கு எடுத்திருக்கிறார்கள்.



• அ.தி.மு.க.வைச் சேர்ந்த அவினாசி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மகாலிங்கம், மத்திய ரிசர்வ் போலீஸில் பணியாற்றியவர். துப்பாக்கியைத் தூக்கிப் போட்டுவிட்டு எம்.எல்.ஏ.வான மகாலிங்கம், தமது சுய பாதுகாப்பை முன்னிட்டு ரிவால்வர் வைத்துக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்.

அழகிரி கட்டிக்கொண்ட அங்காளம்மன் கயிறு!

• நீண்ட தூர கார் பயணத்தின்போது ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் மறக்காமல் எடுத்து வைத்துக் கொள்வது, ஒரு டஜன் பழைய சிவாஜி படப் பாடல் கேஸட்டுகள்.

- கௌசி



அப்துல் கலாம்: சென்னை விஸிட்

• "உன்னோட பூதக்கதை கேட்டு யாராவது திருந்துவாங்களாப்பா?"



• "ரசிகர் மன்றமா? மூச்!"



• "ஆளுக்கொரு 'அக்னிச் சிறகுகள்' எழுதணும், தெரிஞ்சுதா..."



• "ஸாரி... திருவேற்காடு கல்யாண உற்சவத்துக்கு வர முடியாமப் போச்சு!"



படங்கள்:
மீடியா ராமு

அக்னிசர்மா பக்கம்

மேஷம்: குடும்பத்துல மங்களகரமான காரியங்கள் நடக்கும். சொந்த விவகாரங்கள்ல உங்களுக்குச் சாதகமான தீர்ப்பு வரும். சிலர் புதுசா வீடு, மனை வாங்க வாய்ப்பிருக்கு. இரும்பு, இயந்திரம், காண்ட்ராக்ட்ஸ், கமிஷன் ஏஜென்சி போன்ற துறைகள் லாபம் தரும். அலுவலகத்தில் சுமுகமான நிலைமை ஏற்படும்.

ரிஷபம்: இந்த வாரம் உற்சாகமான மன நிலை ஏற்படும். மறைமுக நேர்முக எதிர்ப்புகள் மறையும். எல்லாவிதமான இடையூறுகளும் காணாமப் போகும். பண வசதி தாராளமா இருக்கும். ஏழரைச் சனி இரண்டாவது சுற்றில் உள்ளவங்களுக்கு யோகம் காத்திருக்கு.

மிதுனம்: இந்த வாரம் பண நடமாட்டத்துக்குப் பஞ்சமில்ல. தாராளமா கிடைக்கும். தெய்வபலம், தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். பத்தாம் இடத்துக்கு அதிபதி குரு தன குடும்ப வாக்குஸ்தானத்தால் உச்சம் பெற்று உலவுவதாலும், சனி பகவான், ராசியில் மற்ற கிரகங்களோடு கூடி இருப்பதாலும், அலுவலகத்தில் எவ்வளவு சிக்கல் வந்தாலும் 'புஸ்ஸ'ன்னு போயிடும்.

கடகம்: இந்த வாரம் எதிர்ப்புகள் மறையும். எதிர்பாராத சந்திப்பு உண்டு. இவங்களால ஆதாயம் இருக்கு. பணவசதி தேவைக்கேற்ற படி கிடைக்கும். கூடவே எதிர்பாராத செலவும் வந்து இம்சிக்கும். வேலை விஷயமா சிலர் வெளியூர், வெளிநாடு போக நேரும்.

சிம்மம்: இந்த வாரம் எல்லா வகையிலும் உங்களுக்கு அனுகூலமான திருப்பம் ஏற்படும். தெய்வ பலம் அதிகரிக்கும். எதிரிகள் மறைந்து போவாங்க. இதுவரை இருந்து வந்த குழப்பங்கள் மாயமாகும். புதிய முயற்சிகள்ல இறங்கவா? வேண்டாமா?ன்னு யோசிச்சுக்கிட்டிருந்தவங்க, இப்ப தாராளமா இறங்கலாம்.

கன்னி: இந்த வாரம் நீங்க தொட்டது துலங்கும். மனசுல தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதியவங்க அறிமுகத்தால பலன் உண்டு. புதுசா வேலை தேடுறவங்களுக்கு வாய்ப்பு உண்டு. வேலை விஷயமா வெளியூர், வெளிநாடு போக வாய்ப்பிருக்கு. சுயமா தொழில் பண்றவங்களுக்கு முன்னேற்றம் உண்டு.

துலாம்: உற்சாகமான மன நிலை இருக்கும். முகத்துல தனி வசீகரம் ஏற்படும். எல்லா விதமான எதிர்ப்பும் மாயமாகும். அலுவலகத்தில் சின்னச் சின்னப் பிரச்னைகள் ஏற்பட்டு விலகும். எதிர்ப்புகள் மறையும். புதிய முயற்சி கூடி வரும். சுயமா தொழில் பண்றவங்களுக்கு மேன்மை உண்டு.

விருச்சிகம்: இந்த வாரம் எதிர்ப்புகள் மறையும். எதிரிகள் ஓடிப் போயிடுவாங்க. அலுவலகத்தில் இதுவரை இருந்து வந்த குழப்பங்கள், பிரச்னைகள் இப்ப காணாமப் போகும். சிலருக்குப் பதவி உயர்வு, இடமாற்றம் ஏற்படும். புதிய வேலை முயற்சிகள் கைகூடும்.

தனுசு: இதுவரை தாமதமாகி வந்த காரியங்கள் இப்ப டக்குன்னு முடியும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். குடும்பத்தில் பிரச்னைகள், கருத்து வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்பிருக்கு. இயந்திரம், உலோக வகை, தோல்பொருள் ஆகிய துறைகள் லாபம் தரும்.

மகரம்: குடும்பத்துல கல்யாணம் ஆகாதவங்களுக்கு அதுக்கான வாய்ப்புத் தேடி வரும். பெண்கள் தங்கள் எண்ணம் நிறைவேறப் பெறுவார்கள். உல்லாசப்பயணம், ஜாலி டூர், பார்ட்டின்னு ஜமாய்க்கப் போறீங்க. தெய்வ பலம் அதிகரிக்கும்.

கும்பம்: இதுவரை இருந்து வந்த எதிர்ப்புகள், தடைகள் இப்ப விலகும். எந்தக் காரியத்தையும் தலைகீழா நின்னாவது முடிச்சிருவீங்க. அலுவலகத்தில் இருந்து வந்த குழப்பங்கள், டென்ஷன் இப்ப நீங்கும். மறைமுக, நேர்முக எதிர்ப்புகள் மறையும்.

மீனம்: சினிமா, நாடகம், சங்கீதம் போன்ற கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் புகழ், பாராட்டு கூடும். குருபலம் நிறைந்திருப்பதால குடும்பத்துல ஒற்றுமை, அமைதி நிலவும். கல்யாணம் ஆகாதவங்களுக்கு அதுக்கான வாய்ப்புத் தேடி வரும். சிலர் புது வீடு கட்ட, வாங்க வாய்ப்பிருக்கு. எதிர்ப்புகள் மறையும்.

நடக்குமென்பார்; நடக்கும்!

ஜூன் 25 முதல் ஜூலை 1 வரை

ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி நாளில் "ஆன்மீகம்" தெய்வீக மாதஇதழும்
ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா அவர்களும் இணைந்து நடத்தும்,
அன்பர்கள் இஷ்டப்படும் ஹோம பூஜையில், நேரிலேயே கலந்து கொள்ளும் வாய்ப்பு !

பேரன்புடையீர், வணக்கம்! எடுத்த முயற்சிகள் வெற்றியடையவும், சங்கடங்களின்றி சந்தோஷமாக வாழவும், செய்தொழிலில் லாபம் பெறவும், மகப்பேறு பெற்று மகிழவும், திருமணத்தடைகள் நீங்கி, குதூகலம் பெறவும், கடன் தொல்லையிலிருந்து விடுபடவும், பிள்ளைகள் கல்வியில் முதல் நிலை பெறவும், தீராத நோய்களிலிருந்து நிவாரணம் பெறவும், நவகிரஹ தோஷங்களிலிருந்து விலகி நலம் பெறவும், பிரிந்த குடும்பத்தினரும், தம்பதியினரும் ஒன்று சேரவும், உத்தியோகம் மற்றும் அயல்நாடு செல்லவும் நினைக்கும் ஒவ்வொருவருக்காகவும், மாதா மாதம் பௌர்ணமி அன்று திருவல்லிக்கேணியில் சகல ஐஸ்வர்யங்களும் கிடைக்கவேண்டி, காலை 06.00 முதல் 10.00 வரை "ஆன்மீகம்" தெய்வீக மாத இதழ் சார்பாக கீழ் கண்ட சிறப்பான ஹோமங்களை நடத்தவிருக்கிறோம்.

ஸ்ரீ ராஜ கணபதி மஹாமந்த்ர ஹோமம்

ஓம் எனும் பிரணவஸ்வரூபமாக விளங்கும் விநாயகர், விக்கினங்களைத் தீர்க்கும் விக்னேஸ்வரர், மஹாபாரதம், வள்ளி திருமணம் அரங்கேற உறுதுணையாய் இருந்த கணபதியை வணங்கி வழிபட்டு துவங்கும் காரியங்கள் யாவுமே வெற்றிகரமாக நிறைவு பெறும் என்பது வேத வாக்கு. அத்தகைய கணபதிக்கு ஹோமங்களைச் செய்து புதிய செயல்களில் ஈடுபடுவது உத்தமமான செயல். எனவே இந்த மாத ஸ்ரீ ராஜ கணபதி மஹாமந்த்ர ஹோமத்தில் பங்கு கொண்டு பலன்களை அடைய அன்புடன் அனைவரையும் அழைக்கிறோம்.

ஆனி	13.07.03	ஞாயிறு	தடைகள் அனைத்தும் விலக	ஸ்ரீ ராஜ கணபதி மஹாமந்த்ர ஹோமம்
ஆடி	12.08.03	செவ்வாய்	நினைத்தகாரியங்கள் சித்தியாக	ஸ்ரீ துர்கா ஸூக்த - பஞ்ச ஸூக்த ஹோமம்
ஆவணி	10.09.03	புதன்	தீராத வியாதிகள் விலக	ஸ்ரீ தன்வந்திரி ஹோமம்
புரட்டாசி	10.10.03	வெள்ளி	சத்ரு பயம் விலக	ஸ்ரீ நரஸிம்ம ஸுதர்சன ஹோமம்
ஐப்பசி	08.11.03	சனி	செல்வம் பெருக	ஸ்ரீ லக்ஷ்மி குபேர ஹோமம்
கார்த்திகை	08.12.03	திங்கள்	நவகிரஹ ப்ரீதி உண்டாக	ஸ்ரீ நவகிரஹ ஜெயாதி ஹோமம்
மார்கழி	07.01.04	புதன்	சகல காரியம் ஜெயம் உண்டாக	ஸ்ரீ மஹாமேரு பூஜையும், வாயு ஸூக்த ஹோமமும்
தை	06.02.04	வெள்ளி	திருமண பாக்கியம் கை கூடி வர	ஸ்ரீ ஸ்வயம்வராகலாபார்வதி ஹோமம்
மாசி	06.03.04	சனி	வீடு அலுவலகம் வாஸ்து தோஷங்கள் விலக	ஸ்ரீ வாஸ்து ஹோமம்
பங்குனி	05.04.04	திங்கள்	வழக்கு விவகாரங்களில் வெற்றிகிட்ட	ஸ்ரீ ஸூக்த ஜெயாதி ஹோமம்
சித்திரை	சித்ரா பௌர்ணமியன்று		செய்வினை விலக	ஸ்ரீ ஸுதர்சன ஹோமம்
வைகாசி	வைகாசி விசாக பௌர்ணமியன்று		கல்வி செல்வம் உண்டாக	ஸ்ரீ நீல சரஸ்வதி ஹோமம்

ஜோதிடம், வெற்றிலை பிரசன்னம், வாஸ்து சாஸ்திரம் மற்றும் விருட்ச சாஸ்திரங்களில் தன்னிகரற்று விளங்கும் **வித்வான் கண்ணன் பட்டாச்சார்ய** அவர்களின் தலைமையில், வேத சாஸ்திரங்களில் பாண்டித்யம் பெற்ற வித்வான்களைக்கொண்டு, **ஸ்ரீ யோக ஆஞ்சநேயர் சக்தி பீடம், 177 / 84, வெங்கட்ரங்கம் பிள்ளைத்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5ல்** சிறப்பு ஹோமங்கள் மேற்கண்ட அட்டவணைப்படி ஒவ்வொரு மாதங்களிலும் நடைபெற இருக்கின்றன.

மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு மாதங்களில் நடைபெறும் ஒரு ஹோமத்தில் பங்குபெற கட்டணம் ரூ. 500- எல்லா ஹோமங்களிலும் பங்கு பெறவும், முன்பதிவு செய்யவும் கட்டணம் ரூ. 4500, செலுத்தி, நேரில் கலந்து கொள்ளலாம். நேரில் கலந்துகொள்ள இயலாதவர்கள் பெயர், நட்சத்திரம், இராசி, கோத்ரம் முதலியவைகளைக் குறிப்பிட்டு, என்ன பரிகாரத்திற்காக ஹோமம் செய்ய வேண்டும் என்பதையும், தங்களது விலாசத்தையும் எழுதி அனுப்பவும். பிரசாதங்கள் தபால்மூலம் அனுப்பப்படும்.

வைகானச தர்ம சாஸ்திரம், ஜோதிடம், வாஸ்து என ஒரு கோடியே 25 லட்சம் கிரந்தங்களை எழுதியவரும் ப்ருகு, அத்ரி, காஸ்யபர், மரீசீ ஆகிய மகரிஷிகளுக்கும் குருவானவருமான "ஸ்ரீ விகனச மகரிஷி" யின் அபூர்வ புகைப்படத்துடன் அட்சதை, மஞ்சள் கயிறு, குங்குமம், ஹோம பஸ்மம், 3x3 கனத்த செம்புத் தகட்டினாலான யந்திரத்துடன் வெள்ளியால் செய்யப்பட்ட லக்ஷ்மி டாலரும் மஹாஹோமத்தில் பங்குபெறுபவர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படும்.

ஸ்ரீ விகனச மகரிஷியின் பூஜிக்கப்பட்ட படம், இருக்கும் வீடுகளிலோ, அலுவலகங்களிலோ எந்த விதமான தோஷங்களும் அண்டாது என்பது உறுதி.



எடுத்த முயற்சிகளில் வெற்றிகளை உண்டாக்கும் ஹோமத்திற்காக 'Homadharisanam' எனும் பெயரில் ரூ. 500/ அல்லது ரூ. 4500, - Cheque/D.D./M.O. மூலம் அனுப்ப வேண்டிய முகவரி

ஹோம தரிசனம்

13, பொன்னம்பல வாத்தியார் தெரு, (ஸ்ரீ கபாலீஸ்வரர் கோவில் அருகில்)
மயிலாப்பூர், சென்னை-600 004. போன் : 2461 6466.



இந்த நூற்றாண்டில் இந்து மதம் 12



விட்டலநாதன் அருள் பாலிக்கும் பண்டரிபுரத்தில் 'சோகாமேளர்' என்றொரு அன்பர். (கிட்டத்தட்ட நம்மூர் நந்தனாரும் திருப்பாணாழ்வாரும் ஒன்றாக இணைந்தாற் போன்றவர்). நிறைந்த பக்தர். வாழ்வில் வறுமையும் பிரச்னைகளும் வந்த போதும் இறையன்பில் ஊறித் திளைத்த இவரின் மீது பொறாமை கொண்டனர் சிலர். 'தீண்டத்தகாதவர்' என்று காரணம் காட்டிக் கோயிலுக்குள் வருவதைத் தடை செய்தனர். ஊர்க் கட்டுப்பாட்டுக்கு அடிபணிந்தாலும், கோயிலுக்கு வெளியே நின்று கோபாலனை வணங்குவார், உள்ளத் தாமரைக்குள் விட்ட

ஔவியம் ஒதுக்குவோம்

லனை கொலு வைத்து உரையாடுவார்.

இப்படி அவர் மகிழ்ச்சியாக இருந்ததும் பொறுக்கவில்லை பிறருக்கு! பொய்க் காரணங்கள் பல சொல்லி அவரை ஊரை விட்டு வெளியேறச் சொன்னார்கள். ஒத்துக் கொண்டு, ஆற்றின் அக்கரையில் 'மங்கள பாரா' என்னும் கிராமத்துக்குப் போனார். ஆற்றங்கரையில் சின்னக் குடிசையமைத்துக் கொண்டு அமைதியாக வாழ்ந்தார். அவரின் பக்தியோ அன்போ நம்பிக்கையோ இம்மியும் பிசகவில்லை.

அவர் நிம்மதியாக இருப்பதும், சராசரி மக்கள் அவர் மீது மரியாதை செலுத்துவதும், தங்களை பகவான் பக்தர்களாகக் காட்டிக் கொண்ட சில 'பெரியவர்'களுக்குப் பிடிக்கவில்லை. பொறாமைச் சூழலுக்குள் சிக்கிக் கொண்ட அவர்கள் மேலும் திட்டமிட்டார்கள்.

சோகாமேளர் தன்னைக் காண வரா விட்டாலும் தான் போய் அவரைச் சந்திப்பது என்று முடிவு செய்தார் விட்டலநாதர். இரவு உணவுக்கு இவ்விடம் அடைந்தார்.

வீடு தேடி வந்த விட்டலனை விடுவார்களா, சோகாமேளரும் அவர் மனைவியும். உபசரித்தார்கள்; உட்கார வைத்து உணவு பரிமாறினார்கள். 'பிருந்தாவனப் பிள்ளையாயிற்றே, வெண்ணெயும் தயிரும் பிடிக்குமே' என்று தயிர்ப்பாத்திரத்துடன் பரிமாற வந்தார் அந்த அம்மாள். மகிழ்ச்சி ஒரு புறம்; விட்டலனைத் திருப்தியுடன் அனுப்ப வேண்டுமென்னும் தவிப்பு ஒரு புறம்; பதற்றம் ஒரு புறம். இப்படி எல்லாமாச் சேர்ந்து கைகள் பதற, கரண்டி நழுவ, தயிர், விட்டலனின் மேல் துண்டில் தெறித்து விட்டது.

துண்டில் சொட்டிய தயிரைப் பற்றிக் கவலையே படாமல், இலையில் பரிமாறப்பட்ட கெட்டித் தயிரைச் சுவை பார்த்தார் விட்டலர். சோகாமேளருக்கோ மனைவி மீது இலேசான கோபமும் வருத்தமும். 'மாமணியாய் வந்த விருந்தாளிக்கு இப்படிச் செய்து விட்டாயே!' என்று கடுமையாகவே மனைவியைச் சாடினார்.

குடிசை வீட்டில் கூறப்பட்ட கோபச் சொற்களை, அந்த நேரத்தில் ஆற்றங்கரையில் சென்று கொண்டிருந்த 'பெரிய இடத்து பக்தர்' கேட்டு விட்டார். பொறாமை தகித்தது; பொச்சாப்பு கொந்தளித்தது. தன்னை அவமானப்படுத்தத்தான் வேண்டுமென்றே, விட்டலன் தன் வீட்டுக்கு வந்தது போல நடித்தார் சோகாமேளர் என்று ஊரெல்லாம் புகார் செய்தார்; அரசனிடம் சென்று சோகாமேளரைக் கைது செய்யச் சொன்னார்.

இரவே சோகாமேளர் கைது செய்யப்பட்டார். மறுநாள் காலை ஆலயத்தைத் திருக்காப்பு நீக்கியவர்கள் திகைத்துப் போனார்கள். மேல் துண்டில் தயிர்த் திட்டுக்களோடு திருதிருவென விழித்தார் விட்டலநாதர்.

செய்தி பரவியவுடன் பார்ப்பதற்காக ஓடி வந்தார் கோள் சொன்னவர். ஆச்சரியத்தில் வாய்பிளந்து நின்றவர்தான் - அதற்குப் பிறகு அவருக்குப் பேசவே வரவில்லை.

மனிதச் சமூகத்தின் மிகப் பெரிய சாபக்கேடு பொறாமை. ஔவியம், அழுக்காறு, பொறாமை, பொச்சாப்பு - எந்தப் பெயர் சொல்லி அழைத்தாலும் பொறாமையின் கேடு குறைந்து விடப் போவதில்லை. பொறாமை - அதனால் விளையும்

டாக்டர் சுதா சேஷய்யன்

போட்டிச் செயல்பாடுகள் - இவைதாம் மனித இனத்தின் பல சரிவுகளுக்குக் காரணம் என்பதை நாம் அறிவோம். குடும்பங்களில் ஏற்படும் குழப்பங்கள், அண்டை அயலின் அவதூறுகள், அலுவலகங்களின் அடிதடிகள், ஏன், நாடுகளின் மோதல்கள் - இவற்றில் பெரும்பான்மையானவற்றுக்கு, 'அடுத்தவன் நம்மை விட வளர்ந்து விட்டானே' என்னும் பொறாமையும், அதன் விளைவான பொச்சாப்புப் பணிகளுமே காரணம்.

கூட்டு வாழ்க்கையைப் பொறாமை கூறு போட்டு விடும் என்பதால்தான், அதனை ஒரு குற்றமாகவே ஒதுக்கியது சனாதன தர்மம்.

பாவை நோன்பு நோற்கத் தொடங்கிய ஆண்டாள் நாச்சியார், விரத வழிமுறைகளை வகுத்தாள். அவற்றுள், 'செய்யாதனச் செய்யோம்' என்றும் தீக்குறளைச் சென்று ஓதோம்' என்றும் வகைப்படுத்தினாள். சனாதன தர்மம் எதைச் செய்யக் கூடாது என்று குறித்திருக்கிறதோ, அதைச் செய்ய மாட்டோம் என்றதோடு, 'கோள் சொல்ல மாட்டோம்' என்றும் கூடச் சேர்த்துக் கொள்வது ஏன்? ஒரு பெரிய விரதம். அதுவும் தெய்வத்தை எண்ணி எடுக்கப்படும் நோன்பு. கண்ணனையே கண்டதாகக் கொண்டு கொண்டாடப் பெறும் விரதம். இதில், கோள் சொல்வது பற்றிக் குறிப்பிட்டு, அது கூடாது என்று வலியுறுத்துவதன் அவசியம் என்ன?

கோள் சொல்லப்பட்டதால், அவதூறு பேசப்பட்டதால் எவ்வளவு உறவுகள் சிதைந்திருக்கின்றன? எவ்வளவு உணர்வுகள் செல்லரித்திருக்கின்றன? எத்தனை மொட்டுகள் மலராமலேயே மக்கியிருக்கின்றன?

கோள் சொல்வதும், அவதூறு ஏற்படுத்துவதும், பொறாமையின் புண்முகங்கள்தாமே! முதலில் விரிசலாய்த் தொடங்கிப் பின்னர் ஒட்டவே முடியாத ஓட்டையாய், நன்மைகளைத் துளைத்து விடும் தனிப்பேராற்றல், பொறாமையின் ஸ்பெஷாலிட்டி!

துரியோதனனும் பீமனும் ஒரே வயதுக்காரர்கள். தன்னை விடத் திறமையிலும் ஆற்றலிலும் பாண்டவர்கள் உயர்ந்திருந்தார்கள் என்பதாலேயே, அவர்கள் மீது பொறாமை கொண்டு அவர்களுக்கு எத்தனையோ தீங்கிழைக்க முனைந்தான் துரியோதனன். குறிப்பாக பீமன் மீது அவனுக்கு ஏகப்பட்ட பொறாமை. பீமன் தூங்கும் போது கயிறுகளால் கட்டி நதியில் போடச் செய்வான்; உணவில் விஷத்தைக் கலப்பான்; பாம்புகளை மேலே விடுவான்.

ஒவ்வொரு முறையும் பாண்டவர்கள் ஏதாவது ஒரு வகையில் தன்னையும் தன் தம்பிமார்களையும் விடச் சிறந்தவர்கள் என்று புரிய வரும் போது, அவனுடைய பொறாமை அதிகமாகும்; ஆத்திரம் அதிகமாகும்; கேடுகளும் அதிகமாகும். கடைசியில், மிகப் பெரிய போரிலும் அழிவிலும் கொண்டு போய் விட்டது. ஏதாவது ஒரு தருணத்தில், அந்தப் பொறாமை சற்றே சமனப்பட்டிருந்தாலும் போதும் - குருக்ஷேத்திர அழிவு தவிர்க்கப்பட்டிருக்கும்.

இராமனுடைய வரலாற்றிலும், முக்கியமான திருப்புமுனைகள் பொறாமையால்



"உங்க பையன் பிற்காலத்துல அரசியல்வாதியா தான் வருவான்...!"

"எதவச்சி வாத்தியாரய்யா அப்படிச் சொல்றீங்க...?"

"கிளாஸ்ல ஏதாச்சும் கேள்வி கேட்டா, 'கடமை தவறாத, கண்ணும் கருத்துமாக ஆசிரியர் பணியைச் செய்து வருகின்ற ஐயாவை வணங்கி எனது உரையைத் துவக்குகிறேன்'னு பேச ஆரம்பிச்சிடுறான்...!"

- எர்ணாகுளம் ராதாகிருஷ்ணன்

ஏற்பட்டவையே! மாற்றான் மகனுக்குப் பட்டம் சூட்டப்பட்டு விட்டால், மாற்றானின் அந்தஸ்தும் உயர்ந்துவிடும், தான் தாழ்ந்து விடுவோம்' என்றெண்ணிய கைகேயியின் பொறாமைதான் கதையின் முதல் திருப்பம். இராமனும் சீதையும் இலட்சுமணனும் காட்டுக்குப் போன பின்னரும் பொறாமை விளையாடியது; ஆனால் - வேறு ஒரு வடிவில்! இராமனின் அழகில் மயங்கிய சூர்ப்பனகை, வார்த்தைகளால் வல்வில்காகுத்தனை வசப்படுத்தி விட முனைந்தாள். அப்போதெல்லாம் கூட அவ்வளவு சிக்கலில்லை. சீதையைக் கண்ட பின்னர், 'இந்த அழகி உடனிருப்பதால்தான் என்னைச் சீண்டவில்லையா?' என்று பொறாமை உந்தித் தள்ள, சீதையைத் தூக்கிப் போக முனைந்தாள்; முடியாத போது மூக்கறுபட்டாள்; ஆற்றாமையை அண்ணன் இராவணன் மனத்தில் காமமாக ஏற்றி விட்டாள். ஜனஸ்தானத்தில் சுற்றித் திரிந்து கொண்டிருந்த சூர்ப்பனகை, பொறாமையால், நீலமாமணி நிருதர்வேந்தனை (இராவணனை) மூலநாசம் பெற முடிப்பவளாக மாறினாள்.

ஒருவரின் பொறாமை அவரை மட்டுமல்லாமல், அவரைச் சுற்றியிருப்பவர்களையும் அழித்து விடும்.

பல சமயங்களில் நாம் ஒரு துறையில் அல்லது திறமையில் வளரும் போது, அதே துறையில் அல்லது திறமையில் இன்னொருவர் இருந்தால், அவர் மீது பொறாமை கொள்வோம். அந்தப் பொறாமையின் விளைவாக அவரை அடித்து வீழ்த்த நினைப்போம். இது இயல்பாக ஏற்படக் கூடிய மனத்தடுமாற்றம். இத்தகைய தடுமாற்றம் கூடாது என்றுதான் பொறாமை என்னும் ஔவியத்தைத் தடைசெய்கிறது தர்மம். நாம் பிறர் மீது பொறாமை கொண்டால், கடவுள் நம் மீது கோபப்படுவார்.

சிவபெருமான் மீது பொறாமை கொண்ட தாருகவனத்து முனிவர்கள், அவரை எதிர்த்து யாகம் செய்தார்கள். யாகத்தில் வந்த புலியை சிவன் மீது ஏவினார்கள், புலியை அடக்கி வீழ்த்தி புலித்தோலை அணிந்தார் அந்த பொன்னார்மேனியன். யாகத்தில் பாம்புகளை வரவழைத்து அவற்றையும் ஏவினார்கள். அவற்றையே தன்னுடைய அணிகலன்களாக ஆக்கிக் கொண்டார் அரனார்.

அறத்துக்கு எதிரானவை என்று நான்கு விஷயங்களைச் சுட்டினார் வள்ளுவப் பேராசான். அவற்றுள் இன்னாச்சொல் மற்றும் வெகுளி (கோபம்) ஆகியவை வெளியில் தெரிந்து விடும். ஆனால் அவா (ஆசை) மற்றும் அழுக்காறு (பொறாமை) ஆகியவை வெளியில் தெரியாது. உள்ளேயிருந்தாலும், உள்ளிருந்தே உருக்குலைத்து விடக் கூடிய ஔவியம் (பொறாமை) வேண்டாமே!

(தொடரும்)

கிரிக்கெட் ஈஸி! நடிப்பு ஈஸி!

துப்பாக்கி ஏந்தி 'டுமீல்' பண்ணிக் கொண்டிருக்கிறவரை அடையாளம் தெரிகிறதா? கிரிக்கெட் வீரர் அஜய் ஜடேஜா தான்! நடிப்பு அனுபவம் எப்படி இருக்கிறது?

ஜடேஜா சொல்கிறார்: கிரிக்கெட் ஆடுவது போல சுலபமில்லை; கேரக்டர் பற்றி



கேட்கிறபோதும், ஸ்கிரிப்டைப் படிக்கிறபோதும், சுலபமாக நடித்து விடலாம், வசனம் பேசிவிடலாம் என்று தோன்றுகிறது. ஆனால் மேக் - அப் போட்டுக் கொண்டு கேமரா முன் நின்றால்தான் நடிப்பு எத்தனை கஷ்டமான சமாசாரம் என்று புரிகிறது. ஒன்பது மணிக்கு ஷூட்டிங்குக்குப் போனால், மாலை ஆறு மணிக்கு ஷூட்டிங் முடிகிறவரை வெளி உலகத்தையே சுத்தமாக நான் மறந்து விடுகிறேன்! ஒரு விதத்தில் பார்த்தால் இந்த பாட்டு, டான்ஸ், ஃபைட் எல்லாம் ரொம்ப ஜாலியாக இருக்கிறது.


ரசிகர்களுக்கும் அப்படியே இருக்க வேண்டுமே!

- பாரதி



ஜல்லு மல்லு

— கதிர்




ஏய்... இது என்ன சேனல்?
தெரியாத மாதிரி கேக்கற... ஃஎப் டீவி.
இப்ப நீ என்ன தெரிஞ்சுக்கணும்னு இதைப் பாக்கற?
காஸ்டியூம் டிசைன் பத்தித் தெரிஞ்சுக்குவேன்.
பத்து மீட்டருக்குத் துணி வாங்கி, கால் மீட்டர் மட்டும் உடம்புல வைச்சுக்கிட்டு, மீதி முக்கா மீட்டர் தரையில புரள விடுவாங்களே... அதைச் சொல்றியா?
உனக்கு ரசனையே இல்ல... அந்தக் காஸ்டியூமப் பாரு. எவ்வளவு அழகாயிருக்கு!
எங்க பாக்கறது! எனக்குத் தெரிஞ்சு இந்த ஸ்கிரீன்லயே அதிகமா துணி போட்டிருக்கறது நம்ம டீவிதான்.
நீயே பாத்துத் தொலை. நான் கிளம்பறேன்.
ஏய்... உன் கால்ல ஏதோ கார்பெட் மாட்டிக்கிட்டிருக்கு பாரு...
அது கார்பெட் இல்ல. என்னோட லேட்டஸ்ட் காஸ்டியூம்!
இந்த மாதிரி ஃபேஷன் ஷோவைத் தெருவுக்கு தெரு நடத்தினா தெருவாவது சுத்தமாகும்.
குட் ஐடியா!

வீட்டின் அழகு **கதவில்** தெரியும் !

Now Flat Buyers insist on

MAYURAM

TIMBER DOORS



because



Contact:

MAYURAM TIMBER & GENERAL TRADING CORPN.

H.O.: 83, G.S.T.Road, Chennai - 45. ☎: 2236 8297 / 2238 1281

Showroom: 13, Rameswaram Road, T.Nagar, Chennai - 600 017. ☎:2434 5207